# புதிய ஜனநாயகம்

ஜனவரி 2014
ரூ.10.00



## ஆம் ஆத்மி:
## சீரழிந்த நாடாளுமன்ற அரசியலைச் சிங்காரிக்க
# புதிய துடைப்பம்!

# தில்லைக் கோயில் தீட்சிதர் சொத்தா?

## ஜெ.அரசு – சு.சாமி – பார்ப்பனக் கும்பலின் கூட்டுச் சதியை முறியடிப்போம்!

**சி**தம்பரம் நடராசர் கோயிலில் உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி 2009 - இல் நியமிக்கப்பட்ட அறநிலையத் துறை நிர்வாக அதிகாரியை வெளியேற்றிவிட்டு, கோயிலைத் தமது முழு கட்டுப்பாட்டில் கொண்டு வரும் பொருட்டு, தீட்சிதர்கள் தாக்கல் செய்திருந்த மேல் முறையீட்டு மனு, நவம்பர் இறுதியில் உச்ச நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்தது. பயிற்சி முடித் தும் பணி நியமனம் கிடைக்காமல் தடுக்கப்பட்டிருக் கும் அர்ச்சக மாணவர்களின் வழக்கு சிதம்பரம் வழக்கை விடப் பல ஆண்டுகள் முந்தையது. அவ் வாறிருக்க 2010-இல் தீட்சிதர்கள் தாக்கல் செய்த மனு மட்டும் திடீரென்று விசாரணைக்கு வந்தது ஒரு சிதம் பர ரகசியம். சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலி தா கோரிய வண்ணமே அரசு வழக்குரைஞரையும் நீதிபதியையும் நியமிக்குமாறு, ''வரலாற்று சிறப்புமிக்க தோர்'' தீர்ப்பை வழங்கிய சவுகான், பாப்டே ஆகிய பெருந்தகைகள் இந்த வழக்கின் நீதி பதிகளாக ''அமைந்ததும்'' கூட, பகவானின் திருவி ளையாடல் என்றுதான் சொல்லவேண்டும்.

இந்த வழக்கில் சுப்பிரமணியசாமியும் ஒரு மனு தாரர். ''கோயிலைத் தீட்சிதர்கள் வசம் ஒப்படைப்பது மட்டுமின்றி, சிற்றம்பல மேடையில் பக்தர்கள் தேவாரம் பாடி வழிபடுவதையும் தடை செய்ய வேண்டும்'' என்பது அவரது கோரிக்கை. கோயிலுக்கு நிர்வாக அதிகாரியை நியமித்த தமிழக அரசுதான் தீட்சி தர்களுக்கு 'எதிர் மனுதாரர்'. அதாவது 2009-இல் நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டவுடன், போயஸ் தோட்டத்துக்குச் சென்று தீட்சிதர்கள் முறையீடு செய்தார்க ளே, அந்த அம்மாவின் அரசுதான் தற்போது தீட்சிதர்களின் பிரதிவாதி.



சிற்றம்பல மேடையையே ஒரு போராட்ட மேடையாக்கிய சிவனடியார் ஆறுமுகசாமி; அவரும் அவருக்குத் துணை நின்ற வழக்குரைஞர்களும் கோயிலுக்குள்ளேயே கைது செய்யப்பட்டார்கள்.

நவம்பர் 28 அன்று விசாரணை தொடங்கியதும் வாதியான தீட்சிதர்களின் வழக்குரைஞரும் வாதிடவில்லை. இந்த வழக்கில் இணைந்து கொண்டிருக்கும் சுப்பிரமணியசாமி தான் முதலில் பேசினார். உண்மை விவரங்களையோ, சட் டங்களையோ பேசாமல், ''நாத்திக கருணாநிதி அரசு, இந்து மதத்தை ஒழிப்பதற்காகவும், பார்ப்பன தீட்சிதர்களைப் பட்டினி போட்டுக் கொல்வதற்காகவும்தான் கோயிலை அற நிலையத்துறை வசம் ஒப்படைத்திருக்கிறது'' என்ற பொருள் படப் பேசினார். பார்ப்பனக் கொழுப்பு வழிந்த இந்த அக்கிர காரத்துத் திண்ணைப் பேச்சை, நீதிபதிகள் ஆமோதித்த வண்ணம் கேட்டனர். சு.சாமி பேசி முடித்த பின்னரும் தீட்சிதர் தரப்பு வழக்குரைஞர் பேசவில்லை.

நவம்பர் 30 அன்று ம.உ.பா மையத்தின் சார்பில் சிதம்பரத்தில் நடந்த ஆறுமுகசாமியின் உண்ணாநிலைப் போராட்டம்.



தமிழக அரசின் சார்பில், மூத்த வழக்குரைஞர் யாரும் நியமிக்கப்பட வில்லை என்பதுடன் அறநிலையத் துறையின் சார்பில் ஒரு அதிகாரி கூட உச்ச நீதிமன்றத்துக்கு வரவில்லை. ஒப்புக்கு ஒரு இளம் வழக்குரைஞர் பேசினார். அவர் பத்து நிமிடம் பேசிய வுடனேயே, ''கேஸ் கட்டைப் படித்து விட்டு வந்து பேசு'' என்று நீதிபதிகள் அதட்டவே அவர் உட்கார்ந்து விட் டார். தீட்சிதர்களை ஜெயிக்க வைத் து,

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

# ஆம் ஆத்மி:
## சீரழிந்த நாடாளுமன்ற அரசியலைச் சிங்காரிக்க
# புதிய துடைப்பம்!

டெல்லி சட்டமன்றத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி 28 தொகுதிகளில் வெற்றி பெற்று தற்போது ஆட்சியும் அமைத்துள்ளது. 2004 நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் ''இந்தியா ஒளிர்கிறது'' என்ற பா.ஜ.க. வின் முழக்கத்துக்கு எதிராகத் தாங்கள் முன்வைத்த ''ஆம் ஆத்மி'' (எளிய மனிதன்) என்ற முழக்கத்தைத் திருடி விட்டதாக கேஜ்ரிவாலைக் குற்றம் சாட்டியிருந்தார் திக்விஜய் சிங். தற்போது காங்கிரசு ஆட்சிக்கெதிரான மக்களின் அதிருப்தியை அறுவடை செய்யக் காத்திருந்த டெல்லி மாநில பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சியதிகாரக் கனவைத் திருடிவிட்டது ஆம் ஆத்மி கட்சி. அது மட்டுமின்றி, மோடியின் பிரம்மாண்டமான பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்ட டில்லியின் ஐந்து தொகுதிகளில் நான்கில், பாரதிய ஜனதா வேட்பாளரை மண்ணைக் கவ்வ வைத்து, ''மோடி அலை'' என்ற மோசடியின் முகத்திலும் மக்கள் காறி உமிழ்ந்துவிட்டார்கள். நாடாளுமன்றத் தேர்தலிலும் பல மாநிலங்களில் போட்டியிடவிருப்பதாக ஆம் ஆத்மி கட்சி அறிவித்திருப்பதால், காங்கிரசு ஆட்சிக்கு எதிரான அதிருப்தி வாக்குகளை மொத்தமாக அறுவடை செய்யக் காத்திருந்த பாரதிய ஜனதாவின் ஆசையிலும் மண் விழுந்திருக்கிறது.

கட்சி தொடங்கிய 14 மாதங்களில் பணபலமும் அதிகார பலமும் கொண்ட காங்கிரசு, பாரதிய ஜனதா என்ற இரு பெரும் கட்சிகளை எதிர்கொண்டு வெற்றி பெற்றிருப்பதாக ஊடகங்கள் அதிசயிக்கின்றன; இது ஓரளவிற்கு உண்மையே எனினும், இந்த வெற்றி விளங்கிக் கொள்ள முடியாத புதிர் அல்ல. ஆம் ஆத்மி கட்சிக்கான ஆரம்ப கட்ட விளம்பரத்தை ஆளும் வர்க்கங்கள்தான் முழுவீச்சில் செய்தன. லோக்பாலுக்காக அன்னா ஹசாரே நடத்திய உண்ணாவிரதம் எனும் கோமாளிக்கூத்து ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாகத் திட்டமிட்டே ஊடகங்களால் ஊதிப்பெருக்கவைக்கப்பட்டது.

மறுகாலனியாக்க கொள்கைகளின் விளைவாக, படிப்படியாகச் சட்டபூர்வமாக்கப்பட்டு வரும் கார்ப்பரேட் பகற்கொள்ளையை மறைப்பதற்காகவும், அதற்கெதிராகத் திரண்டுவரும் பொதுக்கருத்தையும் போராட்டங்களையும் மடை மாற்றுவதற்காகவும்தான் அன்னா ஹசாரே அவதார புருசனாக்கப்பட்டார். சிறந்த அரசாளுமை - ஊழல் ஒழிப்பு என்ற முழக்கத்தின் அடிப்படையிலான இயக்கங்களைப் பின்தங்கிய நாடுகளில் கட்டியமைக்கின்ற உலகவங்கியின் திட்டத்துக்கும், உலக வங்கியின் விருது பெற்ற ஹசாரேவுக்கும் இருக்கக்கூடிய தொடர்பு, புலனாய்வு செய்து கண்டுபிடிக்குமளவுக்குச் சூட்சுமமானதல்ல.

அன்னா ஹசாரேயின் தளபதியாக அன்று ஊடக வெளிச்சத்தில் மிதந்த அரவிந்த் கேஜ்ரிவால், ''வளர்ந்து வரும் புதிய தலைமை'' என்று போற்றப்பட்டு, ராக்பெல்லர் பவுன்டேசனால் வழங்கப்படும் மகசேசே விருதைப் பெற்றவர் என்பதும் இங்கே நினைவிற்கொள்ளத்தக்கது. ''நான் அன்னா ஹசாரே'' என்று நாடு முழுவதும் அன்று பிரபலப்படுத்தப்பட்ட முழக்கத்தையே ''நான் எளிய மனிதன்'' என்று மாற்றிக் கட்சி தொடங்கி விட்டார் கேஜ்ரிவால். ஆக, ஆம் ஆத்மி கட்சிக்கு மோடியை விஞ்சுமளவு விளம்பரம் செய்து, சாதகமான பொதுக்கருத்தை உருவாக்கும் பணியையும் ஆளும் வர்க்க ஊடகங்கள் ஏற்கெனவே செய்து கொடுத்து விட்டன என்பதையும் இந்த வெற்றியைக் கண்டு அதிசயிப்பவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

**தொகுதி: 29 இதழ்: 3**

**ஜனவரி 2014**

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
**puthiyajananayagam@gmail.com**

தொலைபேசி: 94446 32561




டெல்லி முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரவிந்த் கேஜ்ரிவால் (இடது) மற்றும் அவரது ''எளிமையான'' அமைச்சரவை சகாக்கள்.

டெல்லியில் மின்சாரம் மற்றும் தண்ணீரின் கட்டணம் பன்மடங்கு உயர்த்தப்பட்டதனால் தூண்டிவிடப்பட்ட மக்களின் கோபம் ஆம் ஆத்மி கட்சிக்குச் சாதகமாக அமைந்தது. இக்கட்டண உயர்வைத் ''தனியார்மயத்தின் விளைவு'' என்று அம்பலப்படுத்தாமல், ''ஊழல் மற்றும் நிர்வாகச் சீர்கேட்டின் விளைவு'' என்று சித்தரித்ததுடன், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மின் கட்டணம் பாதியாக குறைக்கப்படுமென்றும், ஒரு குடும்பத்துக்கு 667 லிட்டர் தண்ணீர் கட்டணமின்றி வழங்கப்படுமென்றும் ஆம் ஆத்மி கட்சி வாக்குறுதி அளித்திருந்தது. இது மட்டுமின்றி, மாதம் ரூ.4000, 5000 என விதிக்கப்பட்ட அடாத மின் கட்டத்தைக் கட்ட முடியாமல் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட வீடுகளுக்கு மீண்டும் மின் இணைப்பு வழங்குவது போன்ற போராட்டங்களை நடத்தியதும், குடிசைப்பகுதிகள் அகற்றப்படாது என்ற வாக்குறுதியும் ஏழை, நடுத்தர வர்க்க மக்களின் ஆதரவை ஆம் ஆத்மிக்குப் பெற்றுக் கொடுத்திருந்தன.

மக்களின் இத்தகைய பருண்மையான பிரச்சினைகளைப் பற்றி எதுவுமே பேசாமல், மேடைக்கு மேடை பஞ்ச்டயலாக்குகளைப் பொழிந்து கொண்டிருந்த மோடியின் பிரச்சாரம் தோல்வியுற்றதற்கும், ஆம் ஆத்மி வெற்றி பெற்றதற்குமான பின்புலம் இதுதான். குறிப்பாக, பெரும்பாலான குடிசைப்பகுதி மக்கள் தங்களது அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கூறிய காரணத்தினாலேயே ஆம் ஆத்மிக்கு வாக்களித்திருக்கின்றனர். ஆம் ஆத்மி கட்சியின் வெற்றிக்குக் காரணமாக அமைந்த சூழல் இதுதான்.

ஆம் ஆத்மி கட்சியின் ஆதரவுப் பின்புலம் கலவையானது. ஐ.ஐ.டி. பட்டதாரிகள், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் ஐ.டி. நிறுவனங்களின் உயர் பதவி வகித்தவர்கள், ஐ.ஏ.எஸ். ஆக முயற்சிப்பவர்கள், பலவிதமான தன்னார்வக் குழுக்களை இயக்குபவர்கள் - என இக்கட்சியின் முன்னணியாளர்கள் அனைவரும் உயர் நடுத்தர வர்க்கத்தினர் என்பதுடன், இவர்களில் பலர் அன்னா ஹசாரே உண்ணாவிரதத்தால் ''அரசியல் உணர்வு'' பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தனியார்மய - தாராளமயக் கொள்கைகளை அரசியல்வாதிகள், அதிகாரிகளின் ஊழலின்றி முறையாக அமல்படுத்துவதுதான் நாட்டு முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என்று கருதும் உயர் நடுத்தர வர்க்கம், மின் கட்டண, தண்ணீர் கட்டண உயர்வு உள்ளிட்ட பாதிப்புகளால் தனியார்மயக் கொள்கைகளின் மீதும், ஊழல் அரசியல்வாதிகளின் மீதும் வெறுப்பு கொண்ட நடுத்தர வர்க்கம், தனியார்மயக் கொள்கைகளால் கல்வி, மருத்துவ வசதியிழந்து, விலைவாசி உயர்வால் வாழ்க்கைத் தரம் மென்மேலும் வீழ்ச்சி அடைந்து அன்றாடத் தேவைகளுக்கே அல்லலப்பட்டுக் கொண்டிருக்கும் அடிப்படை வர்க்கம் - என்று முரண்பட்ட கருத்துகளையும் நலன்களையும் கொண்ட வர்க்கங்கள் ஆம் ஆத்மியை ஆதரித்திருக்கிறார்கள்.

மேற்கண்ட பிரச்சினைகள் குறித்த ஆம் ஆத்மி கட்சியின் நிலை என்ன என்பதை கேஜ்ரிவால் இப்படிக் கூறு

மின் கட்டண உயர்வைக் கண்டித்து அரவிந்த் கேஜ்ரிவால் தனது ஆதரவாளர்களோடு டெல்லி-ஜந்தர் மந்தர் பகுதியில் நடத்திய ஆர்ப்பாட்டம் (இடது); மின்வாரியத்தால் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீண்டும் இணைக்கும் கேஜ்ரிவாலின் 'துணிகர' நடவடிக்கை. (கோப்புப் படங்கள்)



கிறார்: ''நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். முதலாவதாக நாங்கள் எந்த சித்தாந்தத்துக்கும் தாலி கட்டிக் கொள்ளவில்லை. இரண்டாவதாக, தொழில்துறையில் அரசாங்கத்துக்கு வேலை இல்லை. கார்ப்பரேட் துறை நாட்டில் மிகப்பெரும் பாத்திரத்தை ஆற்ற வேண்டும். சில பேரைத் தவிர, பெரும்பாலான தொழிலதிபர்கள் ஊழலுக்குப் பலியானவர்கள்தான். அவர்கள் ஊழலை ஊக்குவிப்பவர்கள் அல்ல'' என்று ''ஓபன் மாகசினுக்கு'' அளித்துள்ள பேட்டியில் கூறுகிறார் கேஜ்ரிவால். ஊழலின் ஊற்றுக்கண்ணான கார்ப்பரேட் முதலாளிகளை, ''ஊழலுக்குப் பலியானவர்கள்'' என்று கூறுவதிலிருந்தே, கேஜ்ரிவால் எந்த சித்தாந்தத்துக்குத் தாலி கட்டிக் கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகிவிடுகிறது.

> “டாடா, அம்பானி போன்றோருடன் போடப்பட்டுள்ள ஒப்பந்தங்களை ரத்து செய்தால்தான் குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட எதையும் இலவசமாக மக்களுக்கு வழங்க முடியும். ஆம் ஆத்மி அரசு அவ்வாறு செய்யும் என்று கற்பனை செய்துகொண்டால், ஆளும் வர்க்கம், அதிகார வர்க்கம், நீதித்துறை, சர்வதேச நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்தையும் அது எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.”

இதே ஆம் ஆத்மி கட்சியின் இன்னொரு தலைவரான பிரசாந்த் பூஷண், ''நாட்டின் அதிகார அமைப்பு முழுவதையும் கட்டுப்படுத்துகின்ற ஒரு கார்ப்பரேட் மாஃபியா உருவாகியிருப்பதுதான் ஊழல் என்பதன் கொடிய விளைவு'' என்று கேஜ்ரிவாலின் கூற்றுக்கு நேர்எதிராக கருத்துரைத்திருக்கிறார்.

''நாங்கள் வலதுசாரிக்கும் இடதுசாரிக்கும் நடுவிலான கொள்கையை உடையவர்கள் அல்ல. வலது, இடது என்ற இந்த இருமை எதிர்வைக் கடந்து செல்ல விரும்புகிறவர்கள்; இருபதாம் நூற்றாண்டின் புரட்சிகர சித்தாந்தங்களின் மீது, குறிப்பாக இடதுசாரி சித்தாந்தத்தின் மீது ஆழ்ந்த ஐயம் கொண்டவர்கள். எங்களது விழுமியம் என்பது கடைசி மனிதன் மீதும் நாங்கள் கொண்டிருக்கும் அக்கறை. அந்த விழுமியத்தை நான் விட்டுக் கொடுக்க முடியாது. இதேபோல பொதுத்துறையையும், மானியங்களையும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்று ஒருவர் சொல்வாரேயானால் அவர் இலட்சியத்தை வழிமுறையோடு போட்டுக் குழப்புகிறார் என்று பொருள். மேதா பட்கர், அருணா ராய் உள்ளிட்டுப் பொதுவாழ்வில் உள்ள சிறந்தவர்கள் அனைவரையும் சேர்த்த ஒரு கூட்டணியாக ஆம் ஆத்மி கட்சியை நாங்கள் மாற்ற விரும்புகிறோம்'' என்று கொள்கை விளக்கமளிக்கிறார், ஆம் ஆத்மி கட்சியின் முக்கியத் தலைவரான யோகேந்திர யாதவ்.

எளிய மனிதனின் நலனைத் தனியார்மயக் கொள்கையின் கீழ் பெற முடியும் என்ற கேஜ்ரிவாலின் கருத்தைத்தான் தனது வார்த்தை ஜாலங்கள் மூலம் மழுப்பிச் சொல்கிறார் யாதவ். எந்தத் தனியார்மயக் கொள்கைகள் டில்லி உள்ளிட்ட பல மாநிலங்களிலும் தண்ணீர் கட்டணம் மற்றும் மின் கட்டண உயர்வு உள்ளிட்ட எல்லா வகையான கொள்ளைகளுக்கும் வழிவகுத்திருக்கிறதோ, அந்தத் தனியார்மயம் எளிய மனிதனின் நலனைக் காக்க முடியும் என்கிறது ஆம் ஆத்மி கட்சி.

அது மட்டுமல்ல, பொதுச்சொத்துக்களைப் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தரகு முதலாளிகளுக்கும் சொந்தமாக்குவதும், அவர்களது கொள்ளைக்கு நாட்டையே திறந்துவிடுவதும் சட்டபூர்மாகவே நிறைவேறிக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், மறுகாலனியாக்க அடிமைத்தனமே சட்டபூர்வமாக்கப்பட்டு, அதற்கெதிராகக் குரல் கொடுப்பது தேசத்துரோக நடவடிக்கை என்று தண்டிக்கப்படும் இக்காலத்தில், நிலப்பறிப்பும், வாழ்வுரிமைப்பறிப்பும், தொழிலாளி வர்க்கத்தின் உரிமை பறிப்பும், கல்வி-மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் முதலாளிகள் அடிக்கும் கொள்ளையும் தலைவிரித்து ஆடும் இந்தக் காலத்தில், இவை எதைப் பற்றியும் பேசாமல், ஊழல் ஒழிப்பு மட்டுமே முக்கியப் பிரச்சினையென்று கூறுகிறது ஆம் ஆத்மி கட்சி.

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த அரவிந்த் கேஜ்ரிவால், அன்னா ஹசாரே உள்ளிட்டோர் ஊழலைத் தவிர பிற சமூகப் பிரச்சினைகளைக் கண்டு கொள்வதில்லை என அம்பலப்படுத்தும் கேலிச்சித்திரம். (கோப்புப் படம்)



அதுமட்டுமல்ல, ஏற்கெனவே நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் வெட்டிச் சுருக்கப்பட்டு, ஒழுங்குமுறை ஆணையங்கள் என்ற பெயரில் அதிகார வர்க்கமும், தரகு முதலாளி வர்க்கமும் அரசு அதிகாரத்தை நேரடியாகவே கைப்பற்றிக் கொண்டு, வேண்டியவாறு கொள்கைகளை வகுத்துக் கொள்ளும் இன்றைய சூழலில், அவற்றைப் பற்றிக் கருத்து ஏதும் சொல்லாமல் குடியிருப்போர் கமிட்டிகளுக்கு அதிகாரம் வழங்குதல், அதிகாரப் பரவலாக்கம் என்ற பெயர்களில் மையமான பிரச்சினையை ஆம் ஆத்மி வேண்டுமென்றே திசை திருப்புகிறது.

காஷ்மீர் பிரச்சினை, தலித் மக்கள் மீதான அடக்குமுறை, இந்து மதவெறி, பாக்.எதிர்ப்பு அரசியல் என்பன போன்று, ஒரு கொள்கை நிலை எடுத்துத் தெளிவாகப் பேசவேண்டிய பிரச்சினைகளில் கருத்தே கூறாமல் மவுனம் சாதிக்கிறார் கேஜ்ரிவால். மோடியைப் பற்றிக் கருத்துகேட்டால், ''தனிநபர்களைப் பற்றிக் கருத்து கூறுவதில்லை'' என்றொரு அபத்தமான பதிலைக் கூறி நழுவுகிறார். அதே நேரத்தில் தனது கூட்டங்களில் ''வந்தேமாதரம், பாரத் மாதா கி ஜெய்'' என்று முழங்குகிறார். ஆம் ஆத்மிக்கு வாக்களித்தவர்களில் பாதிப் பேர்பிரதமர்பதவிக்கு மோடியை ஆதரிக்கிறார்கள் என்றும், பாக்.எதிர்ப்பு தேசவெறியை வெளிப்படுத்துகிறார்கள் என்றும் டில்லியில் நடத்தப்பட்ட ஒரு மாதிரி சர்வே கூறுகிறது.




> “மறுகாலனியாக்க அடிமைத்தனமே சட்டபூர்வமாக்கப்பட்டு, நிலப்பறிப்பும், வாழ்வுரிமைப் பறிப்பும், தொழிலாளி வர்க்கத்தின் உரிமை பறிப்பும், கல்வி–மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் முதலாளிகள் அடிக்கும் கொள்ளையும் தலைவிரித்து ஆடும் இந்தக் காலத்தில், இவை எதைப் பற்றியும் பேசாமல், ஊழல் ஒழிப்பு மட்டுமே முக்கியப் பிரச்சினையென்று கூறுகிறது ஆம் ஆத்மி கட்சி.”

கேஜ்ரிவாலுடைய மவுனத்தின் பொருள் என்ன? மோதிக் கொள்ளும் சித்தாந்தங்கள், வர்க்க நலன்கள் இவற்றில் எந்தக் கருத்தும் கூறாமல் மவுனம் சாதிப்பவர்களும், தனக்கு ஒரு கொள்கை கிடையாது என்று கூறும் நபர்களும் ஆபத்தானவர்கள். டெல்லியில் காங்கிரசின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கலாமா, வேண்டாமா என்ற கேள்வி எழுந்தபோது அந்த கேள்விக்கு விடை காண வேண்டிய ஆம் ஆத்மி கட்சி, தனது முடிவுக்கான தார்மீகப் பொறுப்பிலிருந்து மிகவும் தந்திரமாக நழுவிக் கொண்டது. மக்களின் கருத்தைக் கேட்டு முடிவெடுப்பதாகக் கூறி, பரவலாக ஊர்க்கூட்டங்களை நடத்திக் கருத்துக் கேட்டு, தனது இந்தச்செயலையே மாபெரும் ஜனநாயகப் பூர்வமான நடவடிக்கையாகவும் காட்டிக் கொண்டது.

பதவியேற்றவுடன் குடிதண்ணீர், மின்சாரம் தொடர்பான வாக்குறுதிகளை நிறைவேற்றியிருப்பதுடன், நட்டக்கணக்கு காட்டிவரும் டாடா மற்றும் அம்பானிக்குச் சொந்தமான மின் விநியோக நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யுமாறு, கணக்கு-தணிக்கை அதிகாரியை ஆம் ஆத்மி அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. இதனையொட்டி ஆளும் வர்க்க ஊடகங்கள் கொதிப்படைந்து சாமியாடுகின்றன. இலவசக் குடிநீராகட்டும், மின்கட்டணக் குறைப்பாகட்டும் அவற்றுக்கான நிதியை அரசு தனது வரி வருவாயிலிருந்துதான் கொடுக்க வேண்டுமென்பதால் அரசின் நிதிச்சுமை நிச்சயம் அதிகரிக்கும்.

எல்லோருக்கும் நல்லவராகவும், எல்லோருக்கும் எல்லாமாகவும் இருக்க ஆம் ஆத்மி அரசு விரும்புவதென்னவோ உண்மைதான். ஆனால், ஒரு வர்க்கத்திடமிருந்து எடுக்காமல் இன்னொரு வர்க்கத்துக்குக் கொடுக்க முடியாது. டாடா, அம்பானி போன்றோருடன் போடப்பட்டுள்ள ஒப்பந்தங்களை ரத்து செய்தால்தான் குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட எதையும் இலவசமாக மக்களுக்கு வழங்க முடியும். அதைச் செய்வதற்கான முயற்சியில் கேஜ்ரிவாலின் அரசு இறங்குமா? அவ்வாறு இறங்கும் என்று கற்பனை செய்துகொண்டால், ஆளும் வர்க்கம், அதிகார வர்க்கம், நீதித்துறை, சர்வதேச நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்தையும் அது எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த அரசமைப்பையும் நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் சீரழிக்கும் ஊழலை மட்டும் ஒழித்துவிட்டால், சிறந்த அரசாளுமையை வழங்கிவிடலாம் என்று அவர் பரப்பி வரும் புனைகதையும், கேஜ்ரிவாலின் அரசும் அவர் கண் முன்னாலேயே நொறுங்கி விழும். முதற் பெரும் ஊழலே இந்த அரசமைப்பும் மறுகாலனியாக்க கொள்கையும்தான் என்ற உண்மை அம்பலமாகும். •

# ஏற்காடு 'புரட்சி'!

**ஆபாச நடனம், சாராயம், கறிவிருந்து, பணத்துடன் தி.மு.க.வின் திருமங்கலம் பார்முலாவை உச்சத்துக்குக் கொண்டு சென்றுள்ளது பாசிச ஜெயா கும்பல்.**

கடந்த டிசம்பர் 4-ஆம் தேதியன்று நடந்த ஏற்காடு தொகுதிக்கான இடைத் தேர்தலில் எதிர்பார்த்தபடியே ஆளும் அ.தி.மு.க. வெற்றி பெற்றிருக்கிறது. பணத் தால் அடிப்பது, எதையும் விலை பேசுவது, எதிரியின் நிழலுக்கும் எலும்புத் துண்டை வீசுவது என்று தேர்தல் ஆணையக அதிகாரி கள் முன்னிலையிலேயே பாசிச ஜெயா பகிரங்கமாக ஏலத்தில் எடுத்து இந்த வெற்றியைச் சாதித்துள்ளார்.

வாக்கு வித்தியாசத்தை முன்னைக் காட்டிலும் அதிகப்படுத்தி தி.மு.க.வை டெபாசிட் இழக்கச் செய்வது, இதை முன்னுதாரணமாகக் காட்டி 2014 நாடாளு மன்றத் தேர்தலில் தமிழகம் மற்றும் புதுச் சேரியில் 40 தொகுதிகளையும் கைப் பற்றுவது என்பதே அவரது நோக்கமாக இருந்தது. இதற்காகவே, இதுவரை கண்டிராத வகையில் தனது அமைச்சரவை யிலுள்ள 31 அமைச்சர்கள் உள்ளிட்டு மொத்தம் 61 பேரை தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்களாக நியமித்தார். முன்னாள் - இந்நாள் அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள், செயலாளர்கள், தொண்டர்கள் என ஒரு பெரும்படையைக் கொண்டு தொகுதியை முகாமிட்டு, கோடிக்கணக்கில் பணத்தை வாரியிறைத்து வாக்காளர்களை விலை பேசி இந்த வெற்றியைச் சாதித்துள்ளது ஜெயா கும்பல். ஆபாசக் குத்தாட்டங்கள், பணம், சாராயத்துடன் பிரியாணி - என தி.மு.க.வின் திருமங்கலம் பார்முலாவை ஜெயா கும்பல் உச்சத்துக்குக் கொண்டு சென்றதால், எந்த இடைத்தேர்தலிலும் இல்லாத வகையில் ஏற்காடு தொகுதியில் இம்முறை 89.23 சதவீத வாக்குகள் பதி வாகின.

போதாக்குறைக்கு தேர்தல் ஆணை யமும், ஆணையர் பிரவீன் குமாரும் ஜெயா கும்பலின் அராஜக ஆட்டங்களுக்குப் பக்க மேளம் வாசித்தனர். ஏற்காடு தொகுதியின் தேசிய நெடுஞ்சாலையில் வாகன சோதனை என்ற பெயரில் பொதுமக்களின் பணத்தைப் பறிமுதல் செய்த தேர்தல் அதிகாரிகள், அமைச்சர்கள் செல்லும் கிராமச் சாலை



பாசிச ஜெயா கும்பலின் பணநாயகத்துக்குப் பக்கமேளம்: அ.தி.மு.க.வினர் ஏற்காடு தொகுதியின் கிராமங்களில் பணத்தை வாரியிறைத்து வாக்காளர்களை விலைபேசிக் கொண்டிருந்தபோது, தேசிய நெடுஞ்சாலையில் வாகனச் சோதனை என்ற பெயரில் பொதுமக்களிடம் பணத்தைப் பறிமுதல் செய்து சூரத்தனம் காட்டும் தேர்தல் ஆணையம்.

களில் சோதனை போடவில்லை. ஒவ்வொரு வாக்காளருக்கும் ஆளும் கட்சியினர் தலா ரூ. 2,000 வழங்கியதை தொலைக்காட்சி கள் அம்பலப்படுத்தியபோதிலும், தேர்தல் ஆணையம் எந்த நடவடிக் கையும் எடுக்கவில்லை. அக்டோபர் 5-ஆம் தேதி முதல் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னரும், ஏற்காடு தொகுதிக்குட்பட்ட பல கிராமங்களில் பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள், லேப்டாப் போன்றவை வழங் கப்பட்டு, அ.தி.மு.க. அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்டப் பணி கள் திடீரென நடத்தப்பட்டன.

அதிகாரத்திலுள்ள முதல்வர் வாக்குறுதிகளை வழங்கக்கூடாது என்று தேர்தல் நடத்தை விதிகள் இருந்த போதிலும் ஏராளமான பல் வேறு சிறப்புத் திட்டங்களுக்கான வாக்குறுதிகளை ஜெயலலிதா அள்ளி வீசினார். இதுபற்றி தி.மு.க.வினர் புகார் கொடுத்ததும், இப் புகாருக்கு விளக்கம் அளிக்குமாறு தேர்தல் ஆணையம் ஜெயலலிதா விடம் கோரியது. ஆனால் அவரோ, தான் எந்த விதிமுறையையும் மீறவில்லை என்று திமிராகப் பதிலளித்தார். இந்த விளக்கத்தை ஏற்க மறுப்பதாகக் கூறிய தேர்தல் ஆணையம், பிரச்சாரத்தின்போது வாக் காளர்களிடம் புதிய திட்டங்கள் பற்றி பேசக்கூடாது, எச்சரிக்கையுடன் பேச வேண்டும் என்று அறிவுரைதான் வழங்கியதே தவிர, எந்த நட வடிக்கையும் எடுக்கவில்லை.

விலைவாசி உயர்வு, மின்வெட்டு என மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் நீடித்துவரும் நிலையில், பணத்தையும் பரிசுப் பொருட் களையும் கொடுத்து வாக்குகளை விலைக்கு வாங்குவதை உச்சத்துக்குக் கொண்டு சென்று இந்தத் தேர்தல் வெற்றியைச் சாதித் துள்ள ஜெயலலிதா, இதனை அ.தி.மு.க. அரசின் நலத்திட்ட பணிகளை மக்கள் அங்கீகரித்துள்ளதற்குக் கிடைத்த வெற்றி என்று திமிராகப் பறைசாற்றிக் கொள்கிறார். ஜனநாயகம் என்றால் அது ஓட்டுப்போடுவதற்கானது என்பதாகப் பயிற்றுவிக்கப்பட்டு, அரசியலற்ற பிழைப்புவாதத்திலும் ஊழலுக்கு உடந்தையாகவும் உழைக்கும் மக்கள் மிகக் கேவலமான முறையில் சீரழிக்கப்பட்டிருப் பதுதான் ஜெயலலிதாவின் 'ஏற்காடு புரட்சி'!

● தனபால்

# ராஜீவ் கொலைவழக்கு கைதிகள் அனைவரையும் விடுதலை செய்! விசாரணை அதிகாரிகளைச் சிறையிலடை!!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளனது ''வாக்குமூலம்'' பொய் என்று அந்த வாக்குமூலத்தைப் பதிவு செய்த மையப் புலனாய்வுத் துறையின்(சி.பி.ஐ.) ஓய்வு பெற்ற எஸ்.பி. தியாகராசன், ''உயிர் வலி'' என்ற ஆவணப் படத்திலும் பின்னர் பல பேட்டிகளிலும் கூறியிருக்கிறார்.

''சிவராசனுக்கு பாட்டரிகள் வாங்கித் தந்தேன். ஆனால் அந்த பாட்டரிகளை எதற்காக வாங்கி வரச் சொன்னார் என்று எனக்குத் தெரியாது'' என பேரறிவாளன் தனது வாக்குமூலத்தில் கூறியதாகவும், அதை அப்படியே பதிவு செய்தால், வழக்கிற்குப் பாதகமாகப் போய்விடும் என்பதால், ''எதற்காக வாங்கி வரச் சொன்னார் என்று தெரியாது'' என்ற பகுதியை நீக்கி விட்டு, ''பாட்டரி வாங்கித் தந்தேன்'' என்பதை மட்டும் பதிவு செய்ததாகவும் அவர் கூறுகிறார். தனது இந்த ''அறங்கொன்ற'' செயல், பேரறிவாளனின் உயிரைப் பறிக்கப் போகிறது என்பதால், மனச்சான்றின் உறுத்தலால் தற்போது உண்மையை வெளியிடுவதாகவும் சொல்லியிருக்கிறார் தியாகராசன்.

கிரிமினல்களுக்கும் ஊரைக் கொள்ளையடித்த அரசியல்வாதிகளுக்கும் வயதான காலத்தில் சொல்லி வைத்தாற்போல மனச்சான்று விழித்துக்கொள்வதும், அவர்கள் வள்ளல்களாகவும், ஆன்மீகவாதிகளாகவும் புதுப்பிறவி எடுத்து, சமூக கௌரவத்தையும் மன ஆறுதலையும் தேடிக்கொள்வதும் புதிய விடயங்கள் அல்ல. கொடூரமாகச் சித்திரவதை செய்வதும், பொய்வழக்கிற்குத் தேவைப்படும் வாக்குமூலங்களை வரவழைப்பதும் போலீசார் வழக்கமாகச் செய்கின்ற வேலைதான் என்பதை தியாகராசனும் ஒப்புக்கொள்கிறார். ஆனால், தனது நடவடிக்கை காரணமாக நீதிப்பிழை ஏற்பட்டு, ஒரு உயிர் அநியாயமாகப் போகப்போகிறது என்பதால் உண்மையை வெளியிடுவதாகவும் கூறியிருக்கிறார்.

தியாகராசன் வெளியிட்டிருக்கும் இந்த உண்மை சி.பி.ஐ.யின் முன்னாள் இயக்குனர் கார்த்திகேயனை இம்மியளவும் அசைக்கவில்லை. ''கென்னடி கொலை வழக்கு பற்றிக்கூட புதிய தகவல்கள் வெளிவருகின்றன. அதற்காக அவ்வழக்கை மீண்டும் விசாரிக்க முடியுமா?'' என்று அவர் சீறுகிறார். முன்னாள் சி.பி.ஐ. அதிகாரி ரகோத்தமனும் ''நாங்கள் அவ்வாறுதான் செய்தோம்; தற்போது அதற்கென்ன?'' என்கிற தோரணையில் திமிராகப் பேசியிருக்கிறார். இவர்கள் இருவரும் சமீபத்தில் தான் ''ஞானஸ்நானம் பெற்று'' மரண தண்டனை எதிர்ப்பாளர்களாக மாறியவர்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.



போலீசு மற்றும் நீதிமன்ற மோசடிகளால் தூக்கு மேடையில் நிறுத்தப்பட்டுள்ள பேரறிவாளன்

பொய் வழக்குப் போடுவதும், குற்றம் சாட்டப்பட்டவர்களைச் சித்திரவதை செய்து வாக்குமூலம் வாங்குவதும், பொய் சாட்சிகளைத் தயார் செய்வதும், அதன் அடிப்படையில் அப்பாவிகளைச் சிறைக்கு அனுப்புவதும் போலீசாரின் அன்றாட நடவடிக்கைகள் என்பது ஊரறிந்த உண்மை. போலீசாரிடம் கொடுத்ததாகச் சொல்லப்படும் வாக்குமூலங்களை ''கட்டாயப்படுத்திப் பெறப்பட்டவை'' என்று கூறி நிராகரிக்கும் உரிமை குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு உண்டு.

இந்த உரிமையையே ரத்து செய்த ''தடா'' சட்டத்தின் கீழ்தான் ராஜீவ் கொலை வழக்கு விசாரிக்கப்பட்டது. அதனால்தான் தியாகராசன் எழுதிக் கொண்டதெல்லாம் பேரறிவாளனின் வாக்குமூலமாகச் சட்டரீதியாகவே எடுத்துக் கொள்ளப்பட்டது. பின்னாளில் ''தடா'' சட்டமே அரசியல் சட்டத்துக்கு எதிரானது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. இருப்பினும், செல்லத்தகாத அந்த சட்டத்தின் கீழ்தான் வழக்கு விசாரணை நடந்து, அதில் பெறப்பட்ட வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டுதான் தீர்ப்பும் வழங்கப்பட்டது.

பேரறிவாளனின் வாக்குமூலத்தை உள்நோக்கத்தோடு வெட்டிச் சுருக்கியதை ஒப்புக்கொண்டுள்ள ஓய்வுபெற்ற சி.பி.ஐ. எஸ்.பி. தியாகராசன்.



அதுமட்டுமல்ல, ''ராஜீவ் கொலை என்பது ஒரு பயங்கரவாத நடவடிக்கை அல்ல'' என்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறிய பின்னரும், பயங்கரவாதத் தடைச் சட்டமான ''தடா''வின் கீழ் விசாரிக்கப்பட்ட இந்த வழக்கில், வழங்கப்பட்டிருக்கும் தண்டனைகள் சட்டரீதியில் செல்லத்தக்கதாகவே கருதப்படுகின்றன. தற்போதைய தியாகராசனின் ''பரபரப்பு'' பேட்டியைக் காட்டிலும் இவையெல்லாம் முக்கியத்துவம் வாய்ந்தவை.

மேலும், பேட்டியளித்திருக்கும் தியாகராசன் தனது கூற்றைப் பிரமாண வாக்குமூலமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதாவது, தான் இழைத்த அநீதிக்குக் கழுவாயாக பேரறிவாளனைச் சட்டரீதியாகக் குற்றத்திலிருந்து விடுவிக்கும் பொறுப்பை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை; அதேபோல, பொய் வாக்குமூலம் தயாரித்த தனது குற்றத்துக்குரிய தண்டனையை அனுபவிக்க அவர் தயாராக இருப்பதாகவும் தெரியவில்லை. இருப்பினும் அவரது இந்தக் கூற்று, ராஜீவ் கொலை வழக்கில் நடத்தப்பட்ட புலன் விசாரணை நாடகத்தை அம்பலப்படுத்துவது என்ற அளவில் பெரிதும் பயன் பட்டிருக்கிறது.

தியாகராசன் போன்றோருக்கு காலம் கடந்தாவது உண்மையை வெளியிடும் தைரியத்தை வழங்கியிருப்பது அவரது குற்றவுணர்ச்சி மட்டுமல்ல; மூவர் தூக்கிற்கு எதிராகத் தமிழகத்தில் நடைபெற்ற போராட்டமும், தமிழகத்தில் பரவலாக உருவாகியிருக்கும் பொதுக்கருத்தும்தான் உண்மையைப் பேசுவதற்கான புறத்தூண்டுதலை அவருக்குத் தந்திருக்கின்றன. அத்தகையதொரு புறச்சூழல் உருவாக்கப்படாமல், பாரதிய ஜனதா மற்றும் காங்கிரசின் பாக். எதிர்ப்பு தேசியவெறி அரசியல் அரங்கில் கோலோச்சியதன் காரணமாகத்தான் அப்சல் குரு தூக்கிலிடப்பட்டார். நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கின் உண்மைகள் நிரந்தரமாகப் புதைக்கப்பட்டு விட்டன.

பேரறிவாளனுக்கு விதிக்கப்பட்டது ஒருவேளை மரண தண்டனையாக இல்லாமலிருந்தால், தியாகராசனின் மனச்சான்று விழித்திருக்காது. இதனை அவரது கூற்றிலிருந்தே புரிந்து கொள்ளலாம். அது ஆயுள் தண்டனையாக இருந்தாலும் அநீதி அநீதிதான்.

நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள், அவ்வாறு தண்டிக்கப்படாமல் காப்பாற்றப்பட வேண்டும் என்பதுடன் இப்பிரச்சினை முடிந்து விடுவதில்லை. சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுபவர்கள் என்ற பெயரில், அரசு அதிகாரத்தையும் சமூக அங்கீகாரத்தையும் கேடாகப் பயன்படுத்தி, பொய் வழக்குகள், பொய் சாட்சிகள், போலி மோதல் கொலைகள் - என்று எல்லா கிரிமினல் வேலைகளையும் அரங்கேற்றும் போலீசு அதிகாரிகள், அதிகார வர்க்கத்தினர் மற்றும் ஓட்டுப் பொறுக்கிகளையும் தண்டிப்பதை நோக்கி நமது போராட்டங்கள் முன்னேறவேண்டும்.

● கதிர்

# “தில்லை தீண்டாமைச் சுவரைத் தகர்த்தெறிவோம்!”

## – வெண்மணி நினைவு நாளில் புரட்சிகர அமைப்புகள் நடத்திய முற்றுகைப் போராட்டம்

‘‘தில்லைக் கோயிலில் நமது முப்பாட்டன் நந்தனார் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்து தீட்சிதர்கள் எழுப்பியிருக்கும் தீண்டாமைச் சுவரைத் தகர்த்தெறிவோம்!’’ என்ற முழக்கத்தின் கீழ் வெண்மணி நினைவுநாளான டிசம்பர் 25-ஆம் தேதியன்று கடலூர், விழுப்புரம், நாகை மாவட்டங்களின் வி.வி.மு., பு.மா.இ.மு., மற்றும் புதுச்சேரி பு.ஜ.தொ.மு. தோழர்கள் இணைந்து முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

‘‘தில்லைச் சிற்றம்பல மேடையில் தமிழ் முழங்கினோம்; தீட்சிதப் பார்ப்பனர்களிடமிருந்து கோவிலை மீட்டோம்; தீட்சிதர்களால் அகற்றப்பட்ட நந்தனார் சிலையை மீண்டும் நிறுவுவோம்! தெற்கு வாயில் தீண்டாமைச் சுவரை அகற்றுவோம், வாரீர்!’’ என்று முழங்கிய சுவரொட்டிகள் கடலூர், விழுப்புரம், நாகை மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி முழுவதும் இப்போராட்டத்தை அறிவித்தன.



பார்ப்பன சாதிவெறி பிடித்த தீட்சிதர்கள் நந்தனார் நுழைந்த தெற்குவாயிலை அடைத்துத் தீண்டாமைச் சுவரொன்றை எழுப்பியிருப்பது மட்டுமின்றி, கோயில் கருவறைக்கு எதிரே இருந்த நந்தனார் சிலையையும் அகற்றியிருக்கின்றனர். கையில் கடப்பாரை தோளில் மண்வெட்டியுடன் வடிக்கப்பட்டிருந்த அச்சிலைக்கு அருகில் அமர்ந்துதான் கோபால கிருஷ்ண பாரதியார் நந்தனார் சரித்திர கீர்த்தனைகளை எழுதினார் என்று உ.வே.சா. பதிவு செய்திருக்கிறார். இவ்வுண்மைகளைப் பரவலாக மக்களிடையே பிரச்சாரம் செய்து அதன் தொடர்ச்சியாக இப்போராட்டம் நடத்தப்பட்டது.

கோயிலின் தெற்கு வாயில் பகுதியையே நெருங்க விடக்கூடாது என்ற திட்டத்துடன் பெரும் போலீசு படை குவிக்கப்பட்டிருந்த போதிலும், போலீசின் கண்காணிப்புகளை மீறி பல்வேறு திசைகளிலிருந்தும் அணி அணியாக கொடிகளுடன் முழக்கமிட்டு வந்த தோழர்களைத் தெற்கு வாயில் எதிரில் மறித்துக் கைது செய்தது போலீசு. ஒரு நிமிடம்கூட ஆர்ப்பாட்டமோ முற்றுகையோ நடத்தவிடாமல் கைது செய்துவிடுவது என்ற போலீசின் நோக்கம் நிறைவேறவில்லை.

சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சார்ந்த விவசாயிகள், சபரிமலைக்கு மாலை போட்டவர்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் முட்லூர், கடலூர் அரசுக் கல்லூரி மாணவர்கள் எனப் பல தரப்பினரும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டு கைதாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோயிலைத் தீட்சிதர்களிடமே ஒப்படைப்பதற்கான சதியில் ஜெயலலிதா அரசு உச்ச நீதிமன்றத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பின்புலத்தில், மக்கள் மன்றத்தில் நடத்தப்பட்டிருக்கும் இந்தப் போராட்டம் பெரிதும் முக்கியத்துவம் பெறுகிறது.

– பு.ஜ.செய்தியாளர்கள்.

# பொதுநலன் - தனியார்மயத் திருடர்களின் முகமூடி!

**கொ**ச்சியிலிருந்து பெங்களூருவிற்கும், அங்கிருந்து மங்களூருவிற்கும் குழாய் மூலம் எரிவாயுவைக் கொண்டு செல்லும் திட்டத்தை கெயில் நிறுவனம் (இந்திய எரிவாயுக் கழகம்) 2010-ஆம் ஆண்டு செயல்படுத்தத் தொடங்கியது. தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 7 மாவட்டங்களிலுள்ள 136 கிராமங்களைச் சேர்ந்த விவசாய நிலங்களின் வழியே சுமார் 310 கி.மீ. தூரத்துக்கு எரிவாயுக் குழாய்களைப் பதிக்கும் இத்திட்டத்தினால், கோவை மாவட்டத்தில் மட்டும் 50,000 ஏக்கர் பாதிக்கப்படுவதால், சென்ற ஆண்டு முதலே விவசாயிகள் இதனைக் கடுமையாக எதிர்த்துப் போராடி வருகின்றனர்.

இப்போராட்டங்களைத் தொடர்ந்து விவசாய நிலங்கள் வழியே எரிவாயுக் குழாய் பதிப்பதற்கும், அதன் பொருட்டு நிலம் கையகப்படுத்தவும் அனுமதி மறுத்த தமிழக அரசு, நெடுஞ்சாலைகள் ஓரமாகக் குழாய்களைப் பதிக்குமாறு கெயில் நிறுவனத்துக்குச் சென்ற ஏப்ரல் மாதம் உத்தரவிட்டது. இந்த உத்தரவுக்கு எதிராக கெயில் நிறுவனம் தொடுத்த வழக்கில், விவசாயிகளுக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. விவசாயிகளின் நலனுக்கு மேலான பொதுநலன் இந்த எரிவாயுக் குழாய்த் திட்டத்தில் இருப்பதாகவும், இந்தத் திட்டம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுமென்றும் கூறி, விளைநிலங்களில் குழாய் பதிக்க அரசு பிறப்பித்திருந்த தடை உத்தரவை ரத்து செய்துள்ளது.

அதுமட்டுமல்ல; இத்திட்டத்தினை விவசாயிகள் ஏற்குமாறு செய்ய தமிழக அரசால் இயலுமென்றும், ஒருவேளை அவர்கள் ஏற்க மறுத்துப் போராடினால், கூடங்குளம் போராட்டத்தைக் கையாண்டதைப் போல இதையும் கையாள முடியுமென்றும், சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதற்குத் தேவையான அளவு வலிமை அரசுக்கு இருப்பதாகவும் நீதிபதிகள் தமது தீர்ப்பில் கூறியிருக்கின்றனர். ஒருவேளை தமிழக அரசின் அதிகாரத்தில் நீதிபதிகள் அமர்ந்திருந்தால், இந்நேரம் துப்பாக்கிச்சூடு நடத்தியாவது நிலத்தைப் பறித்திருப்பார்கள் என்று தோன்றுகிறது. ''பொதுநலன்'' மீது நீதிபதிகளுக்கு அவ்வளவு ஈடுபாடு!

நிலத்தடியில் ஒரு மீட்டர் ஆழத்தில் எரிவாயுக் குழாய் பதிப்பதற்காக கெயில் நிறுவனம் கையகப்படுத்தும் நிலத்தின் அகலம் 66 அடி. அந்த இடத்தில் நிலத்தை உழுவதோ, அந்த இடத்தில் குழாய்க் கிணறு போடுவதோ கூடாது. வயலில் பதிக்கப்படும் குழாய்களுக்குச் சேதமோ, விபத்தோ நேர்ந்தால் சம்பந்தப்பட்ட விவசாயியின் மீது கிரிமினல் குற்றவழக்கு போடப்படும். கையகப்படுத்தும் நிலத்திற்குச் சந்தை விலையில் 10% மட்டுமே தரப்படும். இத்தனை நிபந்தனைகளுக்கு உட்பட்டு விவசாயிகள் நிலத்தை ஏன் தரவேண்டும் என்பதுதான் கேள்வி.

ஏற்கெனவே நான்குவழிச் சாலைகள், உயர் அழுத்த மின் கோபுரங்கள், இருவழி இரயில் பாதைகள் போன்றவற்றுக்காக பொதுநலன் என்ற பெயரில் தமது நிலத்தை வழங்கிய விவசாயிகள், அதனால் அடைந்த பயன் என்ன? கிராமங்களுக்கு 10 மணிநேர மின்வெட்டு, நெடுஞ்சாலைகளில் டோல்கேட் வசூல், கிராமங்களில் நிற்கும் பாசஞ்சர் ரயில்கள் மென்மேலும் ரத்து செய்யப்பட்டு அதிவேக ரயில்கள் அறிமுகம் - என்பதுதான் இந்த ''பொதுநலன்'' விவசாயிகளுக்கு அளித்திருக்கும் பரிசு.

தமது நிலங்களில் எரிவாயுக் குழாய்கள் பதிக்கப்படுவதை எதிர்த்துப் போராடும் விவசாயிகள். (கோப்புப் படம்)



இது விவசாயத்தைச் சீர்குலைக்குமென்பதால், இக்குழாய்களை நெடுஞ்சாலை ஓரமாகவோ, ரயில்பாதை ஓரமாகவோ கொண்டு செல்லுமாறு கோருகிறார்கள் விவசாயிகள். அவ்வாறு கொண்டு சென்றால் ''குழாய்ப் பாதையின் நீளம் அதிகரிக்கும், செலவு அதிகரிக்கும், அதனை நுகர்வோர் சுமக்க வேண்டியிருக்கும்'' என்பதுதான் கெயில் நிறுவனத்தின் ஆட்சேபம். எரிவாயு விலையை விருப்பம் போல உயர்த்தி மக்களைக் கொள்ளையடிக்கும் எரிவாயு நிறுவனம், நுகர்வோர் நலன் குறித்துப் பேசுவது ஒரு பித்தலாட்டம். தற்போது இந்தக் குழாய்ப் பாதையில் செல்லும் எரிவாயுவில் கூட 50%-க்கு மேல் தனியார் தொழிற்சாலைப் பயன்பாடுகளுக்குத்

தான் செல்லவிருக்கிறது. இருப்பினும் இந்நிறுவனங்களின் இலாபம் ஈட்டும் உரிமையை, பல்லாயிரக்கணக்கான விவசாயிகளின் வாழ்வுரிமையைக் காட்டிலும் மேம்பட்ட பொதுநலனாக நீதிமன்றம் கருதுகிறது.

அதுமட்டுமல்ல; பொதுத்துறை நிறுவனங்கள் நாட்டின் பொதுச்சொத்துகள் என்ற நம்பிக்கையில்தான் விவசாயிகள் தம் நிலங்களை அன்று வழங்கினார்கள். அத்தகைய பல பொதுத்துறை நிறுவனங்கள் இன்று தனியார்மயமாக்கப்படுகின்றன.

இன்று பொதுத்துறை என்ற முகமூடி அணிந்து விளை நிலங்களை வளைக்க வரும் நெய்வேலி நிறுவனத்தின் பங்குகளில் சுமார் 30% ஏற்கெனவே அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் கையில்தான் உள்ளது. மீதியையும் படிப்படியாகத் தனியார்மயமாக்குவதுதான் அரசின் கொள்கை. ஏற்கெனவே கோதாவரிப்படுகை எரிவாயுக் கிணறுகள் அம்பானிக்குத் தாரைவார்க்கப்பட்டுவிட்டன. அவற்றிலிருந்து எடுக்கும் எரிவாயுவை ஆந்திராவிலிருந்து கர்நாடகா, மகாராட்டிரா, ம.பி., வழியாக குஜராத் கொண்டு செல்லும் குழாய்ப்பாதையும் முகேஷ் அம்பானிக்குச் சொந்தமாக உள்ளது. ம.பி.யிலிருந்து உ.பி.க்கு புதிய குழாய்ப்பாதையொன்றையும் அம்பானியின் நிறுவனம் அமைக்கவிருக்கிறது. நாட்டின் பொதுச்சொத்தான கோதாவரி எரிவாயுவின் விலையை ரிலையன்சும் பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனமும்தான் இன்று தீர்மானிக்கின்றன. சொன்ன விலை தராவிட்டால் உற்பத்தியை முடக்குகின்றன.

இந்நிலையில் பொதுநலன் எனும் பேரில் பறிக்கப்படும் நிலம், நாளை தனியார்மயமாக்கப்பட்டு விடும். அப்போது அந்தத் தனியார்மயத்தையும் ''பொதுநலன்'' என்ற பெயரில் நீதிமன்றம் நியாயப்படுத்தும்.

இன்று உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து 'விவசாயிகளின் நலன் காக்க' உச்ச நீதிமன்றத்தை அணுகியிருக்கும் ஜெ. அரசு, போராடும் விவசாயிகள் பக்கம் நிற்பதைப் போல நடிக்கிறது. கூடங்குளம் பிரச்சினையில் ஜெயலலிதாவும் உச்ச நீதிமன்றமும் கடைப்பிடித்த தந்திரமும் இதுவேதான். ''யார் உத்தரவிட்டாலும் எங்கள் நிலத்தில் குழாய் பதிக்க அனுமதிக்கமாட்டோம்'' என்று எதிர்த்து நின்று போராடுவது மட்டும்தான் விவசாயிகள் முன் உள்ள ஒரே வழி. அத்தகைய போராட்டம்தான் அரசையும் நீதிமன்றத்தையும் மட்டுமின்றி, பொதுநலன் என்ற பித்தலாட்டத்தையும் அம்பலமாக்கும்.

● அன்பு

# "வைப்பாறில் நவீன இயந்திரங்களால் மணல் கொள்ளை நடப்பதைத் தடுப்போம்! மாட்டு வண்டியில் மணல் அள்ளும் பாரம்பரிய உரிமையை நிலைநாட்டுவோம்!"

## – மாட்டு வண்டித் தொழிலாளர் பாதுகாப்புச் சங்கத்தின் ஆர்ப்பாட்டம்

விளாத்திகுளம் பகுதியில் பொக்லைன் இயந்திரங்கள் மூலம் இரவு பகலாக வைப்பாற்றில் நடந்து வரும் மணல் கொள்ளைக்கு எதிராகவும், மாட்டு வண்டிகளில் மட்டுமே மணல் அள்ள வேண்டுமென உத்தரவிட்டு செயல்படுத்தக் கோரியும் விளாத்திகுளம் மாட்டுவண்டித் தொழிலாளர் பாதுகாப்புச் சங்கம், கட்டிடத் தொழிலாளர் சங்கம் ஆகிய அமைப்புகள் விவசாயிகள் விடுதலை முன்னணியுடன் இணைந்து விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு கடந்த டிசம்பர் 9-ஆம் தேதியன்று ஆர்ப்பாட்டம் நடத்தின.

நகரத்துக்குள் நுழைய விடாமல் போலீசு போட்டு வைத்திருந்த தடுப்பரண்களைத் தூக்கியெறிந்துவிட்டு, விளாத்திகுளம் ஆற்றுப் பாலத்திலிருந்து ஏறத்தாழ ஒரு கி.மீ. தூரத்துக்கு நூற்றுக்கும்மேற்பட்ட மாட்டு வண்டிகளில் அணிவகுத்து வந்த தொழிலாளர்கள், கோரிக்கைகளை விளக்கும் பதாகைகளுடன் முழக்கமிட்டபடியே ஊர்வலமாக வந்தனர். இந்தப் போராட்டத்தில் விவசாயிகளும், கொத்தனார்கள், எலக்ட்ரீசியன்கள், சிறுகடைக்காரர்கள் மற்றும் பொதுமக்களுமாக ஏறத்தாழ 500-க்கும் மேற்பட்டோர் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். இந்த முற்றுகைப் போராட்டத்தால் போக்குவரத்து முற்றாக முடங்கியது.



உறுதிமிக்க இப்போராட்டத்தைக் கண்டு அரண்டுபோன வட்டாட்சியர், மாவட்டப் போலீசு துணை கண்காணிப்பாளர் மற்றும் பொதுப்பணித்துறையைச் சேர்ந்த பொறுப்பு அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்கு வந்தனர். போராட்ட நாளன்று அதிகாலையில் போலீசாரால் கைது செய்யப்பட்ட மாட்டுவண்டித் தொழிலாளர் பாதுகாப்புச் சங்கத்தின் மாவட்டத் தலைவரான ராஜாராம் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கை நிறைவேற்றப்பட்ட பின்னரே இப்பேச்சுவார்த்தை நடந்தது. இயந்திரங்கள் மூலம் மணல் அள்ளுவதைத் தடைசெய்யவும், மாட்டு வண்டிகளில் மட்டும் மணல் அள்ளவும் பரிந்துரைத்து, அதை 20 நாட்களில் நிறைவேற்றவும் உறுதியளித்து எழுதிக் கொடுத்ததன் அடிப்படையில், இம்முற்றுகைப் போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது. முதற்கட்ட வெற்றியைச் சாதித்துள்ள இப்போராட்டம், இவ்வட்டாரமெங்கும் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

– பு.ஜ. செய்தியாளர்கள்,
விளாத்திகுளம்.

# நேபாளப் புரட்சியின் பின்னடைவு உணர்த்தும் உண்மைகள்

மன்னராட்சியைத் தூக்கியெறிந்த ஐக்கிய நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்டு) நாடாளுமன்ற சரணடைவுப் பாதையில் சரிந்து வீழ்ந்ததால்தான் பெருத்த தோல்வியை அடைந்திருக்கிறது.

நேபாளத்தில் 2008-இல் நடந்த முதலாவது அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்களில் 229 இடங்கள் பெற்று தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்திருந்த ஐக்கிய நேபாள பொதுவுடமைக் கட்சி (மாவோயிஸ்ட்) [UCPN (Maoist)], கடந்த ஆண்டு நவம்பரில் இரண்டாவது அரசியல் நிர்ணயசபையை அமைப்பதற்காக நடத்தப்பட்ட தேர்தலில் பெருத்த தோல்வியைச் சந்தித்திருக்கிறது. அக்கட்சி இந்தத் தேர்தலில் நேரடி வாக்குப்பதிவு மற்றும் விகிதாச்சார பிரதிநிதித்துவம் ஆகிய இரண்டையும் சேர்த்து வெறும் 80 இடங்களை மட்டுமே கைப்பற்றியிருக்கிறது. அக்கட்சியின் முக்கியத் தலைவர்களான பிரசண்டாவும் பாபுராம் பட்டாராயும் தலா இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு ஒரு தொகுதியில் மட்டுமே, அதுவும் குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே வெற்றி பெற்றுள்ளனர். அக்கட்சியின் வேட்பாளர்கள் பலர் காப்புத் தொகையைக்கூட இழக்கும் அளவிற்குத் தோல்வியடைந்து, அக்கட்சி மூன்றாமிடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதற்கு மாறாக, 2008-இல் நடந்த தேர்தலில் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்த நேபாள காங்கிரசு கட்சியும் (NC) போலி கம்யூனிஸ்ட் கட்சியான ஐக்கிய மார்க்சிய-லெனினியக் கட்சியும் [CPN (UML)] இத்தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டியுள்ளன. மன்னராட்சி தூக்கியெறியப்பட்ட நிலையில் நடந்த முதல் அரசியல் நிர்ணயசபைக்கான தேர்தலும் அதில் ஐக்கிய மாவோயிஸ்ட் கட்சி அடைந்த வெற்றியும் ஒரு புதிய நேபாளம் உருவாகும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது என்றால், இரண்டாவது அரசியல் நிர்ணயசபை தேர்தல் முடிவுகள் நேபாளத்தை ஓர் இருண்ட எதிர்காலத்திற்குள் தள்ளியிருக்கின்றன. ''கம்யூனிசம் தோற்றுப்போய்விட்டது'' என ஏகாதிபத்தியவாதிகள் கூச்சல்போட்டுக் கொண்டிருந்த வேளையில் புரட்சிகர சக்திகளுக்குப் பெரும் உற்சாகத்தை அளிக்கக்கூடிய வகையில் நடந்த நேபாள புரட்சி, இங்ஙனம் பின்னுக்குப் போயிருப்பது வருத்தமளிக்கக்கூடியதென்றாலும், இந்தத் தலைகீழ் மாற்றத்திற்கான உண்மைக் காரணத்தை ஆராய்ந்து, இப்பின்னடைவை மார்க்சிய-லெனினிய கோட்பாடுகளின் அடிப்படையில் புரிந்துகொள்வது அவசியமான ஒன்றாகும்.

''தேர்தல் முறைகேடுகளால்தான் தமது கட்சி தோல்வியடைந்துவிட்டதாக'' ஐக்கிய நேபாள மாவோயிசக் கட்சி கூறியிருக்கிறது. முதலாளித்துவ நாடாளுமன்றத் தேர்தல்களும் முறைகேடுகளும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் என்றபோதும், இந்த விளக்கம், தான் செய்த தவறுகளை அக்கட்சி மிகவும் மலிவான முறையில் மூடிமறைக்க எத்தணிக்கும் நொண்டிச் சாக்கு தவிர வேறில்லை. மாறாக, மன்னராட்சியைத் தூக்கியெறிந்த நேபாளப் புரட்சியை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்வதில் அக்கட்சி செய்த தவறுகள்தான் இத்தோல்விக்கான அடிப்படையாக அமைந்தன.

ஐக்கிய நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்டு) - யை நாடாளுமன்ற சரணடைவுப் பாதைக்குத் தள்ளிய துரோகத் தலைமை: பிரசண்டா (இடது) மற்றும் பாபுராம் பட்டாராய்.



நாம் இப்படிக் கூறும் அதேசமயம், இந்தத் தோல்விக்கு வேறொரு எளிதான காரணத்தை இந்திய மாவோயிஸ்டுகள் முன்வைக்க வாய்ப்புண்டு. ஏழு ஆண்டுகளுக்கு முன்பு மன்னராட்சிக்கு எதிராக நேபாளத்தில் வெடித்த எழுச்சியினையடுத்து நேபாள மாவோயிசக் கட்சி மன்னராட்சியைத் தூக்கியெறிந்து அரசியல் நிர்ணய சபையை அமைக்கும் திட்டத்தை முன்வைத்து ஏழு கட்சி கூட்டணியோடு அமைதி ஒப்பந்தத்தைப் போட்டுக் கொண்டது. மாவோயிசக் கட்சியினரின் அந்நடவடிக்கையை வலது சந்தர்ப்பவாத

சரணடைவு எனக் குற்றஞ்சுமத்திய இந்திய மாவோயிஸ்டுகள், தற்போதைய இத்தோல்விக்கு அதையே காரணமாக கூறக்கூடும். இது மட்டுமின்றி, இப்படியெல்லாம் நடக்கும் என்று அன்றே சொன்னோம் என்று இன்றைய பின்னடைவுக்கு வியாக்கியானம் அளிக்கவும் கூடும்.



ஐக்கிய நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்டு) -க்குள் ஆதிக்கம் செலுத்திய முதலாளித்துவப் பாதையாளர்களை எதிர்த்து வெளிவந்து, நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) [NCP (Maoist)] என்ற புதிய புரட்சிகர கட்சியைத் தொடங்கியுள்ள தோழர்கள் கிரண், பசந்தா மற்றும் கஜுரேல்.

நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு - ஏகாதிபத்திய எதிர்ப்பு புதிய ஜனநாயகப் புரட்சியை சாதிக்கும் நோக்கத்தோடு நேபாள மாவோயிசக் கட்சி 1996 தொடங்கி மக்கள் யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்த சமயத்தில், அப்புரட்சி 2005-06 ஆம் ஆண்டுகளில் ஒரு புதிய இடைக்கட்டத்திற்குள் நுழைந்தது. இற்றுவிழுந்து கொண்டிருந்த மன்னராட்சியைத் தூக்கியெறிந்து ஒரு ஜனநாயகக் குடியரசை அமைக்க வேண்டிய உடனடி அரசியல் கடமை முன்வந்தது. மன்னராட்சிக்கு எதிரான மக்கள் விடுதலைப் படையின் கிராமப்புற ஆயுதந் தாங்கிய போராட்டம் என்பதிலிருந்து நாடு தழுவிய மக்கள் பேரெழுச்சி என்ற அரசியல் போராட்டம் வெடிப்பதற்கான காலம் கனிந்திருந்தது. அச்சமயத்தில் நேபாள மாவோயிஸ்டுகள் இப்பேரெழுச்சியைக் கண்டு கொள்ளாமல் ஒதுங்கிக்கொண்டு, தொடர்ந்து கிராமப்புற ஆயுத போராட்டங்களில் மட்டுமே கவனத்தைச் செலுத்தியிருந்தால், அக்கட்சி தனிமைப்பட்டுப் போயிருக்கும் என்பது மட்டுமல்ல; அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட அந்நிய சக்திகளால் மன்னராட்சி காப்பாற்றப்பட்டு, நேபாளப் புரட்சி பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கும்.

நேபாள மாவோயிசக் கட்சி இந்த இடைக்கட்டத்திற்கேற்ப, ''அரசியல் நிர்ணய சபையை நிறுவு; அதற்கான தேர்தலை உடனே நடத்து'' என்ற முழக்கங்களை முன்வைத்து இந்தப் பேரெழுச்சிக்குத் தலைமையேற்றதோடு, மன்னராட்சியை அகற்ற முன்வந்த ஏழுகட்சி கூட்டணியோடும் அமைதி ஒப்பந்தத்தைப் போட்டுக் கொண்டது. இதன் விளைவாக நேபாளத்தில் இந்து மன்னராட்சி அகற்றப்பட்டதோடு, அந்நாடு மதச்சார்பற்ற குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. இது, புதிய ஜனநாயகப் புரட்சி என்ற போர்த்தந்திரத்தை நிறைவேற்றும் வளர்ச்சிப் போக்கில் செயல்தந்திரரீதியாக மாவோயிஸ்டுகள் அடைந்த வெற்றியாகும்.

இதனையொத்த இடைக்கட்ட நிலைமை ரசியாவில் 1905-லும், சீனாவில் 1924-27 மற்றும் 1945-47 காலக்கட்டங்களிலும் எழுந்தன. சீனகம்யூனிஸ்ட் கட்சி 1924-27 காலக்கட்டத்தில் கோமிங்டாங் கட்சியோடு கூட்டணி அரசில் பங்கெடுத்திருந்தது; 1946 ஜனவரியில் தேசிய ஜனநாயக சட்டப்பேரவையை அமைக்கும் ஒப்பந்தத்தில் சீனகம்யூனிஸ்டு கட்சியும் கோமிங்டாங் கட்சியும் கையெழுத்திட்டன.

1917 பிப்ரவரியில் ரசியாவில் ஜாராட்சி தூக்கியெறியப்பட்டாலும், அரசுக் கட்டமைவு முழுவதும் வீழ்த்தப்படவில்லை. குறிப்பாக, ஜாராட்சியில் இருந்த இராணுவம் கலைக்கப்படாததோடு, முதல் உலகப் போரிலும் அது ஈடுபட்டுவந்தது. ஜார் தூக்கியெறியப்பட்டதைப் புரட்சி என ஏற்றுக்கொள்ளும்பொழுது, நேபாளத்தில் பழைய இராணுவமும் அரசுக் கட்டமைவும் இன்னும் நீடித்திருப்பதைக் காட்டி, நேபாளத்தில் மன்னராட்சியைத் தூக்கியெறிந்து மாவோயிஸ்டுகள் அடைந்த செயல்தந்திர வெற்றியை அங்கீகரிக்க மறுப்பது ஒருதலைப்பட்சமானது மட்டுமல்ல; புரட்சி நெளிவுசுளிவின்றி நேர்கோட்டுப் பாதையில்தான் பயணிக்கும் என்று கருதும் வறட்டுத்தனமுமாகும்.

•••

சர்வதேசகம்யூனிச இயக்க வரலாற்றில் மேலிருந்து (அரசிலிருந்து) செயல்புரிவது என்னும் போராட்ட வடிவம் மற்றும் தற்காலிகப் புரட்சிகர அரசாங்கம் என்னும் அமைப்பு வடிவங்களை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னிபந்தனைகளை லெனின், ''**ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயகத்தின் இரு செயல்தந்திரங்கள்**'' என்ற நூலில் வகுத்து முன்வைத்துள்ளார்.

தற்காலிகப் புரட்சி அரசாங்கத்தில் பாட்டாளி வர்க்கக் கட்சி பங்கேற்றாலோ, இல்லாவிட்டாலோ, ''எப்படி இருந்தபோதிலும் தற்காலிகப் புரட்சி அரசாங்கத்தின் மீது நாம் கீழிருந்து நிர்ப்பந்தம் கொண்டுவர வேண்டும். கீழிருந்து இந்த நிர்ப்பந்தத்தைச் செயல்படுத்த முடிவதற்குப் பாட்டாளி வர்க்கம் ஆயுதமேந்தியிருக்க வேண்டும். ..... அது ஆயுதமேந்திச் செலுத்தும் நிர்ப்பந்தத்தின் நோக்கம் புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாப்பது, கெட்டிப்படுத்துவது, விரிவுபடுத்துவது - அதாவது, பாட்டாளி வர்க்க நலன்களின் நிலையிலிருந்து பார்க்கும்போது அந்த ஆதாயங்கள் நம் குறைந்தபட்ச வேலைத்திட்டம் முழுவதையும் நிறைவேற்றுவதாக அமைந்திருக்க வேண்டும்'' என்று லெனின் கூறியிருக்கிறார். நக்சல்பாரி புரட்சிகரகட்சியான இ.பொ.க. (மா-லெ) மாநில அமைப்பு கமிட்டி 1981-இல் நிறைவேற்றிய ''**இந்தியப் புரட்சிக்கான அரசியல் பாதையும்**

இராணுவப் பாதையும்'' என்ற தனது ஆவணத்தில் இக்கோட்டுபாடுகளை விரிவாக விளக்கி முன்வைத்திருக்கிறது.

**நேபாள மாவோயிசக் கட்சி முதலாவது அரசியல் நிர்ணய சபைக்கு நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம், அதனை நாடாளுமன்ற நாற்காலி அரசியலின் வரம்புக்குட்பட்டு தீர்க்க முயன்றதேயொழிய, அரசியல் நிர்ணய சபையின் கையாலாகத்தனத்தை வெளியிலிருந்து அம்பலப்படுத்தி மக்களை அணிதிரட்டத் தவறியது.**

2008-க்கும் 2013-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் நேபாள ஐக்கிய மாவோயிசக் கட்சி தனது தலைமையில் இரு கூட்டணி அரசுகளை அமைத்தபோதும் சரி, அக்கட்சி எதிர்க்கட்சியாகச் செயலாற்றியபோதும் சரி இந்த மா-லெ நிபந்தனைகளை பற்றுறுதியோடு கடைப்பிடிக்காமல் உதாசீனப்படுத்தியது. நேபாளத்தின் பிரதமராக பிரசண்டா இருந்தபொழுது, நேபாள இராணுவம் குடிமக்களின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட வேண்டும் என அவரது அரசு கோரியதோடு, அதற்குக் கட்டுப்பட மறுத்த நேபாள இராணுவத்தின் தலைமைத் தளபதி ருக்மாங்கத் கடுவாலைப் பதவி நீக்கம் செய்யவும் முடிவெடுத்தது. இம்முடிவை ஆதரிப்பதாகக் கூறிய போலி கம்யூனிஸ்டுகளான ஐக்கிய மார்க்சிய-லெனினிய கம்யூனிசக் கட்சி, பிரசண்டாவின் மந்திரிசபை இந்த முடிவை அறிவித்தவுடன் அதனைத் துரோகத்தனமாக எதிர்த்ததோடு, தனது கட்சியைச் சேர்ந்த அதிபர் ராம் பரண் யாதவ் மூலம் மந்திரிசபை முடிவை ரத்தும் செய்தது. அதிபரின் இந்த முடிவை எதிர்த்து பிரசண்டா மே 2009-இல் பதவி விலகினார். இதன் பின் நேபாள காங்கிரசின் ஆதரவோடு பிரதமர் பதவியில் அமர்ந்த போலி மார்க்சிய-லெனினிய கம்யூனிசக் கட்சியைச் சேர்ந்த மாதவ் குமார் நேபாள் சமாதான ஒப்பந்த விதிகளை மீறி இராணுவம் ஆளெடுப்பதற்கு அனுமதி வழங்கினார்.

நேபாள மாவோயிசக் கட்சி இதனை எதிர்த்துத் தெருப் போராட்டங்களை நடத்தியதையடுத்து, அந்த நிர்பந்தத்தால் மாதவ் குமார் நேபாள் அரசு 2010 ஜூனில் பதவி விலகும்படி நேர்ந்தது. எனினும், நேபாள ஐக்கிய மாவோயிசக் கட்சி கீழிருந்து நடத்திய இப்போராட்டத்தை இறுதிவரை கொண்டு செல்லவில்லை. மாறாக, தனது போராட்டத்தால் பதவி விலகிய போலி மார்க்சிய-லெனினியக் கம்யூனிஸ்டு கட்சியுடனேயே கூட்டணி சேர்ந்தது. நேபாள காங்கிரசையும் போலி மார்க்சிய-லெனினிய கம்யூனிசக் கட்சிக்குள் இருக்கும் வலதுசாரி பிரிவையும் தனிமைப்படுத்தும் தந்திரோபாயம் இது வெனக் கூறி இக்கூட்டணிக்குப் பட்டுக் குஞ்சம் கட்டியதோடு, அக்கட்சியைச் சேர்ந்த ஜல்நாத் கனாலை பிப். 2011-இல் பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கும் ஆதரவளித்தது. அடுத்த ஆறே மாதத்தில் கனால் அரசைக் கவிழ்த்துவிட்டு, மாதேசி ஜன் அதிகார் கட்சியோடு கூட்டுச் சேர்ந்த நேபாள மாவோயிசக் கட்சி, பாபுராம் பட்டாராயை பிரதமராக்கியது.

இந்திய மார்க்சிஸ்டுகள் நாறி அம்பலப்பட்டுப் போன இந்திய நாடாளுமன்றத்தைத் தமது தலை மேல் தூக்கி வைத்துக் கொண்டிருப்பதைப் போல, நேபாள மாவோயிசக் கட்சி முதலாவது அரசியல் நிர்ணய சபைக்கு நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் நேபாள ஓட்டுக்கட்சிகளோடு மாறிமாறிக் கூட்டணி அமைத்தும், பேச்சு வார்த்தை நடத்தி விட்டுக்கொடுத்து நாடாளுமன்ற நாற்காலி அரசியலின் வரம்புக்குட்பட்டு தீர்வு காண முயன்றதேயொழிய, அரசியல் நிர்ணய சபையின் கையாலாகத் தனத்தை வெளியிலிருந்து அம்பலப்படுத்தி, புரட்சியின் அடுத்த கட்டத்திற்கு மக்களை அணிதிரட்டத் தவறியது. குறிப்பாக, நேபாள மாவோயிசக் கட்சியின் பிரசண்டா-பட்டாராய் கும்பல், ''பல கட்சி போட்டியின் மூலம் தான் எதிர்ப்புரட்சியை வீழ்த்த முடியும்; அரசியல் நிர்ணய சபை, தேர்தல்கள், அரசியல் சாசனம் என்ற மூன்றின் மூலம் புதிய நேபாளத்தை உருவாக்க முடியும்'' என்ற சட்டவாதப் பாதையை உயர்த்திப் பிடித்து, தமது சந்தர்ப்பவாதக் கூட்டணிகளை நியாயப்படுத்தியது. ''அடுத்துவரும் தேர்தல்களில் நாம் பெரும்பான்மை பெற்றுவிட்டால் அரசே நமது கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிடும்'' எனக் கூறி, கீழிருந்து போராட்டங்கள் எடுக்க வேண்டிய அவசியத்தை முற்றிலுமாக நிராகரித்தது.

இரண்டாவது அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்டு) [NCP (Maoist)] -யைச் சேர்ந்த தேசிய இளைஞர் மக்கள் தொண்டர் படை காவ்ரே என்ற ஊரில் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.




•••

ஒரு புரட்சிகரக் கட்சி எவ்வளவு சிறியதாக இருப்பினும் தனது செயல்தந்திர வழியை அமல்படுத்தும்பொழுது, சமரச

சக்திகளைத் தனிமைப்படுத்தி எதிரிக்கு எதிரானதாக்கு தலைத் தீவிரப்படுத்துவதற்கு மக்களைச் சார்ந்து நின்று, அவர்களது அரசியல் முன்முயற்சியைக் கட்ட விழ்த்துவிடும் துணிவையும் நம்பிக்கையையும் கொண்டிருக்க வேண்டும். இதனைப் புரிந்துகொள் வதற்கு 1917 பிப்ரவரிக்கும் 1917 அக்டோபருக்கும் இடைபட்ட காலத்தில் லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சியின் அனுபவங்கள் நமக்கு வழி காட்டுகின்றன.

ரசியாவில் ஜார் ஆட்சிக்கு எதிரான 1917 பிப்ரவரி புரட்சி வெற்றிகரமாக நிறைவுற்று சோசலிசப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அரசியல் கடமை முன்நின்றபோது, மென்ஷ்விக்குகள் ரசியாவின் பின்தங்கிய நிலைமையைக் காரணம் காட்டி, ''முதலாளித்துவ உற்பத்தி சக்திகள் இன்னும் வளரவில்லை; சோசலிசப் புரட்சிக்கான காலம் இன்னும் கனிந்துவிடவில்லை'' எனக் கூறி, கெரன்ஸ்கி தலைமையில் இருந்த முதலாளித்துவ அரசிற்கு வால்பிடிக்கும் வேலையைச் செய்தார்கள். ஆனால், போல்ஷ்விக் கட்சி அத்தகைய பாரதூரமான நிலைமையிலும் புரட்சியை அடுத்த கட்டத்திற்கு வளர்த்துச் செல்லும் திட்டத்தோடு நிலம், உணவு, சமாதானம் என்ற முழக்கங்களை முன்வைத்தது. இம்முழக்கங்கள் பெருவாரியான மக்களை மட்டுமின்றி, ஜாரின் இராணுவத்திலும் ஒரு பிரிவை ஈர்த்தன. போல்ஷ்விக்குகள் சோவியத்துகளில் சிறுபான்மையினராக இருந்த நிலையிலும் அக்டோபர் புரட்சிக்கான தயாரிப்புகளைத் துணிந்து செய்து வெற்றியும் ஈட்டினர்.

ஆனால், நேபாள மாவோயிசக் கட்சி மன்னராட்சியைத் தூக்கியெறிந்த பிறகு மக்களைச் சார்ந்து நின்று புரட்சியை அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்வதற்குரிய பொருத்தமான அரசியல் துணிவைக் காட்டவில்லை. நேபாளத்தில் 1996 தொடங்கி 2006 முடிய நடந்த பத்தாண்டு கால மக்கள் யுத்தத்தின்பொழுது, மாவோயிசக் கட்சியினர் கிராமப்புறங்களில் உள்ளூர் அளவிலான மக்கள் அரசு மற்றும் நிர்வாக அமைப்புகளை ஏற்படுத்தியிருந்தனர். நிலப்பிரபுக்கள் மற்றும் புரட்சிக்கு எதிரான வர்க்கங்களின் நிலங்களையும், சொத்துக்களையும் பறிமுதல் செய்து மறுவிநியோகம் செய்திருந்தனர். இவ்வாறான புதிய ஜனநாயகப் புரட்சிக்குரிய அரசியல்-பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான திசைவழியில் செல்வதற்குப் பதிலாக, மக்கள் யுத்தத்தில் கிடைத்த பலன்களைத் தக்கவைத்துக் கொண்டு, கெட்டிப்படுத்தி, நகரத்திலும் விரிவுபடுத்துவதற்குப் பதிலாக, அவற்றை ஒவ்வொன்றாகக் கைகழுவினர்.

குறிப்பாக, பட்டாராய் பிரதமராகப் பதவியேற்றவுடனேயே மக்கள் யுத்தத்தின்பொழுது கைப்பற்றப்பட்ட நிலங்களும் சொத்துக்களும் மீண்டும் புரட்சியின் எதிரிகளிடமே திருப்பி ஒப்படைக்கும் துரோக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். செம்படை ஐ.நா.வின் கண்காணிப்பின் கீழ் பாசறையில் அடைபட்டிருந்த நிலையில்,



மக்கள் விடுதலைப் படை கலைக்கப்பட்டதைக் கண்டித்து, சுர்கேத் என்ற நகரில் அமைந்துள்ள ஐக்கிய நேபாள மாவோயிசக் கட்சியின் மாவட்ட மற்றும் மாநில அலுவலகங்களை அப்படையைச் சேர்ந்த போராளிகள் முற்றுகையிட்டுப் போராடியபொழுது, நேபாள இராணுவத்தால் கைது செய்யப்படும் செம்படை வீரர். (கோப்புப் படம்)

கம்யூனிச இளைஞர் கழகத்தை ஒரு குடிமக்கள் படையாக வளர்த்தெடுப்பதற்குப் பதிலாக, ஆளும் வர்க்கம் மற்றும் அவற்றின் கட்சிகளின் நிர்ப்பந்தத்திற்கு அடிபணிந்து, இளைஞர் கழகத்தை வெறும் சமூக சீர்திருத்த அமைப்பாக மாற்றி அமைத்தார். 1950-க்குப் பின் இந்தியாவுடன் செய்துகொண்ட சமனற்ற ஒப்பந்தங்கள் அனைத்தையும் துணிந்து ரத்து செய்து நாட்டுப்பற்றுகொண்ட சக்திகளைத் தம்பக்கம் அணிதிரட்டுவதற்குப் பதிலாக, இந்தியாவின் முதலீடுகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் இருதரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுத் துரோகமிழைத்தார். இவற்றைவிடக் கேவலமாக, ஆளும் வர்க்கம் மற்றும் கட்சிகளின் கட்டளைகளுக்கு அடிபணிந்து செம்படையைக் கலைத்து, கட்சியையும் உழைக்கும் மக்களையும் நிராயுதபாணியாக்கியது, பட்டாராய் அரசு.

''ஒரு கூட்டணி அரசில் பங்கு பெறுவதற்கு முன்னிபந்தனையாக மக்கள் படை இருப்பது அவசியம்; இம்மக்கள் படையை ஒரு புதிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் உருவான பிறகுதான் கையளிக்க முடியும்'' எனத் தனது ''கூட்டரசாங்கம் பற்றி'' நூலில் குறிப்பிடுகிறார், மாவோ. ஆனால், நேபாளப் பிரதமராக இருந்த பாபுராம் பட்டாராய் மாவோவின் இந்தப் போதனைகளை உதாசீனப்படுத்திவிட்டு, புதிய அரசியல் சாசனமும் புதிய அரசும் உருவாவதற்கு முன்பே, அப்படி உருவாகும் அரசு எந்த வர்க்கத்தின் நலனைக் கொண்டிருக்கும் எனத் தெரியும் முன்பே செம்படையின் ஆயுதங்களை ஒப்படைக்கும் முடிவை எடுத்தார். அதுவும் புரட்சிக்கும் மக்களுக்கும் எதிராகப் போரிட்டப் பிற்போக்கு இராணுவத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டுக் கலைத்தார்.

இந்தச் சரணடைவுக்கு எதிராக செம்படை பாசறைகளில் கலகங்கள் நடந்தன. ஆனால், அப்போராட்டங்கள் செம்படையைக் கலைக்கக்கூடாது என்ற புரட்சிகர அரசியல் முழக்கத்தின் அடிப்படையில் அல்லாமல், ''சமாதான ஒப்பந்தத்தின்படி அனைத்துப் போராளிகளையும் நேபாள இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்; இந்த இணைப்பு கௌரவமிக்க வழிகளில்

நடைபெற வேண்டும்'' என்ற வரம்பிற்கு உட்பட்டே நடந்தது. ஆனால், இந்தப் போராட்டத்தைக்கூடப் பொறுத்துக் கொள்ளாத பிரசண்டா-பட்டாராய் கும்பல் நேபாள இராணுவத்தை அனுப்பி, இந்தப் போராட்டத்தை ஒடுக்கியது



நேபாளத்தில் செய்யப்பட்டுள்ள இந்திய முதலீடுகளைப் பாதுகாக்கும் வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் முன்னாள் நேபாள பிரதமர் பாபுராம் பட்டாராய் மற்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.(கோப்புப் படம்)

முதலாளித்துவ ஓட்டுக்கட்சிகள் மற்றும் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட அந்நிய ஆக்கிரமிப்பு சக்திகளின் நிர்ப்பந்தம், மிரட்டல்களுக்கு அடிபணிந்து, அவர்களிடம் சமரசமாக நடந்துகொள்வதன் மூலம் அவர்களின் நன்மதிப்பைத் தாம் பெற்றுவிட முடியும் என நம்பியது, பிரசண்டா-பட்டாராய் கும்பல். ஆனால், முதலாளித்துவக் கட்சிகளோ மன்னராட்சியைத் தூக்கியெறிந்த பிறகு, மாவோயிசக் கட்சி நாடாளுமன்ற அரசியல் சூதாட்டத்தில் தம்மிடம் தோற்றுப் போனதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் முதலாவது அரசியல் நிர்ணய சபையைக் கலைப்பதிலும் வெற்றி பெற்றனர். இன்னொருபுறம், செம்படையைக் கலைத்தது, ஏழை உழவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலங்களையும் சொத்துக்களையும் மக்களிடமிருந்து பறித்து மீண்டும் புரட்சியின் எதிரிகளுக்குக் கொடுத்த தன் காரணமாக மாவோயிசக் கட்சி கிராமப்புற மக்களின் ஆதரவை இழந்து நின்றது.

•••

பாட்டாளி வர்க்கக் கட்சி பிளவுபடாத தலைமையைப் பெற்றிருப்பதும் அதன் கீழ் மக்கள்திரள் அரசியல் படையைக் கட்டியமைப்பதும் போர்த்தந்திர ரீதியிலும் செயல்தந்திர ரீதியிலும் வெற்றி பெறுவதற்கான முன்தேவையாகும் என மார்க்சியம்-லெனினியம் போதிக்கிறது. ஆனால், புரட்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய நேரத்தில் நேபாள மாவோயிசக் கட்சித் தலைமை மூன்று அணிகளாக - பிரசண்டா, பாபுராம் பட்டாராய், கிரண் - எனப் பிளவுபட்டுக் கிடந்தது. இம்மூன்று அணிகளுள் பிரசண்டா மற்றும் பட்டாராய் கோஷ்டிகள் சமரச சரணடைவுவாதத்தை உயர்த்திப் பிடித்ததோடு, கட்சிக்குள் பெரும்பான்மை பலத்தையும் கொண்டிருந்தனர்.

2007-ஆம் ஆண்டு பாலாஜு எனுமிடத்தில் நடந்த கட்சியின் பிளீனத்திலும், 2008-ஆம் ஆண்டு காரிபாட்டி என்னுமிடத்தில் நடந்த கட்சி மாநாட்டிலும், 2010-ஆம் ஆண்டு பலுங்டர் என்னுமிடத்தில் நடந்த கட்சி பிளீனத்திலும், அதே ஆண்டு பாரிஸ்தண்டா என்னுமிடத்தில் நடந்த மத்திய கமிட்டி கூட்டத்திலும் கிரண் குழுவைச் சேர்ந்த தோழர்கள், பிரசண்டா மற்றும் பட்டாராய் கும்பலின் சமரச சரணடைவுக்கு எதிராகப் போராடினாலும், அக்கும்பலைத் தனிமைப்படுத்தும் வகையில் அரசியல் நடத்தை வழி, முழக்கங்கள், போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களை முன்வைத்து அப்போராட்டங்களை நடத்தவில்லை. ஒருபுறம் நகர்ப்புற எழுச்சிக்கான தயாரிப்புகளைச் செய்ய வேண்டும் என கிரண் குழு கோரிக்கை வைத்துக்கொண்டே, இன்னொருபுறம் இத்துரோகிகளைக் கட்சியிலிருந்து அப்புறப்படுத்துவதற்குத் தேவையான அரசியல்-அமைப்பு பலமின்றியும், கட்சியைப் பிளவுபடுத்தக் கூடாது என்ற நல்லெண்ணத்திற்கு ஆட்பட்டும் சமரசம் செய்து கொண்டது. பாரிஸ்தண்டா மத்தியக் கமிட்டி கூட்டத்திலும், ஏப்ரல் 2011-இல் நடந்த மற்றொரு மத்தியக் கமிட்டிக் கூட்டத்திலும் இச்சமரசம் அப்பட்டமாக வெளிப்பட்டது.

கட்சிக்குள் கிரண் அணியோடு சமரசம் செய்து கொள்வதும், அரசு விவகாரங்களில் பட்டாராயுடன் சேர்ந்து கொண்டு கட்சி முடிவுகளுக்கு எதிராக நடந்துகொள்வதுமென இரட்டை வேடமிட்டு பிரசண்டா துரோகமிழைத்தார். இத்தகைய பிளவுகளும், துரோகங்களும், சமரசங்களும் மக்களுக்குக் கட்சியின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. மேலும், மன்னராட்சி தூக்கியெறியப்பட்டதற்குப் பிந்தைய காலங்களில் புரட்சியின் எதிரிகள் மற்றும் கட்சிக்குள்ளிருந்த சமரச, துரோகக் கும்பலுக்கு எதிராக மக்கள் அரசியல்ரீதியில் அணிதிரட்டப்படாமல் வெறும் பார்வையாளர்களாக வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் இரண்டாவது அரசியல் நிர்ணய சபைத் தேர்தலை எதிர்கொண்ட நேபாள மக்கள், ஒரு கட்சிக்கு மாற்றாக வேறொரு கட்சி என்ற விதத்தில் அம்பலப்பட்டுப் போன துரோகிகளுக்கும் பிற்போக்காளர்களுக்கும் வாக்களித்துள்ளனர்.

ஐக்கிய மாவோயிசக் கட்சியின் செல்வாக்கு வீழ்ந்து, அவர்கள் தேர்தலில் மூன்றாமிடத்திற்குத் தள்ளப்பட்டதன் பின்னணி இதுதான். ஒரு கட்சி ஆயுதப் படையைக் கொண்டிருந்தாலும், மக்கள் யுத்தத்தை நடத்தித் தளப்பிரதேசங்களை அமைத்திருந்தாலும், புரட்சியின் ஒவ்வொரு இடைக்கட்டத்திலும் கட்சிக்குள் எழக்கூடிய எதிர்ப்புரட்சிகர சக்திகளையும் முதலாளித்துவப் பாதையாளர்களையும் எதிர்த்து முறியடிக்கக்கூடிய மார்க்சிய-லெனினிய பற்றுறுதி, மாற்றுவழியை முன்வைக்கக்கூடிய தெளிவு, மக்களின் மீது நம்பிக்கை வைத்து அவர்களை அணிதிரட்டும் அரசியல் துணிவு ஆகியவற்றைக் கொண்டிராவிடில், அக்கட்சி வீழ்வது தவிர்க்க முடியாதது என்ற பாடத்தைத்தான் நேபாள அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

• குப்பன்

## உ.வ.க. பாலி மாநாடு:

# ரேசன் கடையின் சாவி இனி அமெரிக்காவின் கையில்!

**இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகள் விவசாயத்திற்கும் உணவிற்கும் தரும் மானியங்களைக் கண்காணித்துக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அமெரிக்காவிடம் தாரைவார்க்கப்பட்டுள்ளது.**

தனியார்மயம்-தாராளமயம் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டவுடனேயே, ''இனி ரேஷன் கடைகளில் என்னென்ன உணவுப் பொருட்களை, என்ன விலையில் வழங்க வேண்டும் என்பதைக்கூட அமெரிக்கா தீர்மானிக்கும் காலம் வந்துவிடும்'' என நாம் எச்சரித்து வந்தது, இன்று ஏறத்தாழ நடைமுறை உண்மையாகிவிட்டது. இந்தோனேஷியாவிலுள்ள பாலியில் கடந்த டிசம்பர் முதல் வாரத்தில் நடந்து முடிந்த உலக வர்த்தகக் கழகத்தின் 9-வது அமைச்சர்கள் மாநாட்டில், ஏழை நாடுகள் தமது விவசாயத்திற்கும், ரேஷன் கடைகளின் மூலம் விநியோகிக்கப்படும் உணவுப் பொருட்களுக்கும் எவ்வளவு மானியம் வழங்க வேண்டும் என்பது குறித்தும், ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகம் குறித்தும் சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இம்முடிவுகள் இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகளுக்குப் புதிதாக எதையும் தராத அதேசமயம், இருப்பதையும் தட்டிப்பறித்துக் கொள்ளும் ஓரவஞ்சனை கொண்டதாக அமைந்துள்ளன.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக ஏகாதிபத்திய அரசுகள், உலக வர்த்தகக் கழகம் உள்ளிட்ட ஏகாதிபத்திய நிறுவனங்களின் கட்டளைகளுக்கு அடிபணிந்து நடந்து கொள்வது இந்திய அரசுக்குப் புதிய விசயமல்ல. எனினும், இந்தச் சரணாகதி அரசியலில் புதிய சாதனையை பாலி மாநாட்டில் நிகழ்த்தியிருக்கிறது, இந்திய அரசு. இந்திய விவசாயிகளுக்கு எவ்வளவு மானியம் தர வேண்டும், அவர்களிடமிருந்து எந்தெந்த உணவுப் பொருட்களை எந்தளவிற்குக் கொள்முதல் செய்ய வேண்டும்; எந்தெந்த உணவுப் பொருட்களை ரேஷன் கடைகளின் மூலம் விநியோகிக்க முடியும்; அவற்றை என்ன விலையில் விற்க வேண்டும் என்பதையெல்லாம் தீர்மானிக்கும் உரிமையை, இவற்றை மேற்பார்வையிடும் உரிமையை உலக வர்த்தகக் கழகத்திடம் ஒப்படைத்துக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறது, இந்திய அரசு.

மன்மோகன் சிங் அரசு கையெழுத்துப் போட்ட இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் இந்திய அணுஉலைகளைக் கண்காணிக்கும் உரிமையை சர்வதேச அணுசக்தி முகாமையிடம் தாரை வார்த்தது என்றால், பாலி மாநாட்டுத் தீர்மானங்கள் இந்தியாவிலுள்ள ரேஷன் கடைகளைக் கண்காணிக்கும் உரிமையை உலக வர்த்தகக் கழகத்திடம் தூக்கிக் கொடுத்திருக்கிறது.

விவசாயத்திற்கு மானியம் வழங்குவது குறித்து உலக வர்த்தகக் கழகத்தில் இரண்டுவிதமான சமனற்ற விதிகள் உள்ளன. ''ஏழை நாடுகள் ஒவ்வொரு ஆண்டும் தமது ஒட்டுமொத்த விவசாய உற்பத்தியின் மதிப்பில் 10 சதவீத அளவிற்கே விவசாய மானியமாக வழங்கவேண்டும். இந்த மானியமும் 1985-86 ஆண்டைய விவசாய உற்பத்தியின் மதிப்பைத் தாண்டக்கூடாது'' என நிபந்தனை விதித்துள்ள உலக வர்த்தகக் கழகம், ''ஏகாதிபத்திய நாடுகள் விவசாயத்திற்கு வழங்கி வரும் நேரடி மற்றும் மறைமுக மானியங்களில், நேரடி மானியத்தில் மட்டும் 20 சதவீத அளவிற்குக் குறைத்துக் கொள்ள வேண்டும்'' எனக் கூறுகிறது.

1995-இல் உலக வர்த்தகக் கழகம் தொடங்கப்பட்ட சமயத்தில் அமெரிக்க அரசு விவசாயத்திற்கு வழங்கிய மானியம் ஏறத்தாழ 6,100

இந்திய விவசாயிகளுக்குத் தரப்படும் மானியத்தைக் குறைக்கச் சொல்லி உத்தரவிடும் உலக வர்த்தகக் கழகத்தின் பாலி மாநாட்டைக் கண்டித்து கர்நாடகா மாநிலம் மங்களூரில் பல்வேறு விவசாய சங்கங்கள் மங்களூரு துறைமுகம் முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டம்.






பாலி மாநாட்டில் உரையாற்றும்
இந்திய வர்த்தகத் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா.

கோடி அமெரிக்க டாலர்கள். ஐரோப்பிய யூனியன் நாடுகள் அளித்துவந்த விவசாய மானியம் ஏறத்தாழ 9,000 கோடி யூரோ. அச்சமயத்தில் உலக வர்த்தகக் கழகத்தைச் சேர்ந்த பல்வேறு ஏழை நாடுகள் விவசாயத்திற்கு ஒரு பைசாகூட நேரடி மானியம் வழங்கவில்லை என்பதோடு ஒப்பிட்டுப் பார்த்தால்தான் உ.வ.க.வின் விதிகள் அடிப்படையிலேயே நியாயமற்றவை எனப் புரிந்து கொள்ள முடியும்.

2001-ஆம் ஆண்டு நடந்த தோஹா மாநாட்டில் விவசாய மானியம் தொடர்பான விதிகளை ஏழை நாடுகள் உடனடியாக அமலுக்குக் கொண்டுவர வேண்டும்; விவசாயம் சாராத பொருட்களுக்கான ஏற்றுமதி வர்த்தகத்தில் காணப்படும் அதிகமான சுங்க வரி, காப்புத் தடைகள் உள்ளிட்டவற்றை நீக்க வேண்டும் என அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியன் நாடுகளும் கோரின. மேற்குலக ஏகாதிபத்திய நாடுகளின் இந்த அபாயகரமான கோரிக்கைக்கு தோஹா வளர்ச்சி நிரல் எனப் பெயரும் சூட்டப்பட்டது.

விவசாய மானியத்தைக் குறைக்கச் சொல்லி ஏழை நாடுகளை நிர்பந்தித்துவந்த அமெரிக்க அரசோ தான் வழங்கும் மானியத்தில் ஒரு தம்பிடிகூடக் குறைக்கவில்லை. அமெரிக்க அரசு 2010-ஆம் ஆண்டில் விவசாயத்திற்கு வழங்கிய மானியம், 1995-ஆம் ஆண்டை ஒப்பிடும்பொழுது இருமடங்காக, 13,000 கோடி அமெரிக்க டாலர்களாக அதிகரித்திருக்கிறது. ஐரோப்பிய யூனியன் நாடுகள் வழங்கும் விவசாய மானியம் 2002-இல் 7,500 கோடி யூரோ, 2006-இல் 9,000 கோடி யூரோ, 2009-இல் 7,900 கோடி யூரோ - என ஏறுவதும் இறங்குவதுமாக நீடித்து வருகிறது. அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் கடந்த பத்தாண்டுகளில் விவசாயத்திற்கு வழங்கப்படும் மானியத்தைக் குறைத்துக் கொள்ளவில்லை என்பதோடு, அந்நாடுகள் நேரடி மானியத்தை மறைமுக மானியப் பட்டியலுக்குக் கொண்டு சென்று தப்பித்துக் கொள்ளும் தந்திரத்திலும் ஈடுபட்டன.

விவசாய மானியத்தைக் குறைப்பது தொடர்பான பிரச்சினை கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இழுபறியாக இருந்துவரும் நிலையில், இது குறித்து பாலி மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் உ.வ.க.வில் நிலவும் சமமற்ற, அநீதியான விதிகளை முடிவுக்குக் கொண்டுவரவில்லை. மாறாக, ஏழை நாடுகளுக்குக் கிடைத்ததெல்லாம் ஒரு நான்கு ஆண்டு கால அவகாசம் மட்டும்தான். அதுவரை (2017 முடிய) இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகள் தற்பொழுது வழங்கிவரும் மானியங்களையும் உணவுப் பொருள் கொள்முதலையும் தொடர முடியும். இந்தக் கால அவகாசம்கூட ஏழை நாடுகளுக்கு இனமாகக் கிடைத்துவிடவில்லை. ஏற்றுமதி வர்த்தகத்திற்குத் தடையாக உள்ள அதிகமான சுங்க வரி, காப்பு வரிகள் உள்ளிட்ட தடைகளை நீக்குவதற்கு ஒப்புக்கொண்ட பிறகுதான் கிடைத்தது.

இம்மாநாடு தொடங்குவதற்கு முன்பாக உணவுப் பொருள் கொள்முதல் தங்களின் இறையாண்மை பொருந்திய நடவடிக்கை, கால அவகாசம் கொடுக்கும் தந்திரங்களையெல்லாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என வீராப்புப் பேசிய இந்திய அரசு, இறுதியில் இந்திய மக்களை மட்டுமல்ல, தன்னை நம்பியிருந்த பிற ஏழை நாடுகளையும் கைவிட்டுவிட்டு அமெரிக்காவிடம் சரணடைந்திருக்கிறது. ‘‘விவசாய மானியத்தையும் உணவுப் பொருட்களுக்குத் தரப்படும் மானியத்தையும் ஒன்றாக இணைக்கக் கூடாது. மானியத்தின் மதிப்பைத் தற்பொழுதுள்ள விலைவாசி மற்றும் உற்பத்திச் செலவைக் கொண்டு தீர்மானிக்க வேண்டும். ஏழை நாடுகளின் உணவுப் பொருள் கொள்முதலில் உ.வ.க. தலையீடு செய்யக் கூடாது‘‘ என்ற கோரிக்கைகளுக்காக இந்தியா போராடும் என எதிர்பார்த்திருந்த ஏழை நாடுகளின் நெற்றியில் பட்டை நாமத்தைச் சாத்திவிட்டது, இந்திய அரசு.

- தற்பொழுது எந்தெந்த உணவுப் பொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதார விலை அரசால் அறிவிக்கப்படுகிறதோ, அவற்றைத் தாண்டி வேறு உணவுப் பொருட்களுக்கு ஆதார விலைகளை அறிவிக்கக் கூடாது. தற்பொழுதுள்ள நிலையிலிருந்து ஆதார விலையை அதிகரிக்கக்கூடாது.

- உணவுப் பொருள் கொள்முதலைத் தற்பொழுதுள்ள அளவிலிருந்து அதிகரிக்கக்கூடாது; ரேஷன் அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தாண்டக்கூடாது. உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உணவுப் பொருட்களைத் தாண்டி, சமையல் எண்ணெய், பருப்பு வகைகள் போன்றவற்றை ரேஷன் கடைகளின் மூலம் விநியோகிக்கக் கூடாது.

- இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகள் அனைத்தும் பொது விநியோகத்திற்காகக் கொள்முதல் செய்து வைத்திருக்கும் உணவுப் பொருட்களின் இருப்புக் கணக்கை உ.வ.க. மேற்பார்வையிட அளிக்க வேண்டும்.

— இவையெல்லாம் மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள் அனுமதித்துள்ள கால அவகாசத்தோடு இணைக்



> உணவுப் பொருளுக்கும் விவசாயத்திற்கும் எவ்வளவு மானியம் வழங்க வேண்டும் என்பது கோடிக்கணக்கான மக்களின் பிரச்சினை. ஆனால் இதனை, அவர்களின் வாழ்க்கையைப் பற்றிய அக்கறையே இல்லாத நிபுணர்கள் என்ற அயோக்கியர்கள் ஏ.சி. அறையில் உட்கார்ந்துகொண்டு தீர்மானிக்கிறார்கள்.

கப்பட்டுள்ள நிபந்தனைகள். சமையல் எரிவாயுவுக்கும் மண்ணெண்ணெய்க்கும் வழங்கிவரும் மானியத்தைச் சிறுகச்சிறுக வெட்டிவரும் இந்திய அரசிற்கு; மானியத்தைப் பணமாக வழங்கும் ‘‘உங்கள் பணம் உங்கள் கையில்’’ திட்டத்தின் மூலம் சந்தை விலைக்கு உணவுப் பொருட்களை வாங்கிக் கொள்ளுவதை நோக்கி ஏழை மக்களை நெட்டித் தள்ளிவரும் இந்திய அரசிற்கு உ.வ.க. விதித்துள்ள நிபந்தனைகள் கசப்பாக இருக்கப் போவதில்லைதான். ஆனால், இந்நிபந்தனைகள் உணவுப் பாதுகாப்பு, உணவுப் பொருள் கொள்முதல் குறித்து நாடாளுமன்றத்திற்குள்ள இறையாண்மைமிக்க அதிகாரத்தைப் பறித்து, உலக வர்த்தகக் கழகத்திடம் ஒப்படைக்கின்றன என்பதுதான் இங்கு கவனிக்கத்தக்கது.

ஒருபுறம் மானிய வெட்டு, இன்னொருபுறம் ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்திலுள்ள தடைகளை நீக்குவது என்பது இந்திய விவசாயிகளை மட்டுமல்ல, சிறு உற்பத்தியாளர்கள் மீதும் இறங்கியிருக்கும் இடியாகும். பன்னாட்டு விவசாயக் கழகங்கள் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களை இந்தியாவில் கொட்டுவதற்கு இந்த ஒப்பந்தம் கதவைத் திறந்துவிட்டிருப்பதாக எச்சரிக்கிறார், சமூக ஆர்வலர் சுமன் சகாய். மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களைத் தடையின்றி இறக்குமதி செய்வது இந்தியப் பாரம்பரிய விவசாயத்தின் மீது வைக்கப்படும் கொள்ளிக்கட்டையாகும்.

இத்துணை பெரிய அபாயத்தில் நாடு சிக்கவைக்கப்பட்டிருக்கும்பொழுது, இந்தியத் தரகு முதலாளித்துவக் கும்பலோ இந்த ஒப்பந்தத்தை ஆரவாரத்தோடு வரவேற்றுள்ளது. அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் உள்ளிட்ட பசிபிக் கடலையொட்டிய நாடுகளுக்குத் தமது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் உள்ள தடைகள் இந்த ஒப்பந்தத்தால் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கைதான் தரகு முதலாளித்துவக் கும்பலின் குதூகலத்திற்குக் காரணம். இந்தக் கும்பலின் ஆதாயத்திற்காக விவசாயிகள், ஏழை மக்களின் நலன் பாலி மாநாட்டில் காவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

உணவுப் பொருளுக்கும் விவசாயத்திற்கும் எவ்வளவு மானியம் வழங்க வேண்டும், எப்படி வழங்க வேண்டும் என்பதெல்லாம் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையோடு நேரடியாகச் சம்பந்தப்பட்ட பிரச்சினை. ஆனால், இந்திய அரசோ இது குறித்து எந்தவொரு விவரத்தையும் சாதாரண பொதுமக்கள் தெரிந்து கொள்ளும்படி வெளியிடாமல்; இதனால் பாதிக்கப்படக் கூடிய விவசாயிகளிடமோ, ஏழை மக்களிடமோ, விவசாய சங்கங்கள், நுகர்வோர் அமைப்புகளிடமோ எந்தவொரு கலந்தாலோசனையும் நடத்தாமல்; கையெழுத்திடுவதற்கு முன் நாடாளுமன்றத்தில் விவாதிப்பதைக்கூடப் புறக்கணித்துவிட்டு, அமெரிக்காவும் மேற்குலக ஏகாதிபத்திய நாடுகளும் நீட்டிய அடிமைச் சாசனத்தில் கையெழுத்திட்டுத் திரும்பியிருக்கிறது. கோடிக்கணக்கான மக்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சினையை, அவர்களின் வாழ்க்கையைப் பற்றிய அக்கறையே இல்லாத நிபுணர்கள் என்ற அயோக்கியர்கள் ஏ.சி. அறையில் உட்கார்ந்துகொண்டு தீர்மானிக்கிறார்கள் என்பது மக்களை எந்தளவிற்கு இந்த ஆளுங்கும்பல் கிள்ளுக்கீரையாக நினைக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இந்தத் திமிரையும், நமது நாட்டு உரிமைகளை அமெரிக்காவிடம் ஒப்புக் கொடுத்துவிட்டுத் திரும்பியிருக்கும் இந்த வெட்கக்கேட்டையும், துரோகத்தனத்தையும் எதிர்த்து எந்தவொரு எதிர்க்கட்சியும் போராட முன்வரவில்லை. இந்தியாவின் அரைகுறை இறையாண்மை பாலியில் உருவப்பட்டதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்த எதிர்க்கட்சிகள், அமெரிக்க போலீசாரால் இந்தியத் தூதரக அதிகாரி தேவயானி அவமானப்படுத்தப்பட்டதற்கு எதிராக ‘‘சவுண்டு’’ விடுவதில் ஆளுங்கட்சியோடு கைகோர்த்துக் கொண்டுள்ளன. பாலி மாநாட்டு முடிவுகள் குறித்து நாடாளுமன்றத்துக்குள் கேள்வி எழுப்பித் தனது கடமையை முடித்துக்கொண்ட சி.பி.எம்., தேவயானி வழக்கில் வலதுசாரி பா.ஜ.க.விற்குப் போட்டியாக ரோட்டில் இறங்கிப் போராடுகிறது. மன்மோகன் சிங் அரசு பாலி மாநாட்டு முடிவுகளில் கையெழுத்துப் போட்டு துரோகமிழைத்திருக்கிறது என்றால், சி.பி.எம். உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பிரச்சினையை மடைமாற்றுவதன் மூலம் துரோகமிழைத்துள்ளன.

● திப்பு

# மண்டேலாவின் மறுபக்கம்

**போராளியாகச் சிறைக்குச் சென்ற மண்டேலா, சமரசவாதியாக சிறையிலிருந்து மீண்டு, ஏகாதிபத்தியங்களின் தாசனாக ஆட்சி நடத்தி மறைந்து போனார்.**

கருப்பினப் போராளியாகச் சித்தரிக்கப்படும் தென்னாப்பிரிக்காவின் முன்னாள் அதிபரான நெல்சன் மண்டேலா, கடந்த டிசம்பர் 5-ஆம் நாளன்று மறைந்துவிட்டார். ''நிறவெறிக்கு எதிராகவும் கருப்பின மக்களின் விடுதலைக்காகவும் அறவழியில் போராடி, சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்டிய பெரும் தலைவர்'' என்றும், ''கருப்பின மக்களின் உணர்வுபூர்வமான தலைவர்'' என்றும் ஏகாதிபத்தியவாதிகள் முதல் சாமானிய மக்கள் வரை அனைவராலும் அவர் போற்றப்படுகிறார்.

நீண்டகாலம் சிறையில் அடைக்கப்பட்ட கருப்பினத் தலைவர் என்பதை வைத்து அவரது தியாகத்தைப் பலரும் போற்றுகின்றனர். எனில், எல்லோராலும் உன்னதமான மனிதராகப் போற்றப்படும் மண்டேலாவை எவ்வாறு மதிப்பிடுவது? மண்டேலா விடுதலையான சமயத்திலும் அதன் பின்னரும் வரலாறு எதைக் கோரியது, அதற்கு அவர் என்ன பங்காற்றினார், அதில் அவர் சாதித்தது என்ன என்பதை வைத்து அவரை மதிப்பிடுவதே சரியானதாக இருக்கும். மாறாக, ஒருவரது கடந்தகால சேவையையும் தியாகத்தையும் மட்டுமே வைத்து மதிப்பிடுவதென்பது சரியான அணுகுமுறையாக இருக்காது.

1980-களின் இறுதியில் நிறவெறிக் கொடுமைக்கு எதிரான கருப்பின மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தால் தென்னாப்பிரிக்க நிறவெறி அரசு உலக அளவில் அம்பலப்பட்டதோடு, சோவியத் ஒன்றியமும் அதன் ஆதரவு நாடுகளும் அணிசேரா நாடுகளும் தென்னாப்பிரிக்காவைத் தனிமைப்படுத்திப் பொருளாதாரத் தடைகளையும் விதித்திருந்தன. இந்நிலையில், தென்னாப்பிரிக்க விடுதலைப் போராட்டத்தையும் மண்டேலா அங்கம் வகித்த ஆப்பிரிக்க தேசிய காங்கிரசையும் ஆதரித்து வந்த சோவியத் ஒன்றியம் 1990-களின் தொடக்கத்தில் வீழ்ச்சியடைந்து, அங்கே முதலாளித்துவம் நிலைநாட்டப்பட்டது.

சோவியத் ஒன்றிய வீழ்ச்சிக்குப் பின்னர், உலக மேலாதிக்கப் போட்டியில் முன்னிலைக்கு வந்த அமெரிக்க வல்லரசு, சோவியத் பாணி ஜனநாயகத்துக்கு மாற்றாக தனது பிராண்டு 'ஜனநாயகத்தை' முன்னிறுத்தி, தனது மேலாதிக்கத் திட்டத்தைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் வேகமாகக் காய்களை நகர்த்தியது. அதன்படியே, தென்னாப்பிரிக்க நிறவெறி பாசிச போத்தாவின் ஆட்சியை அகற்றிவிட்டு, 'ஜனநாயகம் - மனித உரிமை' என்ற முற்போக்கு முகமூடியணிந்த டி கிளார்க் ஆட்சியை அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகள் ஏற்படுத்தினர். கிரிஸ் கனி போன்ற கம்யூனிசத் தலைவர்களைப் படுகொலை செய்தும், சோவியத் சார்பிலிருந்த ஆப்பிரிக்க தேசிய காங்கிரசை கம்யூனிஸ்டுகளிடமிருந்து பிரித்தும், ஆப்பிரிக்க தேசிய காங்கிரசுடன் மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகள் சமரச உடன்பாட்டுக்கு வந்தனர். ஏகாதிபத்திய உலகிலும்கூட சமத்துவமும் ஜனநாயகமும் சாத்தியம் தான் என்ற மாயையை உருவாக்கும் திட்டத்துடன் காய்களை நகர்த்தினர். அதற்கான அடையாளமாக மண்டேலாவை முன்தள்ளினர்.

நெல்சன் மண்டேலா:
போராளியா? ஏகாதிபத்திய விசுவாசியா?



1990 பிப்ரவரியில் மண்டேலாவை விடுதலை செய்தும், ஆப்பிரிக்க தேசிய காங்கிரசு மற்றும் அதன் கூட்டணி அமைப்புகள் மீதான தடையை நீக்கியும் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தைக்கு வருமாறும் அழைத்தார், அன்றைய தென்னாப்பிரிக்க நிறவெறி அரசின் அதிபரான டி கிளார்க். அதன்படி, ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைப்பதாக ஒப்புக்கொண்டு

நிறவெறி அரசுடன் சமரச ஒப்பந்தம் போட்டார் மண்டேலா. அதைப் பயன்படுத்திக் கொண்டு அங்கே ஒரு தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவ அடிவருடி அரசை நிறுவிக் கொள்ள முயன்ற மேலை ஏகாதிபத்தியங்கள் அதில் வெற்றியும் பெற்றன.

1947-இல் இந்தியாவில் நடந்ததைப் போன்றே, முந்தைய நிறவெறி அரசால் கட்டியமைக்கப்பட்ட அரசு எந்திரமும், ஆட்சியும் அப்படியே ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் கரங்களுக்கு மாற்றப்பட்டது. நம்நாட்டில் தீண்டாமைக் கொடுமை சட்டரீதியாக ஒழிக்கப்பட்டதைப் போலவே, தென்னாப்பிரிக்காவிலும் நிறவெறிக் கொடுமை சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதேசமயம், தென்னாப்பிரிக்காவின் தங்க - வைரச்சுரங்கம் முதல் இதர கனிம வளச்சுரங்கங்களும், வங்கி, வர்த்தகம் முதலான அனைத்தும் வெள்ளை முதலாளிகளின் இரும்புப் பிடியிலேயே இருந்தன.

சிறையிலிருந்து விடுதலையான மண்டேலா, ''வெள்ளையின ஆதிக்கம், கருப்பின ஆதிக்கம் - எனும் இரண்டுவகை ஆதிக்கத்தையும் எதிர்ப்போம்! கருப்பர்களுக்கும் வெள்ளையர்களுக்குமான தென்னாப்பிரிக்காவைக் கட்டியமைப்போம்!'' என்ற கொள்கையை அறிவித்தார். தென்னாப்பிரிக்காவில் யார் ஆதிக்கம் செய்தார்கள், செய்கிறார்கள் என்பதையே மூடிமறைத்து, கருப்பின மக்களின் அரசியல் உரிமையை மறுத்து, வெள்ளையினச் சிறுபான்மையைத் தாஜா செய்யும் வகையில் இம்மோசடிக் கொள்கையை அவர் பிரகடனப்படுத்தினார். அமெரிக்கா மற்றும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களுடன் அவர் பூரிப்புடன் கைகோர்த்துக் கொண்டார். இல்லையானால், அவர் தென்னாப்பிரிக்க அதிபராகியிருக்கவே முடியாது. இந்த ஏகாதிபத்திய விசுவாசத்திற்காகவே அவருக்கும் அன்றைய தென்னாப்பிரிக்க அதிபர் டி கிளார்க்குக்கும் ஏகாதிபத்திய உலகம் நோபல் பரிசைப் பகிர்ந்தளித்தது. திட்டமிட்டே அவர் மீதான வழிபாடு ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்டது.

1994 முதல் 1999 வரை அதிபராக இருந்த மண்டேலா, வெள்ளையின பெருமுதலாளிகளின் ஆலைகளையும் வங்கிகளையும் நட்ட ஈடின்றிப் பறிமுதல் செய்து நாட்டுடைமையாக்குவதைத் தனது நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. நிறவெறி ஆட்சிக் காலத்தில் தங்கள் நிலங்களை இழந்திருந்த கருப்பின மக்கள், மண்டேலா ஆட்சிக்காலத்தில்கூட அவற்றை மீட்கவும் முடியவில்லை. ''நிலமும் கனிம வளமும் இந்நாட்டின் கருப்பின மக்களுக்கே சொந்தம்'' என்ற முழக்கத்தோடு, ஜிம்பாப்வே நாட்டின் அதிபரான ராபர்ட் முகாபே மேற்கொண்ட மேலோட்டமான நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளைக்கூட மண்டேலா தனது ஆட்சிக் காலத்தில் செய்யவில்லை.

நிறவெறிக் கொடுமையால் கருப்பின மக்கள் கொடூர சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் ஆளான தென்னாப்பிரிக்காவில், 'வெள்ளை நிறவெறிக் கொடுங்கோலர்களுடன் இனி சமாதானத்துடன் அமைதியாக வாழ்வோம்' என்பதே மண்டேலாவின் மோசடிக் கொள்கையாக இருந்தது. அவரது ஆட்சியில், நிறவெறி பாசிசக் கொடுங்கோலர்களுக்குத் தண்டனை ஏதும் கிடையாது என்பதை முன்நிபந்தனையாகக் கொண்ட ''உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான விசாரணை மன்றம்'' அமைக்கப்பட்டது. இதனால், போத்தா போன்ற நிறவெறி அரசு பயங்கரவாதிகள் முதல் படுகொலைகளை அரங்கேற்றிய வெள்ளையின நிறவெறிக் காட்டுமிராண்டிகள் வரை ஒருவர்கூட விசாரிக்கப்படவில்லை; தண்டிக்கப்படவுமில்லை.




கூலி உயர்வுக்காகப் போராடியதால், கருப்பினத்தவரின் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசு அரசால் சுட்டுக் கொல்லப்பட்ட கருப்பினச் சுரங்கத் தொழிலாளர்கள். (கோப்புப்படம்)

''கருப்புச்சிங்கம்'' என்று சித்தரிக்கபட்ட மண்டேலா, தனியார்மய - தாராளமயமாக்கலை விசுவாசத்துடன் செயல்படுத்தி, அவரது ஆட்சிக் காலத்திலேயே சாயம் வெளுத்துப்போனார். பொதுப் போக்குவரத்து, மின்சாரம் முதலான அரசுத்துறைகளைக்கூட அவர் தனியார்மயமாக்கினார். உலக வங்கித் திட்டப்படி தண்ணீரைக்கூட அவர் தனியாருக்குத் தாரை வார்த்து, கருப்பின மக்களின் தலையில் கொள்ளி வைத்தார். அவரது ஆட்சியில், முன்பணம் கட்டி மீட்டர் பொருத்தினால் தான் தண்ணீர் தரப்படும் என்று ''சூயஸ்'' முதலான பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் பகற்கொள்ளையில் இறங்கியதால், பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாமல் காலரா பரவி கொத்துக்கொத்தாக மக்கள் மாண்டு போயினர்.

தனியார் முதலாளித்துவக் கொள்ளையர்களால் ஆப்பிரிக்க மக்கள் சூறையாடப்பட்டனர். தனியார்மயத்தால் அரசாங்கமே ஊழல்மயமாகிப் போனது; வேலையின்மை தீவிரமானது. குறிப்பாக, சுரங்கத் தொழிலாளர்கள் பல்லாயிரக்கணக்கில் வேலையிழந்தனர். மறுபுறம், மண்டேலா புகுத்திய தனியார்மய - தாராளமயக் கொள்கையால் ஏகாதிபத்தியங்களுடன் கூட்டுச் சேர்ந்து பொறுக்கித் தின்னும் புதியவகை கருப்பின தரகு முதலாளிகள் உருவாகி வளர்ந்தனர். ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் கோடீசுவரத் தலைவர்களாகவும், ஏகாதிபத்தியக் கைக்கூலிகளுமான தற்போதைய தென்னாப்பிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா, துணை அதிபர் சிரில் ராமபோசா முதலானோரே இதற்குச் சாட்சியமாக உள்ளனர்.

பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளின் கொள்ளை விலையிலான மருந்துகளை வாங்க முடியாமல் எய்ட்ஸ் நோயால் தென்னாப்பிரிக்கா பரிதவித்தபோது, இந்தியா போன்ற நாடுகள் மலிவு விலையில் மருந்து கொடுக்க முன்வந்த நிலையில், அதை ஏகாதிபத்தியவாதிகள் ''காட்'' ஒப்பந்தத்தின் அறிவுசார் சொத்துரிமை விதிகளைக் காட்டித்தடுத்தபோதுகூட, மனிதாபிமான மற்ற இக்கொள்ளையர்களை மண்டேலா எதிர்க்கவில்லை. எண்ணெய் வளத்தைக் கொள்ளையிட்டு மக்களின் வாழ்வாதாரத்தையும் சுற்றுச்சூழலையும் நாசமாக்கியதோடு, அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்ட பன்னாட்டு ஏகபோக ''ஷெல்'' எண்ணெய் நிறுவனத்துக்கு எதிராகப் போராடிய பிரபல கருப்பின மனித உரிமைப் போராளியும் கவிஞருமான கென் சரோ விவாவை நைஜீரிய சர்வாதிகார அரசு 1995-இல் தூக்கிலிட்டுக் கொன்றபோது, அதற்கெதிராகக் கண்டனம் தெரிவிக்கக்கூட மண்டேலா முன்வரவில்லை. கடந்த 2012-ஆம் ஆண்டில் மரிக்கானா சுரங்கத்தில் கூலியுயர்வுக்காகப் போராடிய கருப்பின மக்கள், ஆப்பிரிக்க தேசிய காங்கிரசு அரசின் போலீசுப் படைகளால் கோரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டபோதுகூட, அவர் வாய் திறக்கவில்லை.



மண்டேலா ஆட்சியின் 'மகிமை'யைச் சித்தரிக்கும் கேலிச்சித்திரம் (கோப்புப் படம்)

தென்னாப்பிரிக்காவில், நிறவெறி ஆதிக்கத்தின் ஊடாகத்தான் வர்க்க ஆதிக்கம் செலுத்தப்பட்டது. வர்க்க ஒடுக்குமுறையின் ஊடாகத்தான் நிறவெறி ஆதிக்கமும் சாதிய ஆதிக்கமும் இயங்குகிறது. இருப்பினும், வர்க்க அரசியலால் நிறவெறிக் கொடுமைக்குத் தீர்வு காண முடியாது என்று கூறிக் கொண்டு, நிறவெறி எதிர்ப்புப் போராட்டத்தை அடையாள அரசியலாக்கி, வர்க்கப் போராட்ட அரசியலை எதிர்க்கும் திருப்பணியை ஏகாதிபத்தியவாதிகளும் தன்னார்வக் குழுக்களும் மேற்கொண்டபோது, அதற்கான அடையாளமாக மண்டேலா தூக்கி நிறுத்தப்பட்டார். வர்க்க ஒடுக்குமுறையைத் தீவிரமாக்கியதுதான் அவரது பங்களிப்பாகிப் போனதோடு, இத்தகைய அடையாள அரசியலின் படுதோல்விக்கு மண்டேலாவே முன்னுதாரணமாகி நிற்கிறார்.

அவரது விடுதலைக்காகப் போராடிய உலகெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள், அமெரிக்காவின் ஆப்கான், இராக் மீதான ஆக்கிரமிப்புப் போர்களுக்கு எதிராகவும் போராடினர். ஐந்தாண்டு காலம் அதிபராகப் பதவியில் நீடித்த மண்டேலா, அடுத்துவந்த தேர்தலில் போட்டியிடாமல் பொதுவாழ்விலிருந்தும் ஒதுங்கிக் கொண்ட காலத்தில்தான் அமெரிக்காவின் இம்மேலாதிக்க ஆக்கிரமிப்புப் போர்கள் நடந்தன. ஆனால், மண்டேலா ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் நிற்காமல், ஏகாதிபத்தியவாதிகளின் பக்கம் நின்றதோடு, இக்கொடிய ஆக்கிரமிப்புப் போர்களின்போது செயலற்ற வெறும் பார்வையாளராகவே இருந்தார்.

1960-களில் காங்கோவில் பெல்ஜிய காலனியாதிக்கத்தை எதிர்த்து பாட்ரீஸ் லுமும்பாவும், கென்யாவில் பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தை எதிர்த்து ஜோமோ கென்யட்டாவும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் வெற்றியை ஈட்டிய வரலாறு அவரது கண்ணெதிரே இருந்தது. அவர் சிறையிலிருந்த காலத்திலும், விடுதலையான காலத்திலும் கினியா பிசாவ், அங்கோலா, மொசாம்பிக் முதலான நாடுகளில் கம்யூனிஸ்டுகளும் நாட்டுப்பற்றாளர்களும் இணைந்து ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியாக நின்று, ஆயுதப் போராட்டப் பாதையில் முன்னேறி, அதில் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டிய சாதகமான நிலைமையும் இருந்தது. ஒரு தலைவர் என்ற முறையில், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான பொறுப்பும் கடமையும் இருந்தபோதிலும், அவர் உணர்வுப் பூர்வமாக அறிந்தே அவற்றைத் தவிர்த்தார்.

அவர் ஏகாதிபத்திய சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல் அதற்குப் பலியாகிவிட்டார் என்றும் கூற முடியாது. தெரிந்தேதான் அவர் ஏகாதிபத்தியங்களின் மறுகாலனியாதிக்கக் கொள்கைகளை விசுவாசத்துடன் ஆதரித்தார். இதனால்தான், ஸ்டீவ் பிகோ போன்ற கருப்பினப் போராளிகள் கொல்லப்பட்டும் சிறையிடப்பட்டும் மாண்டுள்ள போதிலும், மண்டேலாவை மட்டுமே ஏகாதிபத்திய உலகம் போற்றிப் புகழ் பாடுகிறது. அன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளால் ஊட்டிவளர்க்கப்பட்ட இந்தியாவின் காந்தியைப் போல, இன்று அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகளுக்கு அகிம்சாமூர்த்தியாக மண்டேலா விளங்குகிறார். எவ்வாறு பாசிச எம்.ஜி.ஆரை வள்ளலாகவும் மனித நேயராகவும் சித்தரிக்கின்றனரோ, அவ்வாறே எல்லோருக்கும் நல்லவராகவும், வர்க்க அரசியலுக்கு அப்பாற்பட்ட அமைதி வழியிலான போராளியாகவும் அவர் சித்தரிக்கப்படுகிறார்.

சுருக்கமாகச் சொன்னால், தமது ஆதிக்க நோக்கங்களுக்காக ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்திக் கொண்டதற்கு மேல், மண்டேலாவின் நீண்டகால சிறைவாசமும் தியாகமும் வேறொன்றையும் சாதிக்கவில்லை. ஏகாதிபத்தியங்களால் நிறுவனமயமாக்கப்பட்டு அதற்கு தன்னைத்தானே ஒப்புக்கொடுத்ததற்கு மேல் மண்டேலா எதையும் சாதிக்கவுமில்லை. கசப்பானதாக இருந்தாலும் இதுதான் உண்மை!

● பாலன்

# அதிகார போதையில் ஆட்டம் போட்டு அம்பலப்பட்டு நிற்கும் ஓம்சக்தி சேகர் கும்பல்



தமிழக மக்களுக்குச் சொந்தமான தில்லை நடராசர் கோயிலைப் பார்ப்பன தீட்சிதர்களின் தனிச்சொத்தாக்க உச்ச நீதி மன்றத்தில் பார்ப்பனக் கும்பல் நடத்திவரும் வழக்கு பற்றியும், பார்ப்பன கும்பலோடு கைகோர்த்துக் கொண்டுள்ள பாசிச ஜெயா அரசின் சதிகளைத் தோலுரித்துக் காட்டியும், புதுச்சேரியில் கடந்த 4.12.2013 அன்று பு.ஜ.தொ.மு. தோழர்கள் பொதுமக்களிடம் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துப் பிரச்சாரத்தை மேற் கொண்டபோது, தனது ரவுடிகளுடன் வந்த புதுச்சேரி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரான ஓம்சக்தி சேகர், பிரச்சாரம் செய்த தோழர்கள் மூவரின் சட்டையைக் கிழித்துக் கொடூரமாகத் தாக்கியதோடு, மக்களிடம் நன்கொடையாகத் திரட்டிய உண்டியல் பணத்தையும் பறித்துக் கொண்டான். தன்னைப் பிரபலப்படுத்திக் கொண்டு புதுவை மாநிலச் செயலாளர் பதவியைப் பெற முயற்சிக்கும் அந்த அ.தி.மு.க. ரவுடி, பத்திரிகையாளர்களையும் உடனழைத்துவந்து போலீசு முன்பும் பொதுமக்களின் முன்பும் இக்காலித்தனத்தை நடத்தியுள்ளான்.

இக்கொடிய தாக்குதலை நடத்திய ஓம்சக்தி சேகரைக் கொலை முயற்சி வழக்கில் கைது செய்யக் கோரி உடனடியாக போலீசிடம் புகார் கொடுக்கப்பட்டது. தோழர்கள் தாக்கப்பட்ட செய்தி படங்களுடன் நாளேடுகளில் வெளியானதும் சி.பி.ஐ. (எம்.எல்), அ.இ.பார்வர்டு பிளாக், ஆர்.எஸ்.பி, ம.ம.கட்சி, தி.வி.கழகம், மா.பெ.பொதுவுடமைக் கட்சி, புதுவை மாணவர் கூட்டமைப்பு, தி.க., பெரியார் சிந்தனையாளர் இயக்கம், மக்கள் உரிமைக் கூட்டமைப்பு, பண்டிதர் அயோத்திதாசர் பேரவை, தந்தை பெரியார் தி.க; பகுஜன் சமாஜ் கட்சி., மனித உரிமைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புக் கழகம் ஆகிய கட்சிகளும் அமைப்புகளும் இணைந்து, இக்கொலைவெறித் தாக்குதலைக் கண்டித்தும் ஓம் சக்தி சேகரைக் கொலைமுயற்சி வழக்கில் கைது செய்யக் கோரியும் அறிக்கை வெளியிட்டனர்.



ஒரு வார காலமாகியும் போலீசு நடவடிக்கை எடுக்காத நிலையில், இத்தாக்குதலோடு ஏற்கெனவே உள்ள ஓம்சக்தி சேகர் மீதான கிரிமினல் புகார்கள் மீதும் நடவடிக்கை எடுத்துத் தண்டிக்கக் கோரி பு.ஜ.தொ.மு. சார்பில் உயர் போலீசு அதிகாரிகளிடமும் புதுவை சட்டமன்ற சபாநாயகரிடமும் புகார் மனு கொடுக்கப் பட்டது. மறுபுறம், ஓம்சக்தி சேகர் குடியிருக்கும் பகுதியில் பு.ஜ.தொ.மு. தோழர்கள் அவனை அம்பலப்படுத்தி வீடுவீடாகப் பிரச்சாரத்தையும் மேற்கொண்டனர். இதனால், ஓம்சக்தி சேகர் கும்பல் போலீசுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கவே, பிரச்சாரத்தை நிறுத்துமாறு மிரட்டிய போலீசு, அது பலிக்காமல் போனதால்,வேறு வழியின்றி சேகர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது. பு.ஜ.தொ.மு.வின் தொடர் பிரச்சாரத்தாலும் ஜனநாயக சக்திகளின் அழுத்தத்தாலும் எம்.எல்.ஏ.சேகர் மீது இது முதல் அடியாக விழுந்தது.

இதைத் தொடர்ந்து, ரவுடி ஓம்சக்தி சேகர் மீது கொலைமுயற்சி வழக்கு பதிவு செய்து தண்டிக்கக் கோரி 11.12.2013 அன்று காலை புதுச்சேரி அண்ணா சிலை அருகில் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை பு.ஜ.தொ.மு. நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருந்த போது ஓம்சக்தி சேகர் திரட்டிவந்த 30 பேர் கொண்ட குண்டர் படை, கூச்சலிட்டபடியே கூட்டத்தினர் மீது கல்லெறிந்து ஆர்ப்பாட்டத்தை நடத்த விடாமல் தடுக்க முயற்சித்தது. போலீசோ, இக்குண்டர்களைக் கைது செய்யாமல் அவர்களிடம் சமரசம் பேசியதோடு ஆர்ப்பாட்டத்தையும் நிறுத்தக் கோரியது. செஞ்சட்டை தோழர்கள் தமது கரங்களை இணைத்து சங்கிலியாக்கிக் கொண்டு, கூட்டத்தைச் சுற்றிப் பாதுகாப்புடன் நின்றதோடு, ரவுடிகளை எதிர் கொள்ளவும் தயாரானதும், கூச்சலிட்டு ஆரவாரம் செய்த அந்தக் கும்பல் தோழர்களின் உறுதியைக் கண்டு பின்வாங்கி ஒதுங்கிக் கொண்டது. இவையனைத்தும் நேரடி காணொளிக் காட்சியாக இணையத்தில் வெளியிடப்பட்டு இந்த ரவுடிக் கும்பல் மேலும் அம்பலப்பட்டுப் போயுள்ளது. இத்தனைக்கும் பிறகும் இந்த ரவுடிக் கும்பலை போலீசு கைது செய்யவில்லை. போலீசு மற்றும் நீதித் துறையின் மூலம் இத்தகைய அரசியல் ரவுடிகளை முறியடிக்க முடியாது என்பதையும், அமைப்புரீதியாக மக்களைத் திரட்டித் தெருப் போராட்டங்களை நடத்துவதன் மூலம் இத்தகைய மக்கள் விரோதிகளை எதிர்கொண்டு முறியடிக்க வேண்டியிருப்பதையுமே இன்றைய மறுகாலனியாதிக்கச் சூழல் நிரூபித்துக் காட்டுகிறது.

– பு.ஜ.செய்தியாளர், புதுவை.

# நோக்கியா:

# கையளவு தொலைபேசியில் கடலளவு கொள்ளை!

பன்னாட்டு நிறுவனங்கள் அடிக்கும் கொள்ளைக்கும், அந்நிய முதலீட்டின் யோக்கியதைக்கும் நோக்கியா ஒரு துலக்கமான எடுத்துக்காட்டு.

இந்தியாவில் இன்று அந்நிய முதலீடு நுழைய முடியாத தொழில் துறையோ, நிதி-சேவைத் துறைகளோ ஏறத்தாழ இல்லை என்றே கூறிவிடலாம். அந்நிய முதலீடுதான் வளர்ச்சியின் அறிகுறி என்றவாறு ஒரு பொதுக்கருத்து உருவாக்கப்பட்டுள்ளது. அந்நிய முதலீடைக் கவருவதற்காக ஏராளமான சலுகைகள் - வரிச் சலுகைகள், குறைவான வட்டியில் கடன், அடிமாட்டு விலைக்கு நிலம் உள்ளிட்ட அடிக்கட்டுமான வசதிகள் என வாரியிறைக்கப்படுகின்றன. அந்நிய முதலீடின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கும் பழைய சட்டங்கள் ரத்து செய்யப்படுகின்றன. அமலில் உள்ள சட்டங்கள் செல்லுபடியாகாத சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்படுகின்றன. இந்தச் சலுகைகளை யாரும் கேள்விகேட்கக் கூடாது என வாய்ப்பூட்டுச் சட்டம் போடாத குறையாக, அந்நிய முதலீட்டிற்குச் சிவப்புக் கம்பளம் விரிக்கப்படுகிறது.

அந்நிய முதலீடு வருவது அதிகரித்தால் நாட்டின் ஏற்றுமதி பெருகி நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு அதிகரிக்கும் என்றார்கள். ஆனால், நான்கைந்து மாதங்களுக்கு முன்பு அந்நிய முதலீட்டாளர்கள் நாட்டிலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து, அந்நியச் செலாவணிக் கையிருப்பு குறைந்து, அதனால் ரூபாயின் மதிப்பு சரிந்து விழுந்ததைக் கண்டோம். தனியார்மயம் உருவாக்கும் தொழில் வளர்ச்சி வேலைவாய்ப்பற்ற வளர்ச்சி என முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களே ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அந்நிய முதலீடு உருவாக்கியிருக்கும் வேலைவாய்ப்புகளைப் பற்றிப் பேசுவதில் பொருள்கிடையாது. அந்நிறுவனங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களோ வேலை உத்திரவாதம் இன்றி, அடிமாட்டுக் கூலிக்குக் கொத்தடிமைகளாக நடத்தப்படுவதை மாருதி தொழிலாளர்களின் போராட்டம் நாடெங்கும் அம்பலப் படுத்தியது.

அமெரிக்காவின் என்ரான் நிறுவனம் திவாலானபொழுது அந்நிறுவனம் இந்தியப் பொதுத்துறை வங்கிகளிடம் கடன் வாங்கித்தான் மகாராஷ்டிரா மாநிலத்தில் முதலீடு செய்திருப்பது அம்பலமானது. தமிழகத்தில் மிகுந்த ஆரவாரத்துடன் நுழைந்த நோக்கியாவிற்கு, அந்நிறுவனம் கொண்டுவந்த மூலதனத்தைவிடப் பல மடங்கு பெறுமான சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கிறது.

அந்நிய முதலீடு நாட்டை வளமாக்கவில்லை; நாட்டின் வளத்தைக் கொள்ளையடித்துச் செல்கிறது; அந்நிய முதலாளிகள் அரசாங்கம் அளித்துள்ள அத்துணை சலுகைகளையும் அனுபவிப்பதோடு, அதற்கு மேலும் சட்டவிரோதமான வழிகளில் நாட்டின் வளங்களைத் திருடிச் செல்கிறார்கள் என்பதை ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, நோக்கியா விவகாரத்தைக் கொண்டே விளங்கிக் கொள்ளலாம்.

•••

நோக்கியாவுக்கும் தமிழக அரசுக்கும் இடையே சிறீபெரும்புதூரில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏப்ரல், 2005-இல் அ.தி.மு.க. ஆட்சியில் கையெழுத்தானது. 2006-இல் பதவிக்கு வந்த தி.மு.க. ஆட்சி இந்த

நோக்கியாவின் சுரண்டல் – கொத்தடிமை கொடூரத்துக்குப் பலியான தொழிலாளி அம்பிகாவின் தாய்: தாளமாட்டாத துயரத்தில்... (கோப்புப் படம்)



ஒப்பந்தத்தைப் பொதுமக்களின் பார்வையே படாதவாறு, காத்துவந்தது. சென்னையைச் சேர்ந்த 'சிட்டிசன்ஸ் ரிசர்ச் கலெக்டிவ்' என்ற தன்னார்வ நிறுவனம் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் போராடி இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பெற்ற பிறகுதான், தமிழகம் நோக்கியா என்ற பூதத்தின் வாயில் சிக்கியிருக்கும் உண்மை அம்பலமானது.

இந்த ஒப்பந்தத்தின்படி ஏக்கருக்கு 4.5 இலட்சம் ரூபாய் என்ற கணக்கில் சிப்காட்டுக்குச் சொந்தமான 210.87 ஏக்கர் நிலம் 99 ஆண்டுகள் குத்தகைக்கு நோக்கியாவுக்குத் தரப்பட்டிருக்கிறது. இதனால் சிப்காட்டுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு மட்டும் ஏறத்தாழ 7.4 கோடி ரூபாய். இந்தக் குத்தகையைப் பதிவு செய்வதற்கான 4% முத்திரைத்தாள் கட்டணத்தையும் தள்ளுபடி செய்ததுடன், தனது தேவைக்குப் போக மீதமுள்ள நிலத்தைப் பிற நிறுவனங்களுக்குக் கூடுதல் விலைக்குக் குத்தகைக்கு விடுவதற்கான உரிமையையும் நோக்கியாவுக்கு வழங்கியது, தமிழக அரசு.



நோக்கியாவின் துணை நிறுவனமான ஃபாக்ஸ்கான் ஆலையில் ஏற்பட்ட விஷவாயுக் கசிவால் பாதிக்கப்பட்ட தொழிலாளி மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லப்படுகிறார். (கோப்புப் படம்)

நோக்கியா தனது கைபேசியை உள்நாட்டில் விற்பனை செய்வதன் மூலம் செலுத்தும் ''வாட்'' வரியையும் மத்திய விற்பனை வரியையும் தமிழக அரசு திருப்பிச் செலுத்தும் என்பது ஒப்பந்தத்திலுள்ள முக்கியமான சலுகை. கைபேசி வாங்கும் குடிமக்கள் செலுத்தும் வரி அரசின் கஜானாவுக்குப் போகாமல், நோக்கியாவிற்குத் திருப்பிவிடப்பட்டிருக்கிறது. இச்சலுகையை ஒரே வரியில் சொன்னால், இது நோக்கியா சட்டபூர்வமாக நடத்தியிருக்கும் வரிச் சுருட்டல். இச்சலுகையின் கீழ் 2005-ஆம் ஆண்டு தொடங்கி அடுத்த நான்கு ஆண்டுகளில் தமிழக அரசு நோக்கியாவுக்குத் தூக்கிக் கொடுத்துள்ள தொகை ஏறத்தாழ 650 கோடி ரூபாய். இதோடு, தமிழக அரசு நோக்கியாவுக்கு வழங்கிய மற்ற சலுகைகளையும் சேர்த்துக் கணக்கிட்டால், நோக்கியா வெண்ணலையாக அடைந்த ஆதாயம் மட்டும் 1,020.4 கோடி ரூபாய்.

தமிழக அரசின் சலுகைகள் ஒருபுறமிருக்க, நோக்கியா நிறுவனம் சிறப்புப் பொருளாதார மண்டலமாகச் செயல்பட்டு வருவதால் மைய அரசு அந்நிறுவனத்திற்கு சுங்க வரி, உற்பத்தி வரி விலக்குகளை அளித்திருக்கிறது. இந்த இரண்டு வரி விலக்குகள் காரணமாக நோக்கியா 2005-06 மற்றும் 2006-07 ஆகிய இரு ஆண்டுகளில் மட்டும் அடைந்துள்ள மறைமுக இலாபம் 681.38 கோடி ரூபாய். இவை தவிர, வருமான வரி உள்ளிட்ட நேரடி வரிச் சலுகைகள், ஏற்றுமதி வரிச் சலுகைகளால் நோக்கியா தனது முதல் மூன்று ஆண்டுகளில் அடைந்த மறைமுக இலாபம் தோராயமாக 8,000 கோடி ரூபாய்.

நோக்கியா சிறீபெரும்புதூரில் தனது தொழிற்சாலையைத் தொடங்க போட்ட முதலீடே 650 கோடி ரூபாய்தான் என்பதனை இச்சலுகைகளோடு ஒப்பிட்டால்தான் நோக்கியா அடித்திருக்கும் பகற்கொள்ளையின் பரிணாமம் பிடிபடும். இந்த இலாபக்கணக்கில் நோக்கியா தனது தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியைச் சுரண்டியதன் மூலம் அடைந்துள்ள அதிரடி இலாபம் கணக்கில் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நோக்கியாவில் 10,000 தொழிலாளர்களும், ஃபாக்ஸ்கான் உள்ளிட்ட அதன் துணை நிறுவனங்களில் ஏறத்தாழ 15,000 தொழிலாளர்களும் வேலைபார்த்து வருகின்றனர். நோக்கியாவைச் சேர்ந்த 10,000 தொழிலாளர்களுள் வெறும் 3,800 பேர்தான் நிரந்தரத் தொழிலாளர்கள். மீதியுள்ளவர்களைப் பயிற்சித் தொழிலாளர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள் எனப் பிரித்துவைத்து வேலை வாங்கி வருகிறது, நோக்கியா. நிரந்தரத் தொழிலாளர்களும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். குறைந்த கூலி கொடுப்பதற்காக மட்டுமின்றி, தொழிலாளர்கள் ஒன்றாக அணிதிரண்டு விடக் கூடாது என்ற தீய நோக்கத்திலும் இந்தப் பிரிவினையை ஏற்படுத்தியிருக்கிறது, நோக்கியா.

நோக்கியா, ஐரோப்பிய நாடுகளில் உள்ள தனது ஆலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்குக் கொடுக்கும் மாதாந்திர சராசரி சம்பளம் 2.5 இலட்ச ரூபாய். அதேசமயம் அதனின் சிறீபெரும்புதூர் ஆலையைச் சேர்ந்த நிரந்தரத் தொழிலாளிக்கு வழங்கப்பட்ட சராசரி மாதச் சம்பளம் வெறும் 7,000 ரூபாய். பயிற்சித் தொழிலாளிகள், ஒப்பந்தத் தொழிலாளிகள், துணை நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களின் மாதக்கூலியோ ஏழாயிரத்துக்கும் கீழே. கூலியில் காணப்படும் இந்த பிரம்மாண்டமான வேறுபாடு எவ்வளவு கொடூரமான உழைப்புச் சுரண்டலுக்குள் தொழிலாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகிறது என்றால், ஃபாக்ஸ்கான் ஆலையில் அம்பிகா என்ற பெண் தொழிலாளியின் கழுத்து ஒரு இயந்திரத்தில் சிக்கி, அவ்வியந்திரத்தால் கரகரவென்று அறுத்துக் கொல்லப்பட்ட பயங்கரம் ஆலையினுள் தொழிலாளர்கள் கொத்தடிமைகளைவிடக் கேவலமாக நடத்தப்பட்டதை அம்பலப்படுத்தியது.

சிறீபெரும்புதூர் ஆலையில் நாளொன்றுக்கு 4.5 இலட்சம் கைபேசிகள் தயாரிக்க வேண்டும் என நிர்ண

யிக்கப்பட்ட உற்பத்தி இலக்கு, பின் படிப் படியாக 6.8 இலட்சமாக உயர்த்தப்பட் டதாம். இந்த அதிகரித்த உற்பத்தி இலக்கு தொழிலாளர்களைத் தமது உயிரைப் பண யம் வைத்து இயந்திரங்களோடு போட்டி யிட்டு வேலைசெய்யக்கூடிய ''ரோபோ''க் களாக மாற்றியிருக்கிறது. இந்த அராஜக மான உற்பத்தி இலக்கும், அதன் பின்னுள்ள முதலாளித்துவ இலாப வெறியும்தாம் அம்பிகாவின் உயிரைப் பறித்தது.

> கிழக்கிந்திய கம்பெனியும் பிரிட்டன் ஏகாதிபத்தியமும் நாட்டின் வளங்களைக் கொள்ளையடித்துச் சென்ற கடந்த காலம் காலனி ஆதிக்கம் என்றால், நிகழ்காலத்தில் பல ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் இந்தியாவின் செல்வங்களைச் சட்டவிரோதமாகவும் சட்டபூர்வமாகவும் கொள்ளையடித்துச் செல்வதை மறுகாலனியாதிக்கம் என்றுதான் சொல்ல முடியும்.

அம்பிகா ஆலையின் இயந்திரத்தில் சிக்கிக்கொண்டு இறப்பதற்கு ஒரு மாதம் முன்னதாக அவ்வாலையில் விஷவாயு கசிவு ஏற்பட்டு 260 -க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மயங்கிச் சரிந் தனர். சில தொழிலாளர்கள் இரத்த வாந்தி எடுக்கும் அபாய கட்டத்திற்குப் போனார்கள். ஆனால், ஆலை நிர்வாகமோ, ''பசி மயக்கம், மத்தபடி ஒண்ணுமில்ல'' எனப் பூசிமெழுகி இந்த விபத்தை அப்படியே அமுக்கி விட்டது.

கொடூரமான உழைப்புச் சுரண்டல், எந்தவிதமான உரிமைகளும் அற்ற கொத்தடிமைத்தனம் என்ற இந்த முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு எதிராகத் தொழி லாளர்கள் கூலி உயர்வு, சங்கம் வைக்கும் உரிமை கேட்டுத் தன்னெழுச்சியாகப் போராட்டத்தில் குதித்த போதெல்லாம், போராட்டத்தில் முன்னணியில் நின்ற தொழிலாளர்களை வேலையிலிருந்து இடைநீக்கம் செய்து, அப்போராட்டங்களை ஒடுக்கியது ஆலை நிர் வாகம். நோக்கியா ஆலையில் வேலைநிறுத்தம் நடை பெறுவதைத் தடை செய்ய வேண்டும் என்பதற்காகவே, இந்த ஆலையைப் பொதுச் சேவைக்கானது என அறி வித்து, நோக்கியாவின் பயங்கரவாதத்துக்கு பாதுகாப்பு அளித்தது, தமிழக அரசு.

நோக்கியாவின் இந்தத் தொழிலாளர் விரோதப் போக்கு ஒருபுறமிருக்க, அந்நிறுவனத்திடம் சாதாரண வியாபாரிகளிடம் காணப்படும் வர்த்தக நேர்மைகூட இருந்தது கிடையாது. சிறீபெரும்புதூர் ஆலையில் உற் பத்தி செய்யப்படும் கைபேசிகளில் 50 சதவீதத்தை ஏற்று மதி செய்யப் போவதாகப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பம் போட்டுக் கொடுத்திருக்கும் நோக்கியா, உற்பத்தியில் 70 சதவீதத்தைச் சட்டவிரோதமான முறையில் உள்நாட்டுச் சந்தையிலேயே விற்று கல்லா கட்டியிருக்கிறது. இந்த வர்த்தகப் பித்தலாட்டத் தனத்தால் மைய அரசிற்கு ஏற்பட்டுள்ள சுங்க வரி இழப்பு மட்டும் 681.36 கோடி ரூபாய்.

இந்தத் திருட்டுத்தனங்கள் ஒருபுறமிருக்க, நோக்கியா 21,000 கோடி ரூபாய் அளவிற்கு வரி ஏய்ப்பு செய்திருப் பதும் தற்பொழுது அம்பலமாகியிருக்கிறது. வடதமிழ கத்தில் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள சிறீபெரும்புதூரில் அமைந்துள்ள நோக்கியா ஆலையில் தயாரிக்கப்படும் கைபேசிகளுக்கான மென்பொருளை பின்லாந்திலுள்ள தனது தாய் நிறுவனமான நோக்கியா கார்ப்பரேஷனிட மிருந்து இறக்குமதி செய்து வருகிறது, நோக்கியா இந்தியா. இப்படி வாங்கப்படும் மென்பொருளுக்கு அதற்கான விலையோடு, ராயல்டி தொகையும் செலுத்தி வருவதாகக் கணக்குக் காட்டப்பட்டுள்ளது. இந்த ராயல்டி தொகை மட்டும் சுமார் 25,000 கோடி. இதில் பத்து சதவீதம் வரியாக செலுத்தப்பட் டிருக்க வேண்டும். கடந்த 8 ஆண்டுகளாக இந்தவரியை நோக்கியா செலுத்தவும் இல்லை. அதனை வசூலிக்க இந்திய அரசு இந்த 8 ஆண்டுகளில் நடவடிக்கை எடுக் கவும் இல்லை. ராயல்டிக்கான வரி மட்டு மின்றி வெவ்வேறு இனங்களில் கீழ் இந்திய அரசுக்குச் சேர வேண்டிய 21,000 கோடி ரூபாய் வரிப்பணம் பின்லாந்திற்குக் கடத்தப்பட்டுவிட்டது.

ஃபாக்ஸ்கான் ஆலையில் நிர்வாகத்தின் அலட்சியத்தால் நேர்ந்த விஷவாயுக் கசிவைக் கண்டித்து அவ்வாலையின் முன் நடந்த தொழிலாளர்களின் போராட்டம். (கோப்புப் படம்)



இந்த வரிஏய்ப்பு விவகாரம் தொடர் பாக இந்திய அரசிற்கும் நோக்கியா கார்ப் பரேஷனுக்கும் இடையே சட்டப் போராட்டம் நடந்துகொண்டிருந்த சமயத் தில் நோக்கியா கார்ப்பரேஷன் தனது ஆலைகளை மைக்ரோசாஃப்ட் நிறுவனத் திற்கு விற்றுவிட்டு, கம்பி நீட்டுவதற்குத்

தயாரானது. டிச.12, 2013-க்குள் நோக்கியாவின் சிறீ பெரும்புதூர் ஆலையை மைக்ரோசாஃப்ட் நிறுவனத் திற்குக் கைமாற்றிவிட வேண்டும் என முடிவாகியிருந்த நிலையில் வருமானவரித் துறை டெல்லி உயர் நீதிமன்றத்தின் ஒப்புதலோடு நோக்கியா இந்தியா நிறுவனச் சொத்துக்களை முடக்கியது.

இதற்குப் பின்னரும் வரிபாக்கியைக் கட்ட நோக்கியா தயாராக இல்லை. ஒரு சொத்து என்ற முறையில் சென்னை ஆலைக்கு எந்த மதிப்பும் கிடையாது. நாங்கள் அந்த ஆலையின் பயன்பாட்டு உரிமையை மட்டுமே மைக்ரோசாப்டுக்கு விற்கிறோம். அதனைப் பயன்படுத்துவதோ, கைவிடுவதோ மைக்ரோசாப்டின் விருப்பம். எங்கள் சொத்துகளை முடக்கும் உத்தரவைத் திரும்பப்பெற்றால்தான் நாங்கள் எங்களது நிறுவனத்தை மைக்ரோசாப்டிற்கு விற்கமுடியும். அவ்வாறு திரும்பப் பெறமுடியாதென்றால், சரியாக ஒரு ஆண்டிற்குள் சென்னை ஆலை முழுவதையும் மூடிவிடுவோம் என்று மிரட்டியது நோக்கியா. காரணம், சென்னையில் நோக்கியா போட்ட முதலீடு வெறும் 650 கோடி ரூபாய். 8 ஆண்டு தேய்மானத்துக்கான மதிப்பைக் கழித்து விட்டால், அந்த ஆலையின் எந்திரங்களுக்கு அவ்வளவுதான் - காயலான் கடை மதிப்புதான். ஆனால், நோக்கியா கட்ட வேண்டியிருக்கும் வேண்டிய வரி பாக்கியின் மதிப்போ 21,000 கோடி ரூபாய். ஆலையை மூடினால் தெருவுக்கு வரக்கூடிய தொழிலாளர்கள் 25,000 பேர். இவர்களைப் பிணையக்கைதிகளாக வைத்து பேரம் நடத்தியது நோக்கியா. தீர்ப்பு அதற்குச் சாதகமாகவே அமைந்தது.



நோக்கியாவை மைக்ரோசாஃப்ட் நிறுவனம் கையகப்படுத்தியதையடுத்து, 1000-க்கும் மேற்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள் நீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி சிறீபெரும்புதூரில் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

''முடக்கப்பட்ட நோக்கியா இந்தியாவின் சொத்துக்களை விடுவித்தும்; நோக்கியா இடைக்காலத் தொகையாக 2,250 கோடி ரூபாயை அரசுக்குச் செலுத்துவதோடு, முழுத் தொகையைச் செலுத்துவதற்கான வாக்குறுதியை அளிக்க வேண்டும்'' என உத்தரவிட்டும் டெல்லி உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. இப்படியொரு சமரச ஏற்பாட்டைச் செய்யாவிட்டால் தொழிலாளர்களின் வாழ்க்கை பறிபோய்விடும் என இத்தீர்ப்புக்கு ஒரு நொண்டிச்சாக்கும் முன்வைக்கப்படுகிறது.

வரி ஏய்ப்பு, வியாபாரப் பித்தலாட்டம், சுரண்டல், கொத்தடிமைத்தனம், கொலை, விபத்து - எனப் பலவிதமான கிரிமினல் குற்றங்களைச் செய்திருக்கும் நோக்கியா, ஏய்த்த வரியைக் கட்டச் சொன்னவுடன், இந்தியாவில் தனக்கு நீதி மறுக்கப்படுவதாகக் கூப்பாடு போட்டு வருகிறது. இந்தியாவிற்கும் பின்லாந்திற்கும் இடையே கையெழுத்தாகியுள்ள இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தின்படி, இந்த வரியை இந்தியாவில் கட்டத் தேவையில்லை என வாதாடி வருகிறது.

பன்னாட்டுத் தொழிற்கழகங்களையும், அந்நிய முதலீட்டையும் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்பதற்காக இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம், இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம், இருதரப்பு முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தம், விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் எனப் பல்வேறு பெயர்களில் முதலீட்டு ஒப்பந்தங்களை ஏறத்தாழ 80 நாடுகளோடு இந்தியா போட்டு வைத்திருக்கிறது. இந்த ஒப்பந்தங்கள் இந்தியச் சட்டங்களுக்கு மேலானவையாக, அந்நிய முதலாளிகள் இந்தியாவைக் கொள்ளையடித்துச் செல்வதற்கு வழங்கப்பட்ட லைசென்சாக உள்ளன.

நோக்கியா இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தைக் காட்டி வரி கட்ட முடியாது எனக் கூறினால், ரசியாவைச் சேர்ந்த சீஸ்டெமா நிறுவனம், இந்தியா-ரசியா இரு தரப்பு ஒப்பந்தத்தின்படி தனது 2ஜி உரிமங்களை இந்திய உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது தவறு என வாதாடுவதோடு, இந்திய அரசிற்கு எதிராக வழக்கு தொடருவோம் என வக்கீல் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது. நார்வே நாட்டைச் சேர்ந்த டெலிநார் நிறுவனம் இந்தியா-சிங்கப்பூர் பொருளாதார கூட்டு ஒப்பந்தப்படி, 2ஜி உரிமங்களில் தான் போட்டுள்ள முதலீட்டிற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனக் கோருகிறது.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த வோடோஃபோன் நிறுவனத்தின் மீது சுமத்தப்பட்ட 11,000 கோடி வரி ஏய்ப்பு வழக்கை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துவிட்ட போதும், அந்நிறுவனம் ''இந்திய அரசு வரி ஏய்ப்பு தடுப்புச்சட்டத்தை வருங்காலத்தில் கொண்டுவந்தாலும் கூட, இந்தியா-டச்சு இருதரப்பு ஒப்பந்தத்தின்படி தன் மீது சுமத்தப்பட்டுள்ள 11,000 கோடி ரூபாய் வரியைக் கட்ட முடியாது'' என வாதிட்டு வருகிறது.

கிழக்கிந்திய கம்பெனியும் பிரிட்டன் ஏகாதிபத்தியமும் நாட்டின் வளங்களைக் கொள்ளையடித்துச் சென்ற கடந்த காலம் காலனி ஆதிக்கம் என்றால், நிகழ்காலத்தில் பல ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த ஏகபோக கார்ப்பரேட் நிறுவனங்கள் இந்தியாவின் செல்வங்களைச் சட்டவிரோதமாகவும் சட்டபூர்வமாகவும் கொள்ளையடித்துச் செல்வதை மறுகாலனியாதிக்கம் என்றுதான் சொல்ல முடியும். ஆனால், ஆளுங்கும்பலும் ஓட்டுக் கட்சிகளும் இம்மறுகாலனியாதிக்கத்தை ''வளர்ச்சி'', ''வல்லரசு'' என்ற வாய்ஜால மோசடிகளால் மூடிமறைக்கின்றன.

● செல்வம்

# எதிர்கொள்வோம்!

இணையத்தின் மூலமாகவும் நேரடியாகவும் எமது தோழர்களிடம் எழுப்பப்படும் கேள்விகள், வைக்கப்படும் விமர்சனங்களைத் தொகுத்து அவற்றுக்குத் தக்க பதிலளிக்கும் பகுதி.

ஈழம் பற்றியும் விடுதலைப் புலிகளைப் பற்றியும் ம.க.இ.க.வினர் எழுதிய வற்றில் இருந்து ஓரிரு மேற்கோள்களை எடுத்துக்காட்டி அவற்றைத் திரித்து, அவற்றில் இல்லாத தமது சொந்த வியாக்கியானங்கள் கொடுத்து, சமரன் குழு ம.க.இ.க.வினர் மீது அவதூறும் செய்கின்றனர். இதையும், விடுதலைப் புலி களைப் பற்றி சமரன் குழு முன்பு எழுதி, 'ஈழமும் தேசிய இனப் பிரச்சினையும்' என்ற பெயரில் சமரன் வெளியீட்டகம் வெளியிட்டுள்ள நூலில் மீண்டும் பதிப் பித்துள்ள கருத்துக்களையே எடுத்துக்காட்டி அவர்களின் பித்தலாட்டங் களையும் பு.ஜ. 2013, அக்டோபர், டிசம்பர் இதழ்களில் நாம் அம்பலப்படுத்தி யிருந்தோம். ம.க.இ.க. வினரின் நிலைப்பாடுகள் மீதான விமர்சனங்கள் என்ற பெயரில் இதே பாணியிலான பித்தலாட்டங்களைத்தான் அந்நூலில் அவர்கள் அடுக்கியுள்ளனர் என்பதற்கு மேலும் சில சான்றுகளை இங்கே பார்க்கலாம்.

''தரகு முதலாளித்துவ மற்றும் திருத்தல் வாதிகளின் அணிவரிசையில் புரட்சி பேசும் புதிய ஜனநாயகம் மற்றும் ம.க.இ.க. குழுவினர் இராஜபக்சே கும்பலுக்கு ஆதரவாக அணி வகுத்துள்ளனர்''(பக்.14) என்கிறது, சமரன் குழு. எவ்வளவு மோசமான அறிவு நாணயமற்றவர்களாக இருந்தால் இப்படி யொரு பொய்யைச் சொல்லுவார்கள்! ம.க.இ.க.வை அறிந்த யாரும் இப்படி ஓர் அபாண்டத்தை நம்புவார்களா? பின்வரும் மேற்கோள் ஒன்றை இந்த அபாண்டத்திற்கு ஆதாரமாக அந்நூலில் அக்குழு காட்டு கிறது.

'' இன்றைய ஈழம், இலங்கை மற்றும் அனைத்து நாட்டு நிலைமைகளை அடிப்படை யாகக் கொண்டவையல்ல. இன்றைய ஈழப் பிரச் சினையின் யதார்த்த நிலையில் உடனடியான, தற்காலிகத் தீர்வு எதுவும் கிடையாது. எல்லா வற்றையும் அரிச்சுவடியிலிருந்து தொடங்கி அமைப்பையும் இயக்கத்தையும் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது. இனவாத நோக்கில் உல கின் பிற்போக்கு, பாசிச அரசுகளின் தயவை நம்புவதற்கு மாறாக, சிறியவையானாலும் இராஜபக்சேக்களின் பாசிசத்திற்கு எதிராகப் போராடும் சிங்கள ஜனநாயகவாதிகள், உல கின் முற்போக்கு, புரட்சிகர சக்திகளின் வர்க்க ஒற்றுமையைக் கட்டிப் போராடுவதுதான் தீர்வு என்று பு.ஜ. கூறுகிறது''

''அதாவது, ஈழம், புதிய சூழ்நிலை, புதிய பாதை என்று கூறித் தனி ஈழம் சாத்தியமில்லை என்றும் அக்கோரிக்கையைக் கைவிடவேண்டும் என்றும் பு.ஜ. மற்றும் ம.க.இ.க. குழு வினர் கூறுகின்றனர்.'' (பக்.14.)

மீண்டும் அதே பாணி யிலான பித்தலாட்டம்! இங்கே எடுத்துக்காட்டி யிருக்கும் மேற்கோளுக்குத் தமிழறிந்த, அறிவுநேர்மை யுள்ளவர்கள் யாரும் சமரன் குழு கூறும் பொருளை ஏற் பார்களா? அக்குழு காட்டி யுள்ள மேற்கோளில் உண்மையில் மூன்று கருத்துக்களைத்தான் நாம் சொல்கிறோம்: 1. இன்றைய யதார்த்த நிலையில் ஈழப் பிரச்சினைக்கு உடனடியான, தற்காலிகத் தீர்வு எதுவும் கிடையாது; எல்லாவற்றை யும் அரிச்சுவடியிலிருந்து தொடங்கி அமைப்பையும் இயக்கத்தை யும் கட்டியெழுப்ப வேண்டியிருக்கறது. 2. இனவாத நோக்கில் உல கின் பிற்போக்கு, பாசிச அரசுகளின் தயவை நம்பக்கூடாது. 3. சிறிய வையானாலும் இராஜபக்சேக்களின் பாசிசத்திற்கு எதிராகப் போராடும் சிங்கள ஜனநாயகவாதிகள், உலகின் முற்போக்கு,

சிங்கள இனவெறி பாசிச இராஜபக்சே அரசால் 2009-ஆம் ஆண்டில் கடத்திச் செல்லப்பட்ட லலித் குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் மற்றும் ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், வன்னி யுத்தத்தின்போது சரணடைந்தவர்கள் உள்ளிட்ட அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யக் கோரி 2011-ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினத்தன்று (டிசம்பர் 10) கொழும்புவில் புதிய ஜனநாயகக் கட்சி, நவ சமசமாஜ கட்சி ஆகியன ஒருங்கிணைத்து நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப்படம்)





''இராணுவ ஆட்சியை உடனடியாக நிறுத்து! கைது செய்யப்பட்ட யாழ் பல்கலைக் கழக மாணவர்களை விடுதலை செய்! கைதுகளையும் கடத்தல்களையும் நிறுத்து! நில ஆக்கிரமிப்பை நிறுத்து!'' எனும் முழக்கங்களுடன் யாழ்ப்பாணத்தில் சம உரிமை இயக்கத்தின் சார்பில் ஜனவரி 2013-இல் நடத்தப்பட்ட நீண்ட பதாகையில் கையெழுத்திடும் இயக்கம். (நன்றி: போராட்டம் இதழ், பிப்ரவரி 2013)

புரட்சிகர சக்திகளின் வர்க்க ஒற்றுமையைக் கட்டிப் போராடுவதுதான் ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு.

இப்படிச் சொல்லுவது எப்படி இராஜபக்சே கும்பலுக்கு ஆதரவாக அணிவகுப்பதாகும் என்று சமரன் குழுவும் அதன் சீடர்களும் நேர்மையாக விளக்கட்டும். ''இராஜபக்சேக்களின் பாசிசத்திற்கு எதிராகப் போராடும் சிங்கள ஜனநாயகவாதிகள் உட்பட'' என்பது தவிர மேற்கண்ட எமது கருத்துக்களில், ஈழப் பிரச்சினைக்கான தீர்வில் சமரன் குழு எங்கே மாறுபடுகிறது? வேறு ஏதோ தீர்வு தன்னிடம் இருப்பதாக இன்னொரு பித்தலாட்டமும் செய்கிறது.

சிங்கள உழைக்கும் மக்களுடன், பாட்டாளிகளுடன் வர்க்க ஒற்றுமையைக் கட்டவேண்டும் என்று சமரன் குழுவே பல முறை வலியுறுத்துவதை இதேநூலிலிருந்து நாம் காட்ட முடியும் என்றாலும் ''இராஜபக்சேக்களின் பாசிசத்திற்கு எதிராகப் போராடும் சிங்கள ஜனநாயகவாதிகள்'' என்று கிடையாது என்று வேறு புளுகுகிறார்கள்.

''இராஜபக்சேவின் இராணுவப் பாசிசத்திற்கு எதிராகச் சிங்களப் பகுதியில் ஒரு அமைப்பும் போராட முன்வராத ஒரு சூழலில், ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்துப் போராட அங்கே ஒரு அமைப்பும் முன்வராத ஒரு சூழலில், இரு இனமக்களும் ஒன்று சேர்ந்து வர்க்கப் போராட்டம் நடத்த வேண்டும் என்று கூறுவது தமிழீழக் கோரிக்கையைக் கைவிடச் செய்வதற்கான தந்திரமின்றி வேறென்ன?'' (பக்.15).

''அவர்கள் (ம.க.இ.க.,வினர்) இன்று மட்டுமல்ல, கடந்த 30 ஆண்டுகாலமாகவே உதட்டில் ஈழத்தை உச்சரிப்பதும் உண்மையில் ஈழக் கோரிக்கைக்குக் குழி பறிக்கும் வேலையைத்தான் செய்து வருகின்றனர். தமிழீழத்தை ஆதரிப்பது போல் பேசுவது மறுபுறம் இலங்கை அரசின் பாசிசப் போக்கையும் புலிகளின் பாசிசப் போக்கையும் சமப்படுத்திப் பேசினர். இறுதியில் புலிகளின் பாசிசப் போக்கை எதிர்த்துப் போராடுவதையே முதன்மைப் பணியாகக் கொண்டனர். இவ்வாறு ஈழப் போராட்டத்துக்குத் துரோகம் இழைத்து வந்தனர். அதையேதான் இன்றைய சூழலிலும் அவர்கள் தொடர்கின்றனர் .'' (பக்.14.)

இப்படிப் புளுகுவதன் மூலம் புலிகள்தான் தமிழீழம், புலிகளின் பாசிசத்தை எதிர்ப்பது தமிழீத்தையே எதிர்ப்பதாகும் என்றும் ஈழத்துக்கு மேலாகப் புலி விசுவாசத்தைத்தான் காட்டுகின்றனர்.

''30 ஆண்டுகாலமாகவே'' என்று அவர்கள் சொல்வது 1983 ஆம் ஆண்டிலிருந்து நாம் இப்படிச் செய்வதாகிறது. புலிகளின் பாசிசத்தை எதிப்பதாலேயே இந்த '30 ஆண்டு காலமாக, ம.க.இ.க.வினர் தமிழீழத்துக்குத் துரோகமிழைப்பதாகவும் ஈழக் கோரிக்கைக்குக் குழி பறிக்கும் வேலையைச் செய்வதாகவும், சமரன் குழு குற்றஞ்சாட்டுகின்றது.

ஈழத் தமிழ் அகதிகள் கொடுத்த ஆதாரபூர்வ செய்திகளின் அடிப்படையில் ''ஈழத்து எம்.ஜி.ஆர். பிரபாகரனின் பொய்கள், சதிகள், கொலைகள்'' என்ற கட்டுரையை 1987 ஜனவரியில் புதிய ஜனநாயகம் வெளியிட்டது. அப்போதிருந்துதான் புலிகளின் பாசிசத்தை பு.ஜ.குழு மற்றும் ம.க.இ.க.வினர் எதிர்க்கத் தொடங்கினர். அதுவரை புலிகளை பாசிஸ்டுகளாக வரையறுக்

பயங்கரவாத இராஜபக்சே கும்பலின் புதிய குற்றவியல் சட்டத் திருத்தத்தை எதிர்த்து 22.1.2013 அன்று கொழும்பு புதுக்கோட்டையில் ஈழத் தமிழர்களையும் சிங்களர்களையும் அணிதிரட்டி இடதுசாரி கட்சிகளால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம். (நன்றி: போராட்டம் இதழ், பிப்ரவரி 2013)



கவோ, எதிர்க்கவோ கிடையாது. அதன் பிறகும், 1987 -இல் ஈழ ஆக்கிரமிப்பை இந்தியா தொடங்கியதிலிருந்து இந்திய இராணுவம் வெளியேறும் வரையிலான காலக்கட்டத்தில் புலிகளை ஆதரிக்கவே செய்தோம். அதன் பிறகு முள்ளிவாய்க்கால் போர் முடியும்வரை புலிகள் தம் பாசிசத்தை முழுவீச்சில் கடைப்பிடித்ததால் எதிர்த்தோம். அதேசமயம், புலிகளுக்கு எதிரான ஈழத் துரோகிகள் மற்றும் எதிரிகளின் தடை, தாக்குதல்களை எதிர்த்தே வந்துள்ளோம். ராஜீவ் உட்பட ஈழ எதிரிகளுக்கும் ஈழத் துரோகிகளுக்கும் எதிரான புலிகளின் அழித்தொழிப்பு நடவடிக்கைகளின் அரசியல் நியாயத்தை உயர்த்திப் பிடித்து வந்துள்ளோம். ஆனால், அவை பற்றி புலிகள், புலி விசுவாசிகள் - தமிழினவாதிகள்கூட மௌனம் சாதிக்கவே செய்தனர்.

புலிகளை அரசியல்ரீதியில் விமர்சித்ததற்காக ம.க.இ.க.வினரை சமரன் குழு அவதூறு செய்கிறது. ஆனால், புலிகள் இலங்கை, இந்திய அரசுகளுடன் சமரசம் செய்வார்கள் என்றும் அதற்கான வேர்கள் இருப்பதாக ஐயப்படுவதாகவும் சமரன் குழு எழுதியதில்லையா? புலிகள், 'இலங்கை பாசிச ஆட்சிக்கு மாறாக, ஒரு இராணுவ அதிகார வர்க்க ஆட்சி முறையைச் செயல்படுத்தினர்; ஒரு படையின் ஆட்சி அல்லது அனைத்து அதிகாரத்தையும் தனது ஏகபோகமாக்கிக் கொள்வது என்ற பாசிசக் கொள்கையைப் பின்பற்றினர்; புலிகளின் ஜனநாயக மறுப்பு மற்றும் எதேச்சதிகாரப் போக்குகளை எதிர்ப்பதற்கு ஆயுதம் ஏந்தும் உரிமை இருக்க வேண்டும்; புலிகளுக்கு அமெரிக்கா மீதிருந்த மாயையும், இந்திய அர

மனித உரிமை நாளன்று, இராஜபக்சே கும்பலின் அரசு பயங்கரவாதத்தையும் கடத்தல்களையும்மனித உரிமை மீறல்களையும் எதிர்த்து ஈழத்தமிழர்களும் சிங்களர்களும் இணைந்து 10.12.2013 அன்று இத்தாலி நாட்டில் நடத்திய ஆர்ப்பாட்டம் மற்றும் கையெழுத்தியக்கம்.



சின் மீதான குருட்டு நம்பிக்கையும், கஸ்பர் சாமியார் போன்ற துரோகிகளை நம்பியதும்தான் விடுதலைப் போரில் தோல்விக்கும் தலைமையின் அழிவிற்கும் காரணம் என்று இப்போதும் சமரன் குழு எழுதவில்லையா? சமரன் குழுவின் கண்ணோட்டப்படி புலிகள் பற்றிய அக்குழுவின் இவ்வாறான அணுகுமுறையை வைத்து ஈழப் போராட்டத்துக்கு அவர்கள் துரோகம் இழைத்து வந்தனர் என்றும் ஈழக் கோரிக்கைக்குக் குழிபறிக்கும் வேலையைத்தான் செய்து வருகின்றனர் என்றும் ஏன் கருதக் கூடாது?

இந்த '30 ஆண்டு காலமாகவே' பிரிந்துபோகும் உரிமையுடன்கூடிய ஈழத் தன்னுரிமைக் கோரிக்கையை ம.க.இ.க.வினர் ஏற்றுப் போராடாத காலம் என்று எதை யாவது இவர்களால் காட்ட முடியுமா? ஈழத் தன்னுரிமைக் கோரிக்கை என்பது தனி ஈழம் அமைத்துக் கொள்ளும் உரிமையையும் உள்ளடக்கியது இல்லையா? புலிகளே தனி ஈழக் கோரிக்கையைக் கைவிடுவதாவும் அதற்கு மாறாக சுயாட்சியை ஏற்பதாகவும் கூறியபோது, அதை ம.க.இ.க.வினர் எதிர்க்கவில்லையா? இப்படிச் செய்வதைத்தான் புலிகளின் ''பேரம், பேரம்'' என்று பு.ஜ. கூறுவதாக, சமரன் குழுவினர் அவதூறு செய்கின்றனர்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக் கொடூரம் நடந்தவுடனேயே இராஜபக்சேவைப் போர்க் குற்றவாளியாக்கி ''நூரம்பர்க்'' வழியிலான விசாரணையும் தண்டனையும் வழங்கக் கோரிப் போராடியவர்கள், ம.க.இ.க.வினர். முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கு இரண்டாண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவின் ஐ.நா. தீர்மானம் வந்தது, அதை ஆதரிக்கக் கோரி நடந்த போராட்டங்களுக்குப் பிறகு, அதை நீர்த்துபோகும் தீர்மானத்துடன் இந்தியா ஆதரித்தது. அடுத்த ஆண்டு நீர்த்துப்போன அத்தீர்மானம் வந்தபோதுதான் தமிழ்நாட்டில் பொது மாணவர் எழுச்சி ஏற்பட்டது. அதன்பிறகு மட்டுமே, அதை அறுவடை செய்து கொள்ள விழித்துக் கொண்ட சமரன் குழு, ஈழ மக்கள் மீதான தனது அக்கறையற்ற மெத்தனத்தை ஈடுகட்ட ம.க.இ.க.வினர் மீது அவதூறுகளை அள்ளி வீசுகின்றது.

''இராஜபக்சேவை போர்க்குற்றங்களுக்காக ஐ.நா. அவை மூலம் தண்டிக்கவேண்டும் என்று போராடும் மாணவர்களை எள்ளிநகையாடும் ம.க.இ.க.வினர், 'நூரம்பர்க்' போன்ற விசாரணை மன்றம் தேவை எனப் புரட்சி வேடம் போடும் ம.க.இ.க.வினர், இராஜபக்சேவைத் தண்டித்தால் ஈழத் தமிழர்களுக்கு இன்னல் அதிகரிக்கும் என்று பயமுறுத்துகின்றனர்.''(பக்.14).

ம.க.இ.க.வினர் மீதான இந்த அவதூறுக்கு சமரன் குழு பின்வரும் ஆதாரத்தை முன்வைக்கிறது: ''அப்படி ஒரு நடவடிக்கை வந்தால் இராஜபக்சேவைப் போன்ற ஒரு நரித்தனமான பாசிஸ்டு

அதை எப்படி எதிர்கொள்வான் என்பதை நாம் பார்க்க வேண்டும். அதை இலங்கையின் இறையாண்மை மீதான தாக்குதலாக இராஜபக்சே சித்தரிக்கப் போகிறார். அதையொட்டி மீண்டும் தேசவெறியும், இனவெறியும் தூண்டப்படும். ஏற்கெனவே இலங்கையின் இறையாண்மையில் இந்தியா அல்லது அமெரிக்கா தலையிடுகிறது என்ற கோணத்திலேதான் அங்கேயிருக்கிற சிங்கள இனவெறியர்கள் அதை எழுதுகிறார்கள், பேசுகிறார்கள்' என்று ம.க.இ.க.வினர் எழுதுகிறார்கள்.''

''அதாவது இராஜபக்சேவைத் தண்டிப்பதுகூடத் தமிழர்களுக்கு ஆபத்து என்று அவர்கள் வாதிடுகின்றனர். இதைவிட இராஜபக்சேவுக்கு ஆதரவாக யாராவது பேசமுடியுமா?'' (பக்.14,15.) *என்று சமரன் குழு கேட்கிறது.*

*மீண்டும் ஒரு மேற்கோள் பித்தலாட்டம்! ''இராஜபக்சேவைத் தண்டித்தால் ஈழத் தமிழர்களுக்கு இன்னல் அதிகரிக்கும்'' என்றோ, ''இராஜபக்சேவைத் தண்டிப்பதுகூடத் தமிழர்களுக்கு ஆபத்து'' என்றோ பொருள் கொள்ளும்விதமான அடிப்படை ஏதாவது இந்த மேற்கோளில் இருக்கிறதா? சமரன் குழுவின் கோணல் புத்திக்கு மட்டும்தான் அப்படியான பொருள் கொள்ளத் தோன்றும். ''இராஜபக்சேவைப் போன்ற ஒரு நரித்தனமான பாசிஸ்டு அதை எப்படி எதிர்கொள்வான்'' என்பதை விளக்கி, இவ்வாறு எதிரியின் சிங்களப் பேரினவாத வெறியூட்டும் சதியை எதிர்கொள்ள, இராஜபக்சேக்களின் பாசிசத்திற்கு எதிராகப் போராடும் சிங்கள ஜனநாயகவாதிகளை வென்றெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ''போர்க் குற்றங்களுக்காக இராஜபக்சேவைத் தண்டிப்பது எப்படி?'' என்று தலைப்பிட்டு எழுதியதிலிருந்து ஒரு பகுதியை திரித்துப் பொருள் கூறுகிறது, சமரன் குழு.*

*இந்தப் பித்தலாட்டத்தை முன்வைத்து சமரன் குழு மாணவர்களுக்கு ஒரு அறைகூவல் விடுக்கிறது:* ''இவ்வாறு பு.ஜ.குழு மற்றும் ம.க.இ.க.வினர் உருவாக்கியுள்ள ஈழத் தமிழரின் தன்னுரிமைக்கான மாணவர்கள் கூட்டமைப்பும் தமிழீழத்துக்குத் துரோகம் செய்வதை மாணவர்கள் புரிந்துகொண்டு புறந்தள்ள வேண்டும். அவர்கள் இராஜபக்சேவுக்கும் இந்திய அரசுக்கும் துணைபோகும் சந்தர்ப்பவாதத்தை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்த வேண்டும்.'' (பக்.15)

*இந்த அறைகூவலைப் புரிந்து கொண்டு மாணவர்கள் புறந்தள்ளுகிறார்கள், பு.ஜ.குழு மற்றும் ம.க.இ.க.வினரை அல்ல; சமரன் குழுவைப் புறந்தள்ளத் தேடுகிறார்கள். ஆனால், அவர்களைத்தான் எங்கேயும் எப்போதும் களத்தில் காணவில்லை.* (தொடரும்)

# "வேலைபறிப்பு - தற்கொலைகள் - ஆலைச் சாவுகளைத் தீவிரமாக்கும் முதலாளித்துவப் பயங்கரவாதத்தை முறியடிப்போம்!"

## –பு.ஜ.தொ.மு.வின் பேரணி – ஆர்ப்பாட்டம்

இன்றைய மறுகாலனியாக்கச் சூழலில், தீவிரமாகிவரும் முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு எதிராகக் கடந்த ஆண்டு ஜூலையில் கருத்தரங்குகளை நடத்திய புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, அக்கருத்தரங்குகளில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் கடந்த மூன்று மாத காலமாக பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், தெருமுனை - ஆலைவாயிற் கூட்டங்களோடு, ரயில்கள்-பேருந்துகளிலும் பிரச்சாரத்தை மேற்கொண்டு அதன் தொடர்ச்சியாக, கடந்த டிசம்பர் 21-ஆம்தேதியன்று தொழிலாளர்களை அணிதிரட்டி கும்மிடிப்பூண்டி, சிறீபெரும்புதூர், திருச்சி, ஓசூர், கோத்தகிரி, சிவகங்கை ஆகிய பகுதிகளிலும், சிவகங்கையில் 27-ஆம் தேதியன்றும் பேரணி -ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. கோவையில் 21-ஆம் தேதியன்று பேரணிக்கு போலீசார் அனுமதி மறுத்த நிலையில், தடையை மீறி விண்ணதிரும் முழக்கங்களுடன் பேரணியாகச் சென்ற தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.




செங்கொடிகள் விண்ணில் உயர, மார்க்சிய ஆசான்களின் உருவப்படங்களுடன் நடந்த இப்பேரணிகளில் வர்க்க உணர்வோடு ஆண்-பெண் தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்தோடு பெருந்திரளாகப் பங்கேற்றனர். கொள்ளையர்களும் பயங்கரவாதிகளுமான முதலாளிகளைப் போல வேடமிட்டு அவர்களைத் தொழிலாளர்கள் கட்டி இழுத்து வருவதாக காட்சி விளக்கங்களுடனும் புரட்சிகரப் பாடல்களுடனும் நடந்த இந்த பேரணிகளை வழியெங்கும் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் உற்சாகத்துடன் வரவேற்றனர். பணி நிரந்தரச் சட்டம், காண்ட்ராக்ட் முறை ஒழிப்புச் சட்டம் உள்ளிட்டு தொழிலாளர் நலச் சட்டங்களை கறாராக நடைமுறைப்படுத்தக் கோரியும், இச்சட்டங்களை மீறும் முதலாளிகள் மீது கிரிமினல் நடவடிக்கை மேற்கொள்ளக் கோரியும், விண்ணப்பித்த 30 நாட்களில் தொழிற்சங்கத்தைப் பதிவு செய்யக் கோரியும், முதலாளிகளின் ஒர்க்கர்ஸ் கமிட்டியைத் தடை செய்யக் கோரியும், உழைக்கும் மக்களை உளவு பார்க்கும் ஆதார் அட்டைத் திட்டத்தை ரத்து செய்யக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டங்களில் முன்னணியாளர்கள் எழுச்சியுரையாற்றினர்.

முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தப் பிரச்சார இயக்கமும் ஆர்ப்பாட்டங்களும் தொழிலாளர்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்து, நாளைய போராட்டத்துக்கான முன்னறிவிப்பாக அமைந்தன.

–பு.ஜ.செய்தியாளர்கள்.

# கரும்பு விவசாயிக்குத் தூக்குக் கயிறு!
# சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கு பம்பர் பரிசு!!

கரும்புக்கு நியாயமான விலை கேட்டுப் போராடும் விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும் அரசு, சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கு ரூ. 7200 கோடியை வட்டியில்லாக் கடனாக வாரி வழங்கியிருக்கிறது.

அறுபது வயதான வித்தல் அராபவி, கர்நாடக மாநிலம் பெல்காம் மாவட்டத்தைச் சேர்ந்த கரும்பு விவசாயி. ஐந்து ஏக்கர் குத்தகை நிலத்தில் கரும்பு பயிரிட்டு, 120 டன் கரும்பை நிரானி சர்க்கரை ஆலை என்ற தனியார் ஆலைக்கு விற்றார். சென்ற ஆண்டு விற்ற கரும்புக்கு ஆலை முதலாளி இதுவரை பணம் தராத காரணத்தால், குத்தகைப் பணம் கொடுக்க முடியவில்லை. சோற்றுக்கும் வழியில்லை. ஆலை முதலாளிகளின் கையாளாகச் செயல்படும் கர்நாடக அரசுக்கு எதிராக நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேசிக் கொண்டிருந்த அவர், உணர்ச்சி வேகத்தில் முதலமைச்சரை 'கெட்ட வார்த்தைகளால்' ஏசத் தொடங்கினார். உடனே அவரிடமிருந்து மைக்கைப் பிடுங்கிச் சமாதானப் படுத்தினார்கள் சக விவசாயிகள். ஆத்திரத்தில் குமுறியபடியே அமர்ந்திருந்த அந்த விவசாயி, கையில் கொண்டு வந்திருந்த பூச்சி மருந்தைக் குடித்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

உ.பி. மாநிலத்தைச் சேர்ந்த சத்பால் சிங் என்ற கரும்பு விவசாயிக்கு குலாரியா சர்க்கரை ஆலை என்ற தனியார் ஆலை, சென்ற ஆண்டு விற்ற கரும்புக்கு இதுவரை பணம் தரவில்லை. வங்கிகளுக்கும் கந்து வட்டிக்காரர்களுக்கும் 2.5 இலட்சம் கடனைத் திருப்பிக் கட்ட முடியாத காரணத்தால் தூக்கி லிட்டுக் கொண்டார் அந்த விவசாயி. ஆத்திரம் கொண்ட விவசாயிகள் அந்தக் கரும்பு ஆலையின் மீது தாக்குதல் நடத்தினர்.

நவம்பர் மாதம் நடைபெற்ற இத்தகைய தற்கொலைகள் கரும்பு விவசாயிகளின் துயரத்தைக் கூறுவதற்கான சில எடுத்துக் காட்டுகள் மட்டுமே. 2012-ஆம் ஆண்டு நாடு முழுவதும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்த கரும்புக்கு இதுவரை தனியார் சர்க்கரை ஆலை முதலாளிகள் கொடுக்காமல் வைத்திருக்கும் நிலுவை 12,700 கோடி ரூபாய். கரும்பு என்பது நெல், கோதுமை போன்ற தானியங்களைப் போலன்றி, ஒரு ஆண்டுப் பயிர். கந்து வட்டிக்குக் கடன் வாங்கி முதலீடு செய்து, ஓராண்டு முழுவதும் உழைத்து உருவாக்கிய கரும்பை வாங்கி உற்பத்திக்குப் பயன்படுத்திக் கொண்டு, பணத்தை மட்டும் கொடுக்க மறுக்கும் ஆலை முதலாளிகளை மத்திய, மாநில அரசுகள் எதுவும் செய்யவில்லை.

பாக்கி வைத்தது மட்டுமல்ல, இந்த ஆண்டு கரும்புக்கு மத்திய, மாநில அரசுகள் நிர்ணயித்துள்ள விலை தங்களுக்குக் கட்டுபடியாகாதென்றும் டன்னுக்கு 2250 ரூபாய்க்கு மேல் தரமுடியாதென்றும் கூறி உ.பி., மகாராட்டிரா, கர்நாடகா மாநிலங்களில் உள்ள பெரும்பாலான சர்க்கரை ஆலைகள் கதவடைப்பு செய்தன. விளைந்து நிற்கும் கரும்பை வெட்டத் தாமதமானால், ஒவ்வொரு நாளும் கரும்பின் எடையும் சர்க்கரையின் அளவும் குறையுமென்பதால் விவசாயிகள் தங்களிடம் பணிந்துதான் ஆகவேண்டும் என்பது முதலாளிகளின் கணக்கு. இப்படி விவசாயிகளின் கழுத்தில் கத்தியை வைத்து 'பிளாக் மெயில்' செய்யும் முதலாளிகளுக்கு 7200 கோடி ரூபாய் வட்டியில்லாக் கடன் அளித்து தாஜா செய்திருக்கிறது மத்திய அரசு.

வாங்கிய கரும்புக்கு கொள்முதல் தொகையைக் கொடுக்க வேண்டியது முதலாளிகளின் பொறுப்பு. இல்லையென்றால், அரசு அவர்களது சொத்துகளை ஜப்தி செய்து விவசாயிகளின் கடனை

120 டன் கரும்புக்குப் பணம் தராமல் நிரானி சர்க்கரை ஆலை ஏய்த்து வந்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் விஷமருந்திய விவசாயி வித்தல் அராபவி (வட்டத்துக்குள்) மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின் இறந்து போனார்.





கரும்புக்கான ஆதார விலையை உயர்த்தக் கோரி மகாராஷ்டிர மாநிலம் – சங்கிலி பகுதி விவசாயிகள் நடத்திய ரயில் மறியல் போராட்டம் (வலது); அப்போராட்டத்தில் கலந்துகொண்ட விவசாயியை மிருகத்தனமாகத் தாக்கும் போலீசு. (கோப்புப் படங்கள்)

அடைத்திருக்க வேண்டும். அல்லது விவசாயிகளுக்குரிய தொகையை அரசு கொடுத்துவிட்டு, முதலாளிகளிடம் அதனை வசூலிக்கத் திட்டமிட்டிருக்க வேண்டும். மாறாக, பொதுத்துறை வங்கிகளில் இருக்கும் மக்களின் சேமிப்பை முதலாளிகளுக்கு வாரிக்கொடுத்து, அதற்குரிய 12 சதவீத வட்டியை மக்கள் வரிப்பணத்திலிருந்து கட்டுவதற்கும் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது அரசு. ஐந்து ஆண்டுகளுக்குள் முதலாளிகள் கடனைத் திருப்பித் தரவேண்டும் என்றும், முதல் இரண்டாண்டுகள் கொடுக்காவிட்டால் பரவாயில்லை என்றும் சலுகை வேறு.

இது மட்டுமின்றி, பெட்ரோல் பயன்பாட்டில் எத்தனால் அளவை 5% லிருந்து 10% வீதமாக அதிகரிக்க வேண்டும் என்ற கரும்பாலை முதலாளிகளின் நீண்ட நாள் கோரிக்கையையும் தற்போது அரசு நிறைவேற்றிக் கொடுத்துள்ளது. புவி வெப்பமடைதலைக் காரணங்காட்டி நாட்டின் உணவு மற்றும் நன்னீர் பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தும் உயிர்ம எரிபொருள் பயன்பாட்டையும், கரும்பு விவசாயிகளைக் காப்பாற்றுவது என்ற பெயரில் அரசு திணித்துவிட்டது. ஒரு ஏக்கர் கரும்பு விளைச்சலுக்கு 1.8 கோடி லிட்டர் தண்ணீர் தேவைப்படுவதால், பெட்ரோல் பயன்பாட்டில் எத்தனால் அளவை அதிகரித்தன் மூலம் தண்ணீரை எரிபொருளாக்கும் ஏகாதிபத்திய சதியையையும் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறது அரசு.

‘‘கொள்முதல் பாக்கி வரவில்லை, கரும்புக்கு நியாய விலை கிடைக்கவில்லை’’ என்று போராடும் விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும் இந்த மத்திய-மாநில அரசுகள்தான், கரும்பு விவசாயிகளைப் பாதுகாப்பது என்ற பெயரில் ஒரு ‘‘பலநோக்கு சதித் திட்டத்தை’’ நிறைவேற்றியுள்ளன.

தாங்கள் நட்டத்தில் மூழ்கிக் கொண்டிருப்பதாக சர்க்கரை ஆலை முதலாளிகள் கூறுவது உண்மையா? கரும்பில் உள்ள சர்க்கரைச் சத்தின் அளவை மட்டும் கணக்கிட்டுத்தான் கரும்பின் விலையை அரசு நிர்ணயம் செய்கிறது. ஆனால், ஒரு டன் கரும்பிலிருந்து 100 கிலோ சர்க்கரை, 150 யூனிட் மின்சாரம், 35 லிட்டர் எரிசாராயம் மற்றும் மொலாசஸ், எத்தனால் உள்ளிட்ட பல உப பொருட்களை உற்பத்தி செய்வதுடன், கடைசியாக எஞ்சியிருக்கும் கரும்புச்சக்கை காகிதத் தயாரிப்புக்கும் விற்கப்படுகிறது. ஒருடன் கரும்பிலிருந்து உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் மதிப்பு சுமார் 30,000 ரூபாய் என்கிறார் பெங்களூரு விவசாய அறிவியல் பல்கலைக் கழகத்தின் ஆய்வாளர் டி.என்.பிரகாஷ்.

ஒரு டன் கரும்புக்கு 3000 ரூபாய் வேண்டும் என்பதுதான் விவசாயிகளுடைய கோரிக்கை. இந்தத் தொகையில் 15% மட்டுமே விவசாயிக்கு மிஞ்சும் என்பதையும் எல்லா ஆய்வாளர்களும் மறுப்பின்றி ஏற்றுக் கொள்கின்றனர்.

ஆனால், டன்னுக்கு 30,000 ரூபாய் ஈட்டும் முதலாளிகள், விவசாயிக்கு 2250 ரூபாய்க்கு மேல் தரமுடியாது என்கிறார்கள். மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் ஆதார விலையோ 2100 ரூபாய்தான். இதற்கு மேல், முதலாளிகளின் சார்பாக மாநில அரசுகள் மக்கள் வரிப்பணத்திலிருந்து டன்னுக்கு 400, 500 என்று விவசாயிகளுக்கு ‘‘போட்டு’’க் கொடுக்கின்றன. ‘‘டன்னுக்கு 2500 ரூபாய் கொடு! இல்லையேல் ராஜினாமா செய்!’’ என்று 2011-இல் கருணாநிதியை மிரட்டிய ஜெயலலிதா, உர விலை 2,3 மடங்கு உயர்ந்துவிட்ட சூழலில் டன்னுக்கு 450 ரூபாயும் வண்டிக்கூலி 100 ரூபாயும் சேர்த்துக் கொடுத்ததையே சாதனையாகப் பீற்றுகிறார்.

ஒரு டன் கரும்பிலிருந்து முதலாளிகள் ஈட்டும் வருவாய் என்ன என்பது அரசுக்குத் தெரியும். ஒரு டன் கரும்பிலிருந்து முதலாளிகள் அடையும் வருவாயைக் கணக்கிட்டு அதன் அடிப்படையில் கரும்பிற்கான ஆதார விலையை மத்திய அரசு நிர்ணயிக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையைத் திட்டமிட்டே புறக்கணிக்கும் அரசு, சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கு ஏற்றுமதிக்கான மானியம் வழங்குகிறது. வாங்குகின்ற கரும்பின் மீது விதிக்கப்படும் 5% வரியை கர்நாடக அரசு ரத்து செய்திருக்கிறது. வட்டியில்லாக் கடன் வழங்குகிறது. உற்பத்தி செய்யும் சர்க்கரையில் 10 விழுக்காட்டை லெவி சர்க்கரையாக (ரேசன் விநியோகத்துக்காக) அரசுக்குத் தரு

வதை ஈடு செய்வதற்காக ஆலை முதலாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மானியத்தொகையை 2600 கோடியிலிருந்து 5200 கோடி ரூபாயாக அரசு உயர்த்தியிருக்கிறது.

இத்தனைக்குப் பிறகும் முதலாளிகள் திருப்தியடைவதில்லை. டன்னுக்கு 2000 ரூபாய் கொடுத்து விட்டு, 2400 ரூபாய் பெற்றுக் கொண்டதாகக் கையெழுத்து வாங்கிக் கொள்வதாகக் குற்றம்சாட்டுகிறார்கள் கர்நாடக விவசாயிகள். ஒப்புக்கொள்ள மறுத்தால், கட்டிங் ஆர்டர் கொடுக்காமல் கரும்பைக் காயவிடுகிறார்கள். எடை மேடையில் 15% வரைக் குறைத்து தில்லுமுல்லு செய்கிறார்கள் என்பதெல்லாம் விவசாயிகள் கூறும் குற்றச்சாட்டுகள்.



கரும்புக்கான ஆதார விலையை உயர்த்தவும் நிலுவையை உடனே வழங்கவும் கோரி தஞ்சையில் கரும்பு விவசாயிகள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

நட்டம் என்று சொல்லி விவசாயிகளுக்குக் கொள்முதல் பாக்கியைத் தராமல் தற்கொலைக்குத் தள்ளும் ஆலைகளின் ஆண்டுக்கணக்கு இலாபத்தைக் காட்டுகிறது. பங்கு விலைகள் உயர்கின்றன. ஆலை முதலாளிகளின் சொத்தும் பெருகிய வண்ணம் இருக்கிறது.

ஆனால், சர்வதேச சந்தையில் சர்க்கரை விலை வீழ்ச்சியடைந்து விட்டதாகவும், உள்நாட்டுச் சந்தையைப் பாதுகாக்க சர்க்கரை இறக்குமதியைத் தடை செய்ய வேண்டும் என்றும் கூறுகிறார்கள் சர்க்கரை முதலாளிகள். இங்கே உற்பத்தியாகும் சர்க்கரையில் பெரும்பகுதி உள்நாட்டில்தான் நுகரப்படுகிறது என்பதால் இது பொய். மேலும், வெளிநாட்டிலிருந்து சர்க்கரையை இறக்குமதி செய்பவர்கள் கோக், பெப்சி, காட்பரீஸ் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள். இறக்குமதிகள் மீது தடை விதிக்கக் கூடாதென்று காட் ஒப்பந்தம் கூறுவதால், இறக்குமதியின் மீது அரசு சிறிய அளவு வரி விதிக்கலாமேயன்றி, அதனைத் தடுக்கும் அதிகாரம் அரசுக்கு இல்லை.

எனவே, முதலாளிகள் தங்களுடைய இலாபவிகிதத்தை அதிகரிக்க கீழ்க்கண்டவாறு கோரிக்கை வைக்கிறார்கள். ‘‘உள்நாட்டில் ரேசன் கடையில் சர்க்கரை விநியோகிப்பதற்காக ஆலைகளிடம் லெவி சர்க்கரை கொள்முதல் செய்வது ‘உள்நாட்டு சுதந்திரச் சந்தையில்’ தலையிடும் நடவடிக்கை என்பதால், அதனை அரசு நிறுத்த வேண்டும். காட் ஒப்பந்தம் உருவாக்கியிருக்கும் ‘சர்வதேச சுதந்திரச் சந்தையில்’ சர்க்கரை விலை அதிகமாக இருக்கும்போது தடையின்றி ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும். குறைவாக இருக்கும்போது மானியம் கொடுத்து தங்களைக் காப்பாற்ற வேண்டும்’’ - இதுதான் சர்க்கரை முதலாளிகளின் கோரிக்கை.

‘‘ரொட்டியின் இருபுறமும் வெண்ணெயைத் தடவச் சொல்லும் பேர்வழிகள்’’ என்று பேராசைக்காரர்களைக் கேலி செய்யும் ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. சர்க்கரை ஆலை முதலாளிகளோ தங்கள் ரொட்டியை வெண்ணையில் முக்கி எடுக்கச் சொல்கிறார்கள். அப்படி முக்கி எடுப்பதற்கான பரிந்துரைகளால் நிரம்பி வழிவதுதான், சர்க்கரை தொழில் தொடர்பான ரங்கராஜன் கமிட்டி அறிக்கை.

இப்படி ஒரு அப்பட்டமான பகற்கொள்ளை சர்வகட்சி ஆதரவுடன் தொடர்வதற்குத் தனியார்மய, தாராளமயக் கொள்கைகள் மட்டுமின்றி வேறொரு முக்கியக் காரணமும் இருக்கிறது. மகாராட்டிரா, உ.பி., கர்நாடகா மாநிலங்களைச் சேர்ந்த சர்க்கரை ஆலை முதலாளிகள் பலரும் சர்வகட்சி அரசியல் பிரமுகர்களாக இருப்பதுதான். சரத் பவார், நிதின் கட்கரி, அஜித் சிங் போன்றோரிலிருந்து முன்னாள் அரசுத்தலைவர் பிரதிபா பாட்டீல் வரை அனைவரும் இந்த சர்க்கரை மாஃபியாவின் அங்கத்தினர்கள். இவர்கள் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் தலைவர்களாக இருந்து, அவற்றைத் திட்டமிட்டே நட்டத்தில் ஆழ்த்தி, பின்னர் அவற்றைத் தனியார்மயமாக்கித் தாங்களே விழுங்கிக் கொண்டவர்கள். சரத்பவாருக்குச் சொந்தமான 10 ஆலைகளில் 7 ஆலைகள் நட்டக்கணக்குக் காட்டி கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கைப்பற்றப்பட்டவை.

இந்தியாவில் உள்ள 600-க்கும் மேற்பட்ட சர்க்கரை ஆலைகளில் பெரும்பாலானவை சுமார் 50 முதலாளிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. மகாராஷ்டிரா, உ.பி., போன்ற மாநிலங்களில் ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் தனது பிரதிநிதியாக ஒரு எம்.எல்.ஏ. வை வைத்திருக்கிறது. கார்ப்பரேட் முதலாளிகளின் நலனுக்குத்தான் சர்வகட்சி அரசாங்கங்களும் சேவை செய்கின்றன என்ற போதிலும், சர்க்கரை ஆலை முதலாளிகளைப் பொருத்தவரை, அவர்கள் காங்கிரசு, பா.ஜ.க., தேசியவாத காங்கிரசு, சிவசேனா உள்ளிட்ட எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள். இக்கட்சிகளைச் சேர்ந்த இந்த மாஃபியாவின் கையில்தான் மத்திய-மாநில அரசாங்கங்களே இருக்கின்றன.

தனியார்மயம் - தாராளமயம் என்றழைக்கப்படும் மறுகாலனியாக்க கொள்கைகள் விவசாயிகளின் ரத்தத்தை எப்படி உறிஞ்சுகின்றன என்பதற்கும், இந்தக் கொள்கையின் மூலம் ஒட்டுப்பொறுக்கிகள் நேரடியாகவே எப்படி ஆதாயமடைகின்றனர் என்பதற்கும் கரும்பு விவசாயிகளின் துயரம் நேரடிச் சான்று. ஓட்டுச்சீட்டு அரசியல் மூலம் தங்களுக்குரிய நியாயத்தை விவசாயிகள் ஒருபோதும் பெற முடியாது என்பதற்கும் இது இன்னொரு சிறந்த நிரூபணம்.

● கதிர்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

கோயிலையும் அதன் சொத்துக்களையும் அவர்களிடமே ஒப்படைப்பதுதான் ஜெ. அரசின் திட்டமென்பது நடந்த விசயங்களிலிருந்து பளிச்சென்று தெரிந்தது.

சிவனடியார் ஆறுமுகசாமியின் வழக்குரைஞர் கோவிலன் பூங்குன்றன் தனது வாதுரையைத் தொடங்கியவுடன் அவரைப் பேசவேவிடாமலும், அவமதிக்கும் வகையிலும் குறுக்குக் கேள்விகள் எழுப்பிய நீதிபதிகள், ''தாங்கள் சு.சாமியின் வாதங்களில் திருப்தியடைந்து விட்டதாக'' வெளிப்படையாகவே கூறினர். மறுநாள், ''தமிழக அரசு அறநிலையத்துறை நிர்வாக அதிகாரியைத் திரும்பப்பெற்று கோயிலைத் தீட்சிதர்களிடம் ஒப்படைக்கப்போகிறது'' என்றும் ''இல்லையேல் அரசுக்கெதிராக தீர்ப்பு வழங்க இருப்பதாக நீதிபதிகள் கூறியிருப்பதாகவும்'' பத்திரிகைகளில் அறிக்கை விட்டார் சு.சாமி. இந்த கோயபல்சு பாணி செய்தியை இந்து பத்திரிகை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டது. ''புரட்சித்தலைவியின் அதிகாரத்தில் தலையிடும்'' இந்த அறிக்கை பற்றி ஜெயலலிதா அரசு வாய் திறக்கவில்லை. இது நீதிமன்ற அவமதிப்பு என்று நீதிபதிகளின் கவனத்துக்கு கொண்டு வந்தும் அவர்கள் கண்டு கொள்ளவில்லை. இது ஒரு கூட்டுச்சதி என்பது ஐயந்திரிபறத் தெளிவாகி விட்டது.



டிசம்பர் 2-ஆம் தேதியன்று சென்னை அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தின் உள்ளே நுழைந்து மறியல் போராட்டம் நடத்திய தோழர்கள்.

ஆறுமுகசாமி, வி.எம்.சவுந்தரபாண்டியன் ஆகியோரின் மூலம் இவ்வழக்கில் ஒரு எதிர் மனுதாரராகத் தலையிட்டிருந்த மனித உரிமைப் பாதுகாப்பு மையம், இதனை உடனே தமிழக மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தியது. நவம்பர் 30 அன்று ம.உ.பா. மையத்தின் சார்பில் சிதம்பரத்தில் ஆறுமுகசாமியின் உண்ணாநிலைப் போராட்டம் நடந்தது. அன்று மாலை சென்னையில் நடத்தப்பட்ட அரங்கக் கூட்டம், இவ்வழக்கின் பின்புலத்தையும் அரங்கேறிவரும் சதியையும் அம்பலமாக்கியது. அன்றே, ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில் தமிழகத்தின் பல்வேறு மாவட்ட மையங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

டிசம்பர் 2-ஆம் தேதியன்று காலை சென்னை அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தின் உள்ளே நுழைந்து மறியல் போராட்டம் நடத்திய தோழர்கள் கைது செய்யப்பட்டனர். அதே நாளில் ''தமிழ் பாடும் உரிமை நிலைக்க வேண்டுமானால், அரசின் கட்டுப்பாட்டில் கோயில் இருக்க வேண்டும்'' என்ற கோரிக்கையுடன் சிற்றம்பல மேடையையே ஒரு போராட்ட மேடையாக்கி சிவனடியார் ஆறுமுகசாமி தேவாரம் பாடினார். அவரும் அவருக்குத் துணை நின்ற வழக்குரைஞர்களும் கோயிலுக்குள்ளேயே கைது செய்யப்பட்டார்கள். தீட்சிதர்களுடன் கள்ளக்கூட்டு வைத்திருக்கும் தமிழக அரசை அம்பலப்படுத்தி சென்னை உயர்நீதிமன்ற வாயிலிலும் ம.உ.பா. மையத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பின்னர்தான் தொலைக்காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் இப்பிரச்சினை குறித்த விவாதங்கள் நடந்தன. இவ்விவாதங்களில் தீட்சிதர்களுக்கு ஆதரவாக பாரதிய ஜனதா நேரடியாகக் களம் இறங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

''மூத்த வழக்குரைஞரையே நியமிக்காமல் கோயிலைத் தீட்சிதர்களிடம் ஒப்படைக்க ஜெ.அரசு சதி செய்கிறது என்றும், டிசம்பர் 3-ஆம் தேதியன்றே வழக்கை முடித்து விடும் அபாயம் உள்ளது என்றும் நவம்பர் 28 அன்றே ம.உ.பா. மையத்தின் ஒருங்கிணைப்பாளர் ராஜு அறிக்கை வெளியிட்டார். ''சுப்ரீம் கோர்ட்டா, சு.சாமி கோர்ட்டா?'' என்று நீதிமன்ற விசாரணையின் யோக்கியதை நவம்பர் 29 அன்றே வினவு இணைய தளம் அம்பலப்படுத்தியது. இருப்பினும், டிசம்பர் 4-ஆம் தேதி ஏற்காடு இடைத்தேர்தல் முடிந்த பின்னர்தான் கருணாநிதியின் அறிக்கை வெளிவந்தது - சிதம்பரம் கோயிலில் போராட்டம் நடத்தியதும் ஆறுமுகசாமியின் சார்பில் வழக்கு நடத்துவதும் யாரென்றே தெரியாதது போன்ற ஒரு தோரணையில்!

''சிதம்பரம் கோயில் பிரச்சினையைப் பற்றி முதன்முதலில் பேசியது நாங்கள்தான்'' என்று உரிமை கொண்டாடிக் கொள்ளும் திராவிடர் கழகமும் ஜெயலலிதா அரசின் இந்த சூழ்ச்சிக்கு எதிராகப் போராட்டம் எதிலும் இறங்கவில்லை. பார்ப்பானிடமிருந்து தமிழனின் சொத்தை மீட்பதை விட, தமிழர் தலைவரின் சுயமரியாதை டிரஸ்டைக் காப்பாற்றிக் கொள்வது முக்கியமல்லவா! ஆகவே, சிதம்பரத்தில் டிசம்பர் 4-ஆம் தேதி ''மக்கள் மன்றம்'' என்ற பெயரில் பல கட்சியினரும் பங்கேற்ற ஆர்ப்பாட்டத்தில் வீர உரையாற்றித் தனது கடமையை முடித்துக் கொண்டார் கி.வீரமணி.

திராவிட இயக்க மரபைத் தூற்றுவதையும், அதனைத் தமிழினத்தின் எதிரியாகக் காட்டுவதையுமே தமது முதற்பெரும் பணியாகக் கொண்டிருக்கும் தமிழினப் பிழைப்புவாதிகளாகட்டும், நெடுமாறன், சீமான், வைகோ உள்ளிட்ட ''ஆழ்வார் பெருமக்கள்'' ஆகட்டும், எவரும் ஜெ.அரசுக்கோ தீட்சிதப் பார்ப்பனர்களுக்கோ எதிராக மூச்சுக்கூட விடவில்லை. ஜெயலலிதாவின் மீதான பயம் என்பதைக் காட்டிலும் பாரதிய ஜனதா மற்றும் பார்ப்பனக் கும்பலிடம் இவர்கள் கொண்டிருக்கும் நேசம்தான் இந்தக் கள்ள மவுனத்துக்கான காரணம்.

சிதம்பரம் கோயில் வழக்கில் வாதுரைகள் முடிந்துவிட்டன. மூத்த வழக்குரைஞர்களை அமர்த்தியும், ஒரு வழக்குரைஞர் குழுவை டெல்லிக்கு அனுப்பியும், இந்த வழக்கு தொடர்பான பணிகளைச் செம்மையாக நிறைவேற்றியிருக்கிறது மனித உரிமைப் பாதுகாப்பு மையம். தீர்ப்பு என்ன வென்பது அடுத்த மாதம் தெரிந்து விடும். சிதம்பரம் கோயில் பிரச்சினையைப் போலவே, அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் சட்டத்தையும் காவு கொடுக்கும் சூழ்ச்சியில் ஈடுபட்டிருக்கிறது இந்த அரசு. தமிழகத்தில் பார்ப்பன பாசிசத்தை நிலைநாட்டும் இம்முயற்சிகளை முறியடிப்பதும், தமிழகத்தின் சுயமரியாதைப் பாரம்பரியத்தையும், கோடிக்கணக்கான தமிழ் மக்களின் உரிமையையும் பாதுகாப்பதும் நம் கடமை.

அஜித

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14


# 37 ஆவது சென்னை புத்தகக்காட்சியில்

தொழிலாளி வர்க்கத்தின் துடிப்புடன்...
தொடரும் கீழைக்காற்று...

## கீழைக்காற்று

**10.01.2014 - 22.01.2014**


ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சி கல்லூரி மைதானம், நந்தனம், சென்னை.


வேலை நாட்கள் : பிற்பகல் 2 - இரவு 9
விடுமுறை நாட்கள் : காலை 11 - இரவு 9

















முற்போக்கு நூல்களுக்கு ஒரு முகவரி...




கீழைக்காற்று

10, அவுலியா தெரு, எல்லீசு சாலை, சென்னை - 2. ☎ : 044 - 2841 2367